# நாடக விழா மலர்

11642





தலைவர்:
**எ.என்.சட்டநாதன்**

**பம்பாய்த் தமிழ்ச் சங்கம்**
மாதுங்கா.

BALU BROS




NANUBHAI,
115. MAHATMA GANDHI ROAD :: BOMBAY-1.

OF REVIEW

PHOENIX WATCHES
BUREN




OTHER TRADEMARK
*ENICAR
*RIVARD
*SUNDIAL
*HILLMAN
*RURAL
*INVICTA

Exclusive Agents

PHOENIX WATCH CO.

HEAD OFFICE : 169, HORNBY RD., BOMBAY, 1.

BRANCH OFFICE : 156 B, HARRISON RD., CALCUTTA, 7.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!"

உயரிய தமிழ்ச் சொல்லுக்கு

உரிய கலை உருவம் தரும்

நவீன அச்சகம்

# விந்தியா அச்சகம்

★ கண் கவர் வனப்பு

★ காலத்துக்கேற்ற நவீன அமைப்பு

★ காரியத்துக்கேற்ற துரிதம்

இவ் வசதிகளைத் தரும்

பம்பாயின் முதல்தரமான தமிழ் அச்சகம்

★

**விந்தியா அச்சகம்,**

**110, பவானி சங்கர் ரோடு, பி. பி. தாதர், பம்பாய் - 28.**

★

ஆங்கில அச்சு வேலைகளும் மேற்கொள்ளப்படும்.

**For the best and cleanest**

**SOUTH INDIAN VEGETARIAN HOTEL & RESTAURANT**

*PLEASE VISIT*

# AJANTA

HIGH CLASS CATERERS & CANTEEN CONTRACTORS

9, Mangalore Street, Ballard Estate, Bombay 1.

★

23981

*TRY AJANTA'S LUNCH SERVICE*

*FOR SATISFACTION AND ECONOMY*

★

OUTDOOR MEALS SERVICE UNDERTAKEN IN FORT AREA.

"Outdoor Catering A Speciality"

"LIMITED RESIDENTIAL ACCOMMODATION NOW AVAILABLE"

Dial: **23917**



# பொருளடக்கம்

★


| | | |
|---|---|---|
| [illegible] | ... | 7 |
| வாழ்த்தொலி | ... | 9 |
| ஒரு சிறு காட்சி — டாக்டர் மு. வரதராசனர் | ... | 14 |
| முத்தமிழ் அமுதம் — வித்வான் ஆ. இ. ஜயலக்ஷ்மி | ... | 17 |
| நாடக வளர்ச்சி — இ. சந்திரசேகரன் | ... | 19 |
| கலை நோக்கு — அ. முத்துசிவன் | ... | 23 |
| கலை வாழ்க — கே. சுந்தரேசன் | ... | 27 |
| கடல் கடந்த தமிழர் — சோம. லெ. இலக்குமணச் செட்டியார் | | 29 |
| எனது நாடக நினைவுகள் — வி. மாதவம் பிள்ளை | ... | 33 |
| கிரேக்க ட்ராஜடி — ப. கோதண்டராமன் | ... | 37 |
| நாடகக் கதைச் சுருக்கங்கள் | ... | 42 |
| சித்திர மடல் | | |
| ஆண்டி மடம் — பூர்ணம் விச்வநாதன் | ... | 53 |
| தமிழர் வளர்த்த பண்பு — கி. ஆ. பெ. விசுவநாதம் | ... | 59 |
| நாடக விழா—1952 நிகழ்ச்சிகள் | ... | 65 |
| அன்னையின் வாழ்த்து | | 67 |
| தமிழ் வளர்த்த பெரியார் — குமாரி கே. வசந்தா | | 73 |
| பெண்கள் கடமை — குமாரி பி. வி. ஜானகி | ... | 77 |
| பாரதியார் — குமாரி ஆர். கமலவிஜயம் | ... | 79 |
| தமிழ்ப் பத்திரிகைகள் — எஸ். எஸ். சங்கர் | ... | 81 |
| பம்பாய்த் தமிழ்ச் சங்கம் | ... | 82 |
| விளம்பரக் கலை — பாலு சகோதரர்கள் | ... | 85 |
| குறள் ஓவியம் | ... | 89 |

THE

# HINDUSTAN

## CONSTRUCTION CO., LTD.

★

- ★ DRILLING CONTRACTORS
- ★ DIAMOND AND SHORT CORE BORINGS
- ★ DRY SAMPLE BORINGS
- ★ FOUNDATION TESTING FOR BRIDGES, DAMS AND ALL HEAVY STRUCTURES
- ★ ALSO UNDERTAKE GUNITING - BORED PILES CEMENTATION, ETC.

★

CONSTRUCTION HOUSE, BALLARD ESTATE,

**BOMBAY**

TELEGRAMS:

HINCON

PHONE :

26036

# INDEX TO ADVERTISERS.

★


| | Page No. |
|---|---|
| Acme Manufacturing Co., Ltd. | 95 |
| Ajanta Cafe. | 3 |
| American Spring & Pressing works. | 22 |
| Asian Oil & Paint Co. (India) Ltd. | 36 |
| Associated Watch Co., Ltd. | 66 |
| A. V. R. A. & Co. | 96 |
| Bhagat L. & Co | 32 |
| Bombay Potteries & Tiles Ltd. | 64 |
| Bright Bros. Ltd. | 16 |
| Central Railway. | 70 |
| Chamundi Construction Co., Ltd. | 62 |
| Chicago Telephone & Radio Co. | 56 |
| Cotton Agents Ltd. | 62 |
| Dena Bank Ltd. | 32 |
| Eastern Chemical Co., Ltd. | 76 |
| Empire of India Life Assurance Co., Ltd. | 28 |
| Express Watch Co. | 22 |
| Favre-Leuba Co., Ltd. | 8 |
| Firestone Tyre & Rubber Co. (India) Ltd. | 30 |
| Gazdar Ltd. | 99 |
| Gemini Studios. | 78 |
| Good Year Tyre & Rubber Co. (India) Ltd. | 91 |
| Hindustan Construction Co., Ltd. | 4 |
| Herman. B. R. & Mohatta (India) Ltd. | 54 |
| H. M. V. Co., Ltd. | 88 |
| Indian Bank Ltd. | 24 |
| Indian Mutual Life Association Ltd. | 20 |
| Jupiter General Insurance Co., Ltd. | 34 |
| Kalaimagal. | 90 |
| Kamala Stores. | 84 |
| Kamani Engineering Corporation Ltd. | 75 |
| Karunanithi Press. | 66 |
| Kathal Magazine. | 96 |
| Kemp & Co., Ltd. | 60 |
| Kohinoor Mills Co., Ltd. | 26 |

| | Page No. |
|---|---|
| Lalvani Bros. | 58 |
| Laxmi College of Commerce. | 92 |
| Lorenzo Watch Co. | 13 |
| Mahindra & Mahindra Ltd. | 98 |
| Metal Distributors Ltd. | 94 |
| Millars' Timber & Trading Co., Ltd. | 98 |
| Mohanlal Trikamlal & Sons. | 20 |
| National Tobacco Co. (India) Ltd. | 52 |
| New Era Textile Mills Ltd. | 54 |
| Oriental Fire & General Insurance Co., Ltd. | 36 |
| Oriental Metal Pressing Works. | 100 |
| Oriental Watch & Gramophone Co. | 26 |
| Parekh Watch Service. | 28 |
| Phoenix Watch Co., | 1 |
| Pioneer Fire & General Insurance Co., Ltd. | 60 |
| Pioneer Sports (India) Ltd. | 18 |
| Plato Fountain Pen. | 68 |
| Precision Watch Co., Ltd. | 18 |
| Premier Automobiles Ltd. | 86 |
| Ramnarain Sons Ltd. | 72 |
| R. K. Films. | 84 |
| Sharada Bhuvan. | 40 |
| Sanghvi Watch Co. | 16 |
| South Indian Flower Mart. | 92 |
| Standard Batteries Ltd. | 97 |
| Syndia Process Co. | 80 |
| Tambe B. Ltd. | 76 |
| Victor X-Ray Corporation (India) Ltd. | 88 |
| Vindhya Magazine. | 74 |
| Vindhya Press. | 2 |
| Vishnu Watch Co. | 30 |
| Water Supply Specialists Ltd. | 93 |
| Western India Match Co., Ltd. | 38 |
| Wilson Watch Co. | 24 |


★

**WRAPPER**


| | |
|---|---|
| Khatau Mills | Fourth Cover. |
| Tata Industries Ltd. | Third Cover. |
| Nanubhai Jewellers | Second Cover. |

# நமஸ்காரம்

உணர்ச்சி அகத்தினில் விளைந்திடினும் அதன் சலனம் மெய்யனைத்தும் பரவி முகத்தினிலே புன்னகை மலராக வெளிப்பட்டுவிடும். நாடக அங்கத்தை உய்விக்க எழுந்த இவ்விழாவின் உணர்வு அலைகள் முத்தமிழ் அணங்கின் இயல் முகத்திலும் பரவி இலக்கிய மலராகப் பரிணமித்து விட்டது போலும்! மலரொளியான அந்த சுந்தரப் புன்னகையிலே இலக்கியக் கர்த்தாக்களின் கலைத்திறல் பலவும் குலவுவது புலன்களை பூரிக்க வைக்கும் ஒரு அரும் பெருங்காட்சி.

அதனுள் பூரண இலக்கிய வனப்புடன் இடம் பெறும் " ஒரு சிறு காட்சி " டாக்டர் மு. வரதராசனுரின் சிந்தனைச் சிதர். காலக் கடலைக் கடந்த தமிழர்களது பண்பாட்டினை ஸ்ரீ கி. ஆ. பெ. விசுவநாதமும், நீலக் கடலைக் கடந்து வாழும் தமிழர்களது சீலத்தை ஸ்ரீ சோம. லெ. இலக்குமண செட்டியாரும் சுவைபடச் சித்திரிக்கின்றனர். பேராசிரியர் அ. முத்துசிவன், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாகிகளாக இருந்து தொண்டாற்றும் ஸ்ரீ கி. சந்திரசேகரன், ஸ்ரீ ப. கோதண்டராமன் – இவர்களது கட்டுரைகள் மலரின் ஆராய்ச்சிப் பகுதியாகத் திகழ்கின்றன. ஸ்ரீ பூர்ணம் விச்வநாதனின் நாடகம் நகைச் சுவைப் பகுதியைப் பூர்த்தி செய்கிறது.

நாடகத் துறைக்கு ஜீவனளிக்கும் வர்ணத் துகிலிகையைப் பற்றி ஓவியர் ஸ்ரீ மாதவம் பிள்ளையும், விளம்பரத் துறைக்கு வெற்றிதரும் வர்ணத் துகிலிகையைப்பற்றி ஸ்ரீ பாலு சகோதரர்களும் ரசமான கட்டுரைகள் எழுதியுள்ளனர். சங்க அங்கத்தினர்களான ஸ்ரீமதி ஆ. கி. ஜெயலக்ஷ்மி, ஸ்ரீ கே. சுந்தரேசன் – இவர்களது தமிழார்வம் கவிதை உருவில் மலரை அலங்கரிக்கின்றன.

மற்றும், இலக்கியத்துறையில் அரும்பி நிற்கும் மாணவ மாணவிகளின் கட்டுரைகள், கதைச் சுருக்கங்கள், சங்கத்தின் சேவை, சித்திர மடல் – இவ்வளவு பூக்களும் தமிழன்னையின் புன்னகையில் உதிர்கின்றன. இங்ஙனம் நகைமுகம் காட்டச்செய்த நாடகக் கலையும், கலைஞர்களும் " அன்னையின் வாழ்த்து " க்கு என்றுமே உரியவர்கள் அன்றோ ?

வாழ்த்துக்கள் வழங்கிய பிரமுகர்கள், விஷயதானம் செய்துள்ள அறிஞர்கள், பேராதரவு ஈந்த விளம்பரதார்கள், அதனை முனைந்து சேகரித்துதவிய அன்பர்கள், மலரினுள்ளே சோபிக்கும் ஓவியங்களைத் தீட்டிய ஸ்ரீ எம். பாபு, ஊக்கமுடனுழைத்த " ஸிந்தியா பிராஸஸ்" கம்பெனி நிர்வாகிகள், மேலட்டைப் படத்தை வனப்புடன் வரைந்த ஓவியர், அதனை அழகுடன் அச்சியற்றியோர், மலரை மிக விரைவாக அச்சிட்டு முடித்த கருணநிதி அச்சகத்தார் – எல்லோருக்கும் சங்கத்தின் மனமுவந்த

**நன்றி.**



*Modern Time*
*in the shadow of*
*Ancient Temples*

**FAVRE - LEUBA**

FAVRE LEUBA & COMPANY, LIMITED. • BOMBAY • CALCUTTA

Stronachs

# வாழ்த்தொலி

GOVERNOR OF BOMBAY
सत्यमेव जयते

RAJ BHAVAN,
Bombay 6,
The 5th April, 1953.

The Tamil Sangam in Bombay is active in all cultural activities that are of special interest to the Tamil speaking population of Greater Bombay. The variety and wealth of Tamil culture is ample justification for such activity. I understand that what the Sangam needs is a permanent home and that, to make the construction of one possible, artistes from South India have agreed to stage a number of plays in Bombay. I wish the Sangam and its helpers every success and may it soon have a home adequate to its needs.

G. S. BAJPAI,
Governor of Bombay.



High Court, Bombay,
22nd April, 1953.

The drama in India has made considerable strides. There is a great deal of histrionic talent in our country. That talent requires encouragement and support. The Bombay Tamil Sangam deserves our congratulations on organising this dramatic festival. It is my misfortune that I do not know Tamil but I understand that the T. K. S. Brothers Dramatic Association is one of the finest dramatic societies anywhere in the country. Even without knowing the language the people of Bombay will be able to understand what really great dramatic art can be.

The funds collected by organising this dramatic festival are to be utilised for the erection of a building for the Bombay Tamil Sangam. This Sangam is a literary and cultural society and the purpose of its existence is to let the people of Bombay know what great cultural heritage the Tamils possess. I have always taken the view that Indian culture is the synthesis of various provincial cultures that exist in our country. The richness of each provincial culture ultimately means the richness of the culture of the whole country. And when anything is done to develop Tamil culture in the long view it is intended to develop Indian culture. The Tamil Sangam needs a building as a permanent abode in which it can carry on its cultural activities. I sincerely hope that the Sangam will be able to raise large funds by organising this festival for that purpose.

M. C. CHAGLA,
Chief Justice.



# TATA INTERESTS TODAY COVER:

IRON AND STEEL * TEXTILES * HYDRO-ELECTRIC POWER * CHEMICALS * AIR TRANSPORTATION * SOAPS, GLYCERINE AND EDIBLE OILS * HOSTELS * LOCOMOTIVE AND ENGINEERING * MACHINE TOOLS * RADIOS * INSURANCE * CEMENT * INDUSTRIAL INVESTMENT * SOCIAL SERVICE * SCIENTIFIC RESEARCH

# TATA INDUSTRIES LTD.



Madras,
22nd April, 1953.

Dear Sir,

I am gratified to learn from you of the various activities of the Bombay Tamil Sangam in the city of Bombay. I am also glad to learn that you have arranged for a dramatic festival in May to raise a fund for the Sangam's premises. I hope that the festival would be very successful and would bring in plenty of money.

Undoubtedly South India has got something special to contribute towards the culture of India and it must be the endeavour of every person interested in our culture to preserve the great heritage of South India in the world of the Arts and Literature.

Once more wishing your Sangam a glorious and useful future,

Yours sincerely,
P. V. RAJAMANNAR,
(Chief Justice)

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி
அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி 15-4-53.

இனிமைப் பண்பின் உறைவிடம் இன்பத் தமிழ். காலத்தோடு படாத பழமையோடு புதுமை நலமும் பூத்துக் குலுங்கும் பெருமை நமது பைந்தமிழுக்கே உரியது.

இசையுடன் கூத்தும் நல்கி, இயலோடு உறவாடி வாழ்க்கையை வளம்படுத்தும் பெருமை வன்மைத் தமிழுக்குண்டு.

காலமும் தூரமும் பிரித்து வைத்தாலும் பைந்தமிழை மறவோம் என்று வாழ்கின்ற பம்பாய்த் தமிழ்ச் சான்றோர்களை என்னென்போம். வாழ்க அவர்களது தமிழன்பு! வாழ்க அவர்களது தமிழ்த் தொண்டு!!

தெய்வசிகாமணி.

★





*With best compliments*

*from*

# LORENZO WATCH CO.,

163, NAGDEVI CROSS LANE.

**BOMBAY 3.**

**DIRECT IMPORTERS AND WHOLESALE**

**DEALERS IN**

**HIGH GRADE WATCHES, CLOCKS**

**ALARM CLOCKS ETC.**

***For all your requirements in***
***these lines, they are***
***always at your service.***



Tel: 30239. Telg: "Ticktick"

# ஒரு சிறு காட்சி

டாக்டர் மு.வரதராசன்



திருவள்ளுவர் நாடக ஆசிரியர் என்று கூறினால், நம்ப முடியாத புதுமையாக இருக்கலாம். ஆனால், திருவள்ளுவர் அறநூல் ஆசிரியர், அரசியல் அறிஞர் என்பவை எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவர் நாடக ஆசிரியர் என்பதும். அறத்துப்பாலில் உண்மை உணர்ந்த மெய்யுணர்வாளராக விளங்கும் திருவள்ளுவர், பொருட்பாலில் அரசியல் தெளிந்த அறிஞராக விளங்கும் அவர், காமத்துப் பாலில் கலைவளம் நிறைந்த கலைஞராக விளங்குகிறார். கவிதைக் கலையும் நாடகக் கலையும் செறிந்த பகுதி காமத்துப் பால் எனலாம்.

காமத்துப் பால் இருபத்தைந்து அதிகாரங்கள் உடையது. அதில் உள்ள இருநூற்றைம்பது குறளும் காதலன் காதலி தோழி ஆகிய இவர்களின் பேச்சுக்களாக உள்ளனவே அல்லாமல், திருவள்ளுவர் நேராக நமக்குக் கூறும் அறிவுரையாகவோ அறவுரையாகவோ ஒன்றும் இல்லை. திருவள்ளுவர் நாடக ஆசிரியராகவும், காதலன் காதலி தோழி ஆகியவர்கள் நாடக மேடையில் நடிக்கும் பாத்திரங்களாகவும் விளங்கக் காண்கிறோம்.

இந்த அரிய நாடகம் 'தகையணங்குறுத்தல்' என்னும் முதல் காட்சியில் தொடங்குகின்றது; "ஊடல் உவகை" என்னும் இறுதிக் காட்சியில் முடிகின்றது. காதலன் காதலியைக் கண்டு அவளுடைய அழகை நினைந்து வருந்துவதை முதல் காட்சியில் காண்கிறோம். காதலி அன்பாக ஊடல் கொண்டிருந்தபோது அவளுடைய ஊடலில் தலைவன் இன்பம் உணர்வதையும் அந்த ஊடலைத் தீர்த்துக் கூடி மகிழ்வதையும் இறுதிக் காட்சியில் காண்கிறோம். சில காட்சிகளில் காதலனும் காதலியும் பேசுகின்றனர்; சில காட்சிகளில் காதலியும் தோழியும் பேசுகின்றனர்; வேறு சில காட்சிகளில் காதலனும் தோழியும் பேசுகின்றனர். ஒரு சில காட்சிகளில் காதலன் தனியே பேசும் மொழிகளையும் காதலி தனக்குள் பேசும் மொழிகளையும் கேட்கின்றோம்.

நாடக ஆசிரியர் திருவள்ளுவர் இத் தனி மொழிக் காட்சிகளைச் சுவைபட அமைத்திருக்கின்றார்; இந்தக்காலத்து நாடகக் கலைஞர்களும் வியந்து போற்றும் வகையில் அமைத்திருக்கின்றார்.

நாடக மேடையில் நடிக்கும் ஒருவன் தனியே தனக்குள் பேசிக்கொள்ளுவது காண்பவரின் கருத்தை அவ்வளவாக ஈர்ப்பதில்லை. அதனால், நடிப்பவன் எதிரே அவனுடைய மனச் சாட்சி நிழல் போன்ற மெல்லிய உருவம் எடுத்து நிற்பதாகக் காட்டுதல் வழக்கம். திரைப் படத்தில் இதைவிடச் சிறந்த முறையில் மனச் சாட்சியைக் காட்டும் மரபு ஏற்பட்டுள்ளது. மூன்று நான்கு வகையாக ஒருவனுடைய உள்ளத்தில் போராட்டம் எழுவதைத் திரைப் படத்தில் காட்டும்போது, அவனுடைய மூன்று நான்கு உருவங்களைக்காட்டி, அவற்றைத் தனித்தனியே, பேசச் செய்து உள்ளத்தின் போராட்டத்தை அச்சொற்களால் விளங்கச் செய்கின்றனர்.



இந்தப் புது மரபைக் கண்டு போற்றும் நாம் காமத்துப் பால் நாடகத்தில்பல குறள் மணிகளில் வள்ளுவர் இதை அமைத்

**இந்தக் காலத்து நாடகக் கலைஞர்களும் வியந்து போற்றும் வகையில் திருக்குறளின் காமத்துப் பாலில் கவிதைக் கலையும் நாடகக் கலையும் செறிந்துள்ளது. இப் பண்பை ரசமாக விளக்குகிறார், அறிஞர் மு. வ.**

துள்ளதைக் கற்று உணரும்போது, வியப்படைகிறோம். எடுத்துக் காட்டாக, ஒன்று காண்போம்.

கணவன் பெரிய கடமை ஒன்றை மேற்கொண்டு வெளி நாட்டுக்குச் சென்றிருக்கிறான். சென்றவன் பல மாதங்களாகப் பிரிந்திருக்க நேர்ந்துள்ளது. அவனுடைய வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்து மனைவி வருந்துகிறாள். ஏதேனும் தேர் ஓடும் ஒலி கேட்கும்போதெல்லாம், கணவனுடைய தேர் வரும் ஒலியோ என அவளுடைய நெஞ்சம் ஆர்வத்துடன் எதிர்நோக்க, கண்களோ இங்கும் அங்கும் நோக்கி அலைகின்றன. இப்படிச் சில நாட்களாக எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து சோர்கிறாள். ஆயினும் நெஞ்சம் அவரை நினைந்து நினைந்து ஏங்கியவாறே உள்ளது. கண்களும் அவரைத் தேடித் தேடி அலைகின்றன.

சுருங்கக் கூறினால், அவளுடைய நெஞ்சம் அவரை நாடிச் செல்கின்றது; கண்கள் அவரைக் காண அலைகின்றன. இந்த நிலையை நாடக மேடையில் எவ்வாறு புலப்படுத்துவது? நடிப்பின் மூலமாகப் புலப்படுத்தலாம். ஆனால், அது காண்போர் எல்லோர்க்கும் விளங்கும் என்று கூற முடியாது; தெளிவாக விளங்கும் என்றும் கூற முடியாது. ஆகவே, திருவள்ளுவர் நெஞ்சத்தின் ஏக்கத்தையும் கண்களின் அலைவையும் தலைவியின் சொல்லால் புலப்படுத்த முனைகின்றார்; தலைவியைப் பேச வைக்கின்றார்.

காட்சி தொடங்குகிறது. தலைவி துயர் வடிவாகக் காணப்படுகின்றாள். அவள் எதிரே அவளுடைய மனம் தனிவடிவு எடுத்து நிற்கின்றது. நிற்கின்ற மனமும் அவளை நோக்கி நிற்கவில்லை. தலைவன் இருக்கும் திசையை நோக்கியே நிற்கின்றது. தலைவியைத் திரும்பியும் பார்க்கவில்லை. அந்த நெஞ்சம் நிற்கும் நிலையிலும் அமைதியில்லை; சொல்லாமல் பிரிந்து போகின்றவரைப் போல் எங்கோ செல்லத் துணிந்து நிற்கின்றது. தன்னைப் புறக்கணித்துப் புறப்படும் நெஞ்சத்தை நோக்கித் தலைவி பேசத் தொடங்குகிறாள். அவளுடைய கண்களிலோ அமைதியில்லை. அந்தக் கண்கள் எதையோ இழந்துவிட்டுத் தேடுவோரின் கண்களைப்போல் உள்ளன. தலைவியின் முகத்தில் நிலையாக இடம் பெற்றிருந்தபோதிலும், அங்கே இருக்க விரும்பாதவைபோல் எங்கோ எதையோ நாடி அலைகின்றன. தெருவிலே சென்று விளையாடத் துடிக்கும் இரண்டு குழந்தைகளை அவற்றின் தாய் தடுத்து நிறுத்தினால், அந்தக் குழந்தைகள் தாயை என்ன பாடு படுத்துமோ அத்தகைய துடிப்பான முயற்சியை அந்தக் கண்களில் காணலாம். இந்த நிலையில் நாடக மேடையில் தோன்றும் தலைவி வாய்திறந்து பேசுகிறாள். எதிரே உரு எடுத்து நிற்கும் தன் மனத்தோடு பேசுகின்றாள். "நெஞ்சமே! நீ அவரிடம் போவதற்குத் தான் புறப்படுகிறாயா? அப்படியானால் இந்தக் கண்கள் இரண்டையும் உன்னுடன் அழைத்துக் கொண்டுபோய் அவரிடம் சேர்த்துவிடு. அவரைக் காணவேண்டும் காணவேண்டும் என்று இந்தக் கண்கள் என்னைப் பிடுங்கித் தின்கின்றன" என்கிறாள்.

> **கண்ணும் கொளச்சேறி நெஞ்சே; இவைஎன்னைத்**
> **தின்னும் அவர்க்காண லுற்று.** (திருக்குறள்–1244)

பிரிவாற்றாமையால் வருந்தித் துயருறும் ஒருத்தியின் மன நிலையையும் உடல் நிலையையும் இதைவிடச்சிறந்த முறையில் புலப்படுத்த யாரால் இயலும்! நாடகக் கலையில் தேர்ந்த கலையுள்ளம் திருவள்ளுவருக்கு அமைந்திருந்த உண்மையை இதனால் தெளியலாம்.

நாடக ஆசிரியர் மேடையில் தோன்றாமல் மறைந்து நின்ற போதிலும், அவருடைய சிறந்த பாத்திரங்களின் வாயிலாகச் சொந்த உணர்ச்சிகளும் கருத்துக்களும் வெளிப்பட்டுவிடும் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஹாம்லெத், லியர் முதலியவர்கள் வாயிலாக ஷேக்ஸ்பியர் பேசுவதாகக் கூறுவர். திருவள்ளுவரின் பற்றற்ற தன்மை, இரக்கம், தெளிவு, துன்பத்தைத் தாங்கும் தவம் முதலிய உயர்ந்த பண்புகளை நாடக மேடையில் நடிக்கும் இந்தத் தலைவியிடமும் காண்கிறோம். தான் வேறு, தன் கண்கள் வேறு, அவைகள் குழந்தைகளைப்போல் துடிக்கின்றன, தன் நெஞ்சம் தன்னைவிட்டு அவரை நாடுகின்றது, நெஞ்சையும் கண்களையும் அறிவுரையால் திருத்தத் தன்னால் முடியவில்லை, அவைகளைப் பற்றிக் கவலைப்பட்டும் பயனில்லை, நடப்பது நடக்கட்டும், சொன்னால் கேட்பதில்லை, என்ன செய்யும் பாவம் ...... இப்படி எத்தனையோ அருமையான உணர்வுகள் இந்தச் சிறு பேச்சின் அடிப்படையில் இல்லையா? அவையாவும் பண்படாத ஒருள்ளத்தில் —சாதாரணப் பெண் ஒருத்தியின் உள்ளத்தில்— பிறக்கக் கூடிய எளிய உணர்வுகள் அல்ல. திருவள்ளுவர் போன்ற உயர் நெறி பற்றிய பெண்ணின் உள்ளத்தில்தான் இத்தகைய அரிய உணர்வுகள் பிறக்க முடியும். நாடகஆசிரியரின் உள்ளம் மிக உயர்ந்த உள்ளம்! அதனால்தான் இவ்வளவு சிறந்த பண்பாடு உடைய பெண்ணைப் படைக்க அவரால் முடிந்தது. ★

*With the best compliments*

*of*

# BRIGHT BROS., LTD.,

(THE HOUSE OF THE PLASTICS)

156-A, TARDEO ROAD, BOMBAY.






# முத்தமிழ் அமுதம்

வித்வான் ஆ.கி.ஜெயலக்ஷ்மி.



இயலணங்கே! எழிலரசி! மொழிவடிவச் செல்வி!
இயல்மணமே மிதுமலர்கள் துலங்கிடும்கற் பகமே!
நயங்கொள்நவ ரஸம்பழுத்த நற்கவிதை தனிலே
நடம்புரிவாய் கவின்பெறவே! நற்கலையின் தாயே!



இசையமுதே! இறைவடிவே! ஈடிலின்பக் கலையே!
தசையுநகப் பண்,திறன்கள் திசைபுகழப் பெற்றோய்!
விடமுண்டோன் வீணைகண்ணன் வேணுவினை இயம்ப
வீற்றிருப்பாய் அரியணையில் விஞ்சையர்தம் கோவே!



நாடகமாம் கலைமயிலே! நாவலரின் தேவே
கூடமதாய்ப் பன்னலங்கள் புதுத்திடும்நல் அறிவே!
ஆடும்நட ராஜன்நடம் ஆய்ச்சியரொடு கண்ணன்
அன்பொடுசெய் தரவைஇவற் றழுதுரைப்பாண் யாரே.

உள்ளுணர்வின் பயனதுவே இயல் வடிவாய் அரும்பி
உணர்வின்வெளி யீடதுவே ஒலிப்பிழம்பாய்ப் பூத்து
அள்ளுசுவை நுண்ணசைவே கூத்துநவாப் பழுத்த
அவ்வடிவே முத்தமிழ்;அந் நல்லமுதம் வாழ்க.



# SOVEREIGN
**GUARANTEED**
## CLOCKS

MODEL NO. 109 Rs. 48/-
8 DAYS WINDING CLOCK
SIZE 14½" X 10"
THICKNESS 3¾"
TWO-TONE DIAL 7"
COLOUR ASH

SOLE AGENTS
**PRECISION WATCH CO. LTD.,**
127 ABDUL REHMAN ST. BOMBAY 3.

AAA

***REMEMBER PIONEER PRODUCES***

***Famous***

"SMASH", "STANDARD", "NARAYAN"-Regd., "GANAPATHY"-Regd.,
and "CLUB SPECIAL"

BADMINTON RACKETS

★

***For Genuine Rackets, see our Name***
***Refuse Imitations***
***Buy Direct From:***

## PIONEER SPORTS (INDIA) LTD.,
**Dhobi Talao, BOMBAY 2.**
(Opp. St. Xavier's School)

எழுதியது: கி. சந்திரசேகரன்.

# நாடக வளர்ச்சி

**லக்ஷியம் பெரிதாயும், உள்ளத்தின் உயர்வை நிலை நாட்டவுமே நாடகம் உபயோகப் படவேண்டும். நாடக ஆசிரியனின் அண்மையில் நின்று, அந்த லக்ஷியம் சிறிதும் குன்றாது பாதுகாப்பது நடிகனின் கடமை.**

**நாடகத்தின் லக்ஷணங்கள், நாடகக் கலையின் லக்ஷியம், நடிகனின் கடமை இவற்றை உயர்ந்த நோக்குடன் ஆராய்கிறார், கட்டுரை ஆசிரியர்.**

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் நாடகங்கள் இருந்த விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. காவியங்களும், அந்தாதிகளும், கோவைகளும் மலிந்து கிடந்த பிற்காலங்களிலும், நாடகமொன்றும் பெயர் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. இசை, இயல், நாடகம் என்ற மூன்று பாகுபாடுகள் கொண்டதாய் இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தவர்கள் கூறி இருப்பினும், தொன்மை வாய்ந்த நாடகம் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் தமிழகத்தில், இன்று சரியான காரணங்கள் கூறி நாடக மின்மையை விளக்குவதில்லை. ஒரு காலத்தில் நாடகங்களைக் கடல் விழுங்கியதாகவே சிலர் சமாதானம் அளிக்கின்றார்கள். மற்ற இலக்கிய வகைகளை விட்டு விட்டு நாடகங்களை மட்டுமே தனக்கு இரையாக்கிக் கொள்ளும் சூழ்ச்சி கடலுக்கு உண்டா என்றுதான் வியக்கத் தோன்றுகிறது.

ஒன்று மட்டும் நிச்சயம். நாடகப் பண்பு என்பதை நன்கு தமிழ்க் கவிஞர்கள் உணர்ந்திருப்பதை சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், முதலிய உயர்ந்த காவியங்களில் நேர்த்தியாகக் காணலாம். நாடக அமைப்பின் முழு இலக்கணமும் காவியங்களில் காணாவே தவிர நாடகப்பண்பு சிறப்பாகக் கையாளப் பட்டிருப்பதை மேலே குறித்த காவியங்களில் தெள்ளெனக் காணலாம். கவனித்தால் கவிஞனாய்ப் பிறந்த எவனும் உயர்ந்த பண்பாட்டைப் பெற்றிருப்பதாலேயே, நாடகப் பண்பின் அவசியத்தை இலக்கிய ருசிக்கு இன்றியமையாத சாதனமாக நினைப்பான் என்பது புலனாகும். இதயத்தை உலுக்கும் ஒரு சிறு சொல்லை சமயமறிந்து போடுவது நாடகப் பண்பின் எல்லையைத் தொட்ட திறமையை வெளியாக்கும். சொற்சிக்கனம் கலையில் ஒரு அபூர்வ வேகத்தைச் சில வேளைகளில் உண்டாக்குவதை ரசிகர்கள் உணர்வார்கள். ஷில்லர் என்ற ஜர்மானிய நாடகாசிரியன் வாசகர் உள்ளத்தில் பயத்தைக் கிளப்ப ஒரு பட்டணத்தையே தீக்கிரையாக்க வேண்டி நின்றான். ஆனால் ஷேக்ஸ்பியர் ஒரு சிறு கைக்குட்டையைக் கீழே நழுவ விடுவதாலேயே நம் ரத்தத்தைக் கணப் பொழுது உறைந்து விடும்படியாக்குகிறார். அதிசயமான நாடகப் பண்புக்கு இதுவும் ஒரு சான்று.

சமஸ்கிருத நாடகங்கள் பல உள்ளன. அவைகளில் முக்கியமாய் சுவை (ரஸம்) தான் பிரதானமாய்க் கவனிக்கப்படுவதால், பாத்திரங்களின் குணவித்தியாசங்கள் அவ்வளவாக நாடகத்துக்கு நாடகம் வித்தியாசப் படுவதில்லை. குணசித்திரம் ரஸத்துக்கு ஒரு அங்கமாக வேண்டுமானால் அமையுமே அல்லாது, அதுவே நாடகத்தின் மேன்மைக்கு முக்கிய இடம் பெறாது. ரஸம்தான் எல்லாவற்றையும் விட தூக்கி நிற்கக்கூடியது என்பது சமஸ்கிருத அலங்கார சாஸ்திரக்காரர்களின் முடிவான கருத்து. அதைப் பற்றி நன்கு ஆராய்வதும் நிச்சயம் பயன் தரக்கூடியது.

தற்காலம் தமிழில் நாடகங்கள் எழுதப்பட்டு வருகின்றன. மனோன்மணீயம் எழுதிய சுந்தரம் பிள்ளை மேடையில் நடித்துக் காட்டும் ரீதியில் தமது நாடகத்தை அமைக்கவில்லை. பிறகு வந்த பம்மல் ஸ்ரீ சம்பந்த முதலியார், நாடக நூல்கள் பல எழுதி, தாமும் அவைகளில் ஒரு பாத்திரமாய் நடித்து இன்று சுமார் 79 நாடகங்களை இயற்றிய பெருமையை அடைந்துள்ளார். ஆங்கிலம், ஸம்ஸ்




For accurate and quality Wall Clocks, insist on

# MIDWEST

INDIAN MADE

## WALL CLOCKS.

*Distributors :*

1. M/s. MOHANLAL, TRIKAMLAL & SONS,
88A, 90, Nagdevi Cross Lane,
**BOMBAY 3.**

2. M/s. CHOONILAL CHHAGANLAL,
119, Abdul Rehman St.,
**BOMBAY 3.**

3. M/s. DAYABHAI & Co.,
31, Abdul Rehman St.,
**BOMBAY 3.**

**Catalogues will be supplied free on request.**

முன்னேற்றப் பாதையில் மேலும் ஒரு படி.

# இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிட்.,

தலைமை ஆபீஸ் :

(10, மவுண்ட் ரோட், மதராஸ் - 2.)

*31—12—1950 தேதியுடன் முடிவடைந்த மூன்று வருட காலத்திற்கு எமது ஆக்சுவரியால் நடத்தப்பட்ட சமீபத்திய மதிப்பீட்டில் மிக திருப்திகரமான புள்ளி விவரங்கள் தெரிய வருகின்றன.*

*வட்டி விகிதம், மரண விகிதம் ஒவ்வொரு அம்சத்திலும் கடின முறையில் மதிப்பிட்ட போதிலும் ஐந்து லக்ஷம் ரூபாய்க்கு மேலாக உபரி காணப்படுவதால், எமது ஆக்சுவரி, லாபத்துடன் கூடிய பாலிஸிகளுக்கு பிரதி ரூ. 1000-க்கும், பிரஸ்தாப மூன்று வருட காலத்திற்கு ரூ. 33 விதம் போனஸ் வழங்கும்படி, சிபார்சு செய்திருக்கிறார்.*

பரஸ்பர உதவிச் சங்கமாகிய *நமது அஸோஸியேஷனில் குறைந்த பிரீமியம் விகிதங்களே வசூலிக்கப்பட்டு வந்துங்கூட இவ்விதம் திருப்திகரமான வியாபாரம் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.*

உயர்ந்த மதிப்பீடு ! குறைந்த பிரீமியம் !!

உமது ஆயுள் அஷ்யூரன்ஸிற்கு மிக உகந்தது.

*விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும் :*

ஸ்ரீ எல். பி. கல்யாணம்,

*ஆர்கனைஸிங் செக்ரடரி.*

## இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்,

பம்பாய் ஆபீஸ்:

(111, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்.)

கிருதம், தமிழ்-இம்மூன்றிலும் உள்ள இலக்கியங்களின் தொடர்பால் புதிய புதிய நாடகங்களை சம்பந்த முதலியார் உண்டாக்கினர். நாடகங்களில் பாத்திரங்களின் குணப்பெருக்கை பகுத்தறிவுடன் வகுத்து, நாடகம் பார்ப்பவர்களின் இதயம் சலிப்பெய்தாத விதம் காட்சிக் கட்டுக்கோப்பையும் திறம்படச் செய்திருக்கிறார். ஆனாலும், அவர் நாடகங்கள் முழுவதும் கவிதை வரம் பெற்றவையல்ல. ஓரளவு இலக்கியப் பண்புகள் பூண்டவை என மட்டுமே கூறலாம்.

சமீபத்தில் தமிழ் நாட்டின் மறு மலர்ச்சியின் சின்னமாய், நாடக மேடையும் உயிர் பெறப் பாடு பட்டு வருகிறது. நாடகம் நடிப்பதில் திறமையுள்ளவர்கள் பலர் ஏற்பட்டு விட்டார்கள். அதிலும் ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள், இயன்ற அளவு ரஸக்குறைவு தட்டாமல் அமைந்துள்ள நாடகங்களைப் பொறுக்கி, தங்கள் நடிப்புத் திறமை ஒன்றாலேயே ஒருவாறு நாடகக் கலையையும் பாதுகாத்து வருகிறார்கள்.

அவ்வளவே நாடகத்தின் தற்சமயச் செழிப்பைப் பற்றிக் கூற இயலும். சமூகத்தைப் படம் பிடித்து விடுவது ஒன்றே நாடக மேடையின் வளர்ச்சிக் குறியாகி விடாது. மனிதனை மேம்படுத்தும் வழிகளை எடுத்துரைப்பதே நாடகத்தின் முக்கிய நோக்கமாயினும், புகைப்படமாக மட்டும் மேடையின் மேல் காட்சிகளும், கதையும் தொடர்ந்து செல்வது மட்டும் போதாது. லட்சியம் பெரிதாகவும், உள்ளத்தின் உயர்வை நிலை நாட்டவுமே நாடகம் உபயோகப்படவேண்டும். இன்று சமூகம் விரும்புவது ஒன்று, நாளை விரும்புவது வேறொன்று என்பதாலேயே, சமூகத்தை அப்படியே மேடையின் மேல் படக்காட்சி போல் ஒன்று விடாமல் காட்டி விடுவது சலிப்பைச் சீக்கிரத்தில் விளைவிக்கும். எதனால் அன்று கம்பர் எழுதிய காவியத்தில் இன்றும் திளைக்கின்றோம்? எதனால் அன்று அவர் அருமையாய்ப் புகுத்திய நாடகப்பண்பை இன்றும் ரசிக்கிறோம்? கவனித்தால், அவைகளில் அழிவற்ற தன்மை ஒன்று ஊடுருவி நிற்பது தான் காரணம்.

கடைசியில், காவியமும் நாடகமும் நம் உள்ளத்தில் சாந்தியை நிலவச் செய்வதையே முக்கிய நோக்கமாய் வைத்திருத்தல் அவசியமும் கூட. யோசித்துப் பார்த்தால் இதன் உட்கருத்து விளங்கும். வாழ்க்கையை மனிதன் வெறுக்காதிருப்பதற்குஇலக்கியம் ஒரு உயர்ந்த சாதனமாம். அதிலும், நாடகம் கண்ணெதிரே எல்லாவற்றையும் காட்டுவதால் பெருத்த கிளர்ச்சியை உள்ளத்தில் உண்டாக்கவல்லது. எப்பொழுது இவ்வளவு சக்தி வாய்ந்ததாக நாடகம் ஏற்பட்டு விட்டதோ அதன் லட்சியத்தைச் சிறிதும் குறையாது பாதுகாப்பது நடிகர்களின் கடமை. நாடக ஆசிரியன் ஒரு சமயம் தவறினாலும், நாடகம் நடிக்கும் திறமைசாலிக்கு நாடக லட்சியம் குன்றுவது புலனாகாதிருக்காது. கண், காது இரண்டையும் ஜாக்கிரதையாக அவன் மட்டும் உபயோகித்தானானால், தனது பொறுப்பைச் சாமான்யமாகக் கருத இடமிருக்காது. அவன் நடித்துக் காட்டும் பணியை மட்டும் மேற்கொள்வது போதாது. நாடகாசிரியனையும் தூண்டி, சரியான முறையில் நாடகத்தைத் தயாரித்து, தன்னுடன் ஒத்துழைக்கும்படியும் செய்யவேண்டும். எழுத்தாளனுடைய சுயேச்சையைக் கெடுக்காமல் பாதுகாப்பது தமது முதற் கடமை என்பதில் சந்தேகமில்லை. கலைஞன் நாடகாசிரியனின் அண்மையிலேயே நின்று, அவனுடைய திறமையையும் ஒரு ஸஹிருதயனைப் போல் அவ்வப்பொழுது பரிசீலனை செய்து வந்தால், தனக்கும் பயனை விளைவித்துக் கொள்ளலாம்; நாடகாசிரியனுகுமே ஓரளவு தன்னைச் சோதனைக் கருவியாகவும் செய்து கொள்ளலாம்.

இன்று நாடகமேடை அபிவிருத்தி அடைவதும், நடிகர்களைக் கொண்டே தான் என்று தெளிவாய்த் தெரிந்து விட்டது. இலக்கியம் கசியும் நாடகம் ஒன்று உருவாக்கப்பட்டால், நடிகர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்? இவ்வுலகத்தையும் அமர பூமியாக்க வல்லவர் அவர்களே அன்றோ!

★

இங்கிலாந்தின் மாதா கோவில்களைப் போன்று,
நாடக அரங்கங்கள் மிக மிக முக்கியமானவை.

— பெர்னட் ஷா

*Be sure of getting the right type of Watches*
*Clocks or Alarm time-pieces*

**EXPRESS PRIMA, EXPRESS & PREFECT**

*or*

*any other choice variety in most*
*up-to-date and noval designs.*

*For detailed information*
*write to or visit*

# EXPRESS WATCH COMPANY,

78, ABDUL REHMAN STREET,

**BOMBAY 3.**

Phone : 26438 Grams: PRIMEWATCH





EQUIPMENTS FOR INSECTICIDE, SPRAYING ON CROPS, FOOD FOLIAGE, ANTI-MALARIAL AND ANTI-LOCUST WORK. CHEAP AND DURABLE.

**'GATOR'**

Sprayer fixed on board weighs 24 lbs.



Two way attachments,
Spray nozzle and Hose of required length.



**'SIKAR'**

Knapsack sprayer with automatic agitator weighs 15 lbs.

Tank $3\frac{1}{2}$ Gal. Capacity. Overshoulder action. Consists stopcock, Extension rod. cone nozzle and 42'' hose.

Enquire: **AMERICAN SPRING AND PRESSING WORKS,**

Santa Cruz, BOMBAY 23.



# கலை நோக்கு

ஆ. முத்துசிவன்.

ஓங்கி உணரும் உணர்ச்சியின் பயனாகவே கலை பிறக்கிறது. இரும்பைக் காய்ச்சுகிறோம். சூடு ஏற ஏற இரும்பு செந்நிறம் அடைகின்றது. மேலும் மேலும் சூடு ஏற ஏற, தன்னால் கொள்ளும் அளவைத் தன்பால் இருத்திக் கொண்டு மீதமுள்ள உஷ்ணத்தை எல்லாம் ஒளியாகக் கக்கி விடுகின்றது. இரும்பு செய்கின்ற வேலையைத்தான் கலைஞனும் செய்கின்றான். ஏதோ ஒன்றை முன்னிட்டு அவனுடைய இதயத்தில் உணர்ச்சி பொங்குகின்றது. ஓங்கி உலகளக்கும் போக்கில் பொங்கிப் பரவும் உணர்ச்சிப் பெருக்கானது எதை முன்னிட்டுப் பொங்கிற்றோ அதை அனுபவிக்க வேண்டிய அளவிற்கும் அதிகமாகப் பொங்கவே, அவ்வுணர்ச்சிப் பெருக்கானது பொருளின்பால் கற்பிதமான பல அருமைகளை யெல்லாம் பெய்து பெய்து அத்தனையும் இருப்பதாகக் கண்டு மகிழ்கிறது.

கலைஞனுடைய அனுபவம் இம்மாதிரிதான் என்பதை வேர்ட்ஸ் வொர்த் என்ற ஆங்கிலக் கவிஞன் தெளிவாக எடுத்துரைக்கிறான்.

ஒரு பெண்ணைப் பார்த்து அவன் பின் வருமாறு கூறுகிறான். "பெண்ணே, நீ அழகி. சிற்சில வேளைகளில் கற்பனையாகக் காணும் அழகுகளை எல்லாம் உன்பால் பெய்து அத்தனையும் இருப்பதாக எண்ணி நான் மகிழ்வதுண்டு என்று சொன்னால், நீ நான் சொன்னதை வெறுத்து விடாதே" என்றமைகிறது, வேர்ட்ஸ் வொர்த்தின் கூற்று.

கலை வெளியீடு பற்றிய அடிப்படை உண்மை இதன் மூலம் நமக்கு நன்றாகப் புலப்படுகிறது. நம்முடைய பார்வைக்கும் கலைஞனுடைய பார்வைக்கும் நல்ல வேறுபாடு உண்டு.

நம்முடைய பார்வை வெறும் பார்வை. கலைஞனுடைய பார்வை கலைப்பார்வை. நம்முடைய பார்வை பழக்கம் என்ற தடத்தில் ஊர்ந்து செல்லும். கலைஞனுடைய பார்வை ரஸம் என்னும் பரப்பிலே பாய்ந்து செல்லும். நமக்குப் பொருள் எதுவும் மொட்டைப் பொருள். அவனுக்குப் பொருள் எதுவும் பாவனையின்

**வாழ்க்கையில் காதல், வீரம் போன்ற உணர்ச்சிகள் மனித உள்ளத்தைத் திருப்தி செய்யும் அளவுக்குப் பூரண உருவம் பெறவில்லை. இந்தக் குறையைப் பூர்த்தி செய்யும் முறையில் ஒரு கலைஞன் ஆக்கும் சிருஷ்டியில் உணர்ச்சிகள் லட்சிய வடிவில் அமைந்து நமது புலன்களைக் கவர்ந்து, வாழ்க்கையைப் பண்படுத்துகின்றன.**

MODEL No. 280 All proof 8 3/4" 17 Jewels Glucidor Balance Nivarox hair spring. White dials gilt raised figures. (i) Full Arabic and Radium dots (ii) Semi Index and radium dots. All Steel Case. Rs. 158/-.

"Bentex"



# WILSON WATCH Co.

**144, Hornby Road, Bombay 1.**

Telephone: 24033 Telegram: WILSONTIME

# INDIAN BANK LIMITED

(Estd. 1907)

HEAD OFFICE: **MADRAS.**

| | | | |
|---|---|---|---|
| AUTHORISED CAPITAL | - | Rs. | 1,00,00,000 |
| SUBSCRIBED CAPITAL | - | " | 72,00,000 |
| PAID UP CAPITAL | - | " | 55,40,000 |
| RESERVE AND OTHER FUNDS | - | " | 73,50,000 |
| DEPOSITS AS ON 31-12-52 | - | " | 19,29,16,713 |

Net work of Branches all over South India and New Delhi.

OVERSEAS BRANCHES:

1. SINGAPORE 2. PENANG 3. KUALA LUMPUR 4. MALACCA & 5. COLOMBO.

Bombay Offices: 1. **Sir Pherozeshah Mehta Road, Fort.**

Matunga: 2. **Lakhamsey Napoo Road, G. I. P. Matunga.**

Mandvi: 3. **281 / 7, Narsi Natha Street.**

*Safe Deposit lockers are available for rent at our Bombay Fort Office on favourable terms which can be had on application. Fixed Deposits for periods of 3 months to one year received on attractive terms.*

S. K. IYENGAR,
Agent.

N. GOPALA IYER,
Secretary.

கொள்கலம். நாம் உணர்வதும் காணி அளவு. உணர்த்துவதும் காணி அளவு. அவன் உணருவதும் கோடி. உணர்த்துவதும் கோடான கோடி. நாம் காணத் தவிப்போம். அவன் கண்டு திளைப்பான். நாம் அன்னத்தை அன்னமாகவே பார்ப்போம். அவன் அதன்பால் அணியிழையார் நடை அழகைப் பார்ப்பான். நாம் மேகத்தை மேகமாகவே பார்ப்போம். அவன் அதன்பால் மெல்லியலார் குழலழகைப் பார்ப்பான். நாம் மானை மானாகவே பார்ப்போம். அவன் அதன்பால் மடவார்தம் கண்ணழகைப் பார்ப்பான். நாம் சொல்லுக்குப் பொருளைத் தேடுவோம். அவனோ பொருளுக்குச் சொல்லை நாடுவான். சொல்லைத் தேடி நாம் ஓடுவோம். அவனைத் தேடிச் சொல் ஓடிவரும். ஏதேனும் ஒன்றை முன்னிட்டு நமக்கும் உணர்ச்சி தோன்றும். அவனுக்கும் உணர்ச்சி தோன்றும். எனினும் அளவிலும் அழுத்தத்திலும் எவ்வளவோ வேறுபாடிருக்கும். நம்மால் எண்ணிக் கொடுக்கவே முடிகிறது. அவனால் அள்ளி வழங்க முடிகிறது. நாம் பற்றிப் பற்றி ஏறுவோம். அவனோ பாய்ந்து பாய்ந்து பற்றுவான். கலை வெளியீட்டின் மூலம் நாம் நம்மையே கண்டு கொள்கிறோம். இந்த இடத்தில் நம்மை என்ற பதத்தை நாம் பரந்த முறையில் பொருள் செய்து கொள்ள வேண்டும்.



நமக்கு நம்மிடத்திலே இருக்கிற ஈடுபாடு அதிகம். பார்க்கர் பேனா ஒன்று நமக்குக் கிடைக்கிறதாக வைத்துக் கொள்வோம். கிடைத்ததும் நம்மைப் படைத்த கடவுளின் பெயரை எழுதுவோமா? மாட்டோம். இந்த உலகத்தில் நம்மை ஊனுடம்புடன் கொண்டு வந்து விட்ட பெற்றோர்களின் பெயர்களை எழுதுவோமா? மாட்டோம். அழகாகக் கையெழுத்திடும்படி கற்பித்துத் தந்த ஆசிரியன் பெயரை எழுதுவோமா? அதுவும் மாட்டோம். நம்முடைய பெயரையே பெரும்பாலும் எழுதுவோம். ஏன் அப்படி என்றால், நமக்கு நம்மீது அத்தனை ஆசை. இன்னும் காதல் நாடகத்திற்கோ, சோக நாடகத்திற்கோ செல்வதாக வைத்துக் கொள்வோம். நாடகத்தில் நடைபெறும் காதல் நிகழ்ச்சிகள், சோக நிகழ்ச்சிகள் முதலியவற்றை எட்டு வயது உடைய பையனும் முப்பத்தைந்து வயது உடைய ஒருவனும் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். பையன் அவ்வளவு தூரம் ஈடுபடமாட்டான். ஏனென்றால் காதல், சோகம் போன்ற சுவைகளை அவன் இன்னும் அனுபவிக்க வில்லை. முப்பத்தைந்து வயதுடையவன் நன்றாக அனுபவிப்பான். அவன் ஏன் அனுபவிக்கிறான் என்றால், அந்தச் சுவைகளை யெல்லாம் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறான். வாழ்க்கையில் அனுபவித்த சுவைகளை அங்கு ஏன் அனுபவிக்கிறான் என்றால், வாழ்க்கையில் உள்ளது குறையுடையது, அங்கே உள்ளது நிறையுடையது. தன்னிடம் குறையுடன் இருக்கும் ஒன்றையே அங்கு நிறைந்த முறையில் காணும் வாய்ப்புக் கிடைப்பதால் ஆர்வத்துடன் காணுகிறான். அங்கு அவன் காண்பது தன்பால் அமைந்துள்ள ஒன்றின் வீரிய வடிவத்தையே. ஆகவே தன்னையே காணுகிறான். தன்னை எப்படிக் காணுகிறான் என்றால் காணுகிற ரூபத்தில் அல்லாமல் காட்டுகிற ரூபத்தில் காணுகிறான்.

நிஜ வாழ்க்கையில் கோவலனைப் போன்று ஒருவன் குன்றனைய செல்வத்தைத் தொலைத்துவிட்டு வீட்டிற்கு வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய மனைவி அவனை எப்படி வரவேற்பாள் என்பதைச் சொல்லவே வேண்டாம். அதே தம்பதிகள் டி. கே. எஸ். சகோதரர்கள் நடத்தும் ‘கண்ணகி’ நாடகத்தைச் சென்று பார்வையிடுவதாக வைத்துக் கொள்வோம். செல்வம் இழந்த நிலையில் வீடு திரும்பும் கோவலனைக் கண்ணகி வரவேற்கும் கட்டம் வருகிறது. “ஐயோ பாவம், இன்னும் மாதவிக்குக் கொடுக்கப் பணமில்லை போலும். ஆகையினால் தான் இம்மாதிரி கவலை தோய்ந்த முகத்துடன் வருகிறாரோ” என்று எண்ணி “சிலம்புள கொள்மின்” என்று கண்ணகி தன்னிடமுள்ள இரு சிலம்புகளையும் கொடுக்க முன்வருகிறாள். இந்தக் கட்டத்தில் புருஷன் மனைவியின் பக்கம் திரும்புகிறான். மனைவி வேறு பக்கமாகத் திரும்பிக் கொள்கிறாள்.

நம்முடைய வாழ்க்கை குறையுடைய வாழ்க்கை. நம்முடைய வாழ்க்கையில் காதல், வீரம் போன்ற சுவைகளை எத்தனை அளவுக்குத் தேவைப்படுமோ அத்தனை அளவுக்கு விருத்தி செய்து கொள்கிறோம். ஆனால் கலை வடிவில் வெளிப்படும் வாழ்க்கை நிறையுடைய வாழ்க்கை. அதில் தோன்றும் காதல், வீரம் போன்ற சுவைகள் லக்ஷிய வடிவமடைந்த சுவைகள். அவைகளோடு பழகப் பழக நம்முடைய பார்வை விரிவடையும், மனம் விரிவடையும், பண்பாடு உருவாகும். ★

*FOR*

**GRAMOPHONES & RECORDS**

**RADIOS & RADIOGRAMS**

**WATCHES & CLOCKS**

"HIS MASTER'S VOICE"
*The Hallmark of Quality*

ELECTRICAL APPLIANCES
AND
GUARANTEED SERVICE

Columbia

*CONTACT*

# THE ORIENTAL WATCH & GRAMOPHONE CO.

(PROPER HOUSE FOR THE CHOICIEST SOUTH INDIAN RECORDS)

218 E, TULSI PIPE ROAD, OPP. DADAR, W. RLY. STATION

**BOMBAY 28.**

Tel: No. 62039.

*With compliments*

*of*

# KOHINOOR MILLS CO. LTD.

**BOMBAY**

***Agents:***

KILLICK INDUSTRIES LTD.

BOMBAY




# கலை வாழ்க

கே. சுந்தரேசன்

அரசியல் ஆத்ம ஞானம்
அறநெறி வளர்க்கும் பண்பும்
திரனுறச் செயல்க ளாற்றித்
தீரராய் விளங்கும் தன்மை
பிறபல குணங்க ளெல்லாம்
பெற்றுயர் வாழ்க்கை தன்னை
அரங்கினி லாடிக் காட்டும்
அருங்கலை வாழி! வாழி!!

இயலிசை தமைஇ ணைத்தே
இனியநாட் டியமும் கூட்டி
மயல்தரும் ஓவி யங்கள்
மாண்புற எழுதிக் காட்டி
நயம்பட அரங்கி லேறி
நடிப்பெனும் கலைவ ளர்க்க
அயர்வுறு துழைப்ப தான
அருங்கலை வல்லார் வாழி!

உலகிடை நிலவு கின்ற
உயர்வுடை மொழிகள் தம்முள்
தலைமைசால் மொழிய தென்னும்
தனிப்பெரும் புகழே தாங்கிப்
புலமையில் முதுமை கொண்ட
பொற்புடை அறிவோர் கண்ட
பலகலை நிறைந்த தெங்கள்
பைந்தமிழ் வாழி! வாழி!!

56 *Years of Service*

The Strong Financial
Position of the Company,
the Moderate Rates of Premiums
and the Enhanced Bonuses
declared in the Valuation as at
31st December 1951 make the
EMPIRE the Company of Choice
to the discriminating Insuring
Public.

**Total Assets exceed Rs. 11,00,00,000**

★

*Let the EMPIRE help you to solve your Life Insurance Needs*

★

Administrator: Dewan Bahadur R. VARADACHARI

★

THE EMPIRE OF INDIA
LIFE ASSURANCE COMPANY, LIMITED

*Head Office*: Empire House, Hornby Road, BOMBAY

*BRANCHES AT ALL IMPORTANT CITIES IN INDIA*



Mondia

*With Compliments from*

PAREKH WATCH SERVICE

375-77, SANDHURST ROAD,

BOMBAY 4.



# கடல் கடந்த தமிழர்கள்

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்.

இந்தியாவுக்கு வெளியே பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வேறுபட்ட சூழ்நிலைகளில், பல வகையான அரசியல் முறைகளுக்குட்பட்டு அந்தந்த நாடுகளின் குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும், தாய்நாட்டில் வாழும் நமக்கும் அடிப்படையான உறவு கலை உறவுதான். பிரிட்டிஷ் மக்களுக்கும், கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் வாழும் ஆங்கிலேயருக்கும் உள்ள உறவு நமக்கும் கடல் கடந்த தமிழருக்கும் இருந்து வருகிறது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், கடல் கடந்த தமிழர்களுடைய கலை, நாகரீகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகிய யாவும் தமிழ் நாட்டின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்டன.

'திரை கடலோடியும் திரவியம் தேடு'வது, தமிழ் மக்களின் இயல்பு. பல நாடுகளோடு-எகிப்து முதலிய நெடுந் தொலைவிலுள்ள நாடுகளுடனும்-பண்டைத் தமிழர் வாணிபம் செய்து வந்திருப்பதைப் பட்டினப்பாலை முதலிய இலக்கியங்களின் வாயிலாக அறிகிறோம். இவ்வாறு வாணிபத்திற்காகக் கடல் கடந்து சென்ற தமிழர் பலர் அந்த நாடுகளிலேயே தொடர்ந்து வாழ்வாராயினர். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோது, அங்கு அரசாங்க அலுவல்களைப் பார்க்கவும், ரயில் பாதைகளை அமைக்கவும் பெரும்பாலும் தமிழர்களையே அழைத்துச் சென்றனர். இதைப் போலவே, பிஜித் தீவில் சர்க்கரை ஆலைகளில் வேலை பார்க்கவும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சென்றார்கள். மலேயாவிலும் இலங்கையிலும் ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் ஏற்படுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, மேற்குக் கரைப் பகுதியிலும் நீலகிரியிலும் இத் தொழில்கள் தொடங்கி விட்டதால், அவற்றில் ஓரளவு பயிற்சி பெற்றிருந்த தமிழ்த் தொழிலாளரையே பிரிட்டிஷ் அரசியலார் அந்த நாடுகளுக்கு அனுப்புவாராயினர்.

மேற்கூறியவாறு சிறு வணிகராகவும், தொழிலாளராகவும் இருந்து வரும் தமிழர்களில் 100 க்கு 90 பேர் அந்தந்த நாடுகளிலேயே குடும்பத்தோடு வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டுக்கு வந்ததில்லை. ஆனால் வாழ்க்கையில் ஒரு முறையாவது தமிழ் நாட்டுக்கு வந்து போக வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டு. கடல் கடந்த தமிழர்களுக்கு மொழிப் பற்று மிகுதியாக உண்டு; அவர்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக வேறு மொழிகளைக் கற்ற போதிலும், மனத் திருப்திக்காகவும் தாய் நாட்டோடு இருந்து வரும் உறவு அறுந்து விடாமல் இருப்பதற்காகவும், தமிழ் மொழியைப் படித்து வருகிறார்கள்; சிறு சிறு கூட்டங்கள் உள்ள இடங்களிலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அமைத்துள்ளனர்.

தாய் நாட்டிலுள்ளவர்களை விட, கடல் கடந்த தமிழர்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால், தமிழில் வெளிவரும் புதிய நூல்களை அவர்களே மிகுதியாக வாங்கி வருகிறார்கள். வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகங்களில், தமிழ் நூல்கள் நூல் நிலையங்களில்

**கடல் கடந்து வாழும் தமிழர் எப்பகுதியில் வசித்தாலும் தாய்நாட்டுப் பண்புகள் செறிந்து வாழ்க்கை நடத்துவர். தாய் மொழியை மறக்கவே மாட்டார்கள்.**



# 20 ANNAS TO THE RUPEE

When you buy tyres, buy Firestone and get twenty annas for every rupee you pay. This extra value comes from the longer mileage built into Firestone tyres by the famous and exclusive Gum-dipping process. Gum-dipping knits fabric to rubber to give added blow-out protection and longer mileage.




*THE ONLY GUM-DIPPED TYRE*

**Firestone**

THE FIRESTONE TYRE & RUBBER CO. OF INDIA LTD.




# VISHNU WATCH CO.,

*Direct Importers of:*

**WATCHES, CLOCKS, TIMEPIECES**

**And**

**LEATHER STRAPS.**

★

131, FORT STREET,
BOMBAY 1.

வைக்கப்படுவதில்லை என்ற குறையையும் பல இடங்களில் தமிழர்கள் என்னிடம் கூறி இருக்கின்றனர்.

தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றையும்—நாள் இதழ்கள், வார வெளியீடுகள், மாத சஞ்சிகைகள் —கடல் கடந்த தமிழர்கள் நடத்தி வருகின்றனர். இவை, சிறப்பான முறையில் வெளி வராவிட்டாலும் பதினாயிரக்கணக்கில் விற்பனையாவதிலிருந்து அவற்றை வாங்கும் மக்களின் தமிழார்வம் தெளிவாகத் தெரிகிறது. கடல் கடந்த தமிழர்களுடைய உடல் எங்கிருந்தாலும் சரி; அவர்களுடைய உயிர் தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. இல்லாவிட்டால், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளை 10, 15 நாட்களுக்குப் பிறகும் ஒரு பத்திகூட விடாமல் படிப்பார்களா? தாய் நாட்டிலிருந்து வரும் கப்பல்களை ஆவலோடு எதிர்பார்ப்பதும் அவர்களுடைய இயல்பு. தமிழ் அறிஞர்களை வரவேற்பதிலும், அவர்களுக்கு விருந்து கொடுப்பதிலும் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தமிழ்ப் பத்திரிகைகளில் மலேயாக் கடிதம், இலங்கைக் கடிதம் முதலியவை வெளிவருவதையும் அவர்கள் மிகவும் வரவேற்கிறார்கள். தாம் வாழும் நாடுகளில் இந்தியாவைப் பற்றிய செய்திகள் மிகுதியாக வெளிவருவதற்கும், இந்தியாவோடு வியாபாரம் பெருகுவதற்கும் அவர்கள் பெரிதும் உதவி செய்து வருகிறார்கள். சென்ற ஆண்டில், தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தமிழ் விழாவை இலங்கையில் நடத்தினார்கள். வருகிற ஆண்டுகளில், மலேயாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் தமிழ் விழாவை நடத்த வேண்டுமென்று அங்கு வாழும் தமிழர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் சேர்க்கப்படும் பொது நிதிகள் எல்லாவற்றுக்கும் கடல்கடந்த தமிழர்கள் தாராளமாக உதவி செய்திருக்கிறார்கள். நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் விடுதலை இயக்கத்திற்கு 20 கோடி ரூபாய் பொருளுதவி செய்து, பல்லாயிரம் வீரர்களைக் கொடுத்த பெருமை கடல்கடந்த தமிழர்களுக்கு உண்டு. ஐந்து மாதங்களுக்கு முன் தஞ்சையில் பெரும் புயல் காற்றடித்துச் சேதம் விளைந்தபோது, உதவி நிதி திரட்டிக் கடல் கடந்த தமிழர்கள் தாய் நாட்டிலுள்ள நம்மீது அவர்களுக்கு உள்ள அன்பைத் தெரிவித்தனர்.

இருவகைத் தமிழர்களுக்குள்ளும் கலை உறவை மேலும் மேலும் உறுதிப்படுத்துகின்ற பணியில், தமிழ்த் திரைப்படங்கள் குறிப்பிடத் தக்கவகையில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் ஆதரவு மிகுதி. அடுத்தபடியாக, இப்பணியில் உதவும் நிலையம், இந்திய வானொலி. புது டில்லியிலிருந்து வெளிநாடுகளுக்காக ஒலி பரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. திருச்சி, சென்னை வானொலி நிலையங்களின் நிகழ்ச்சிகள் தென் ஆப்பிரிக்கா, பிஜி, மரீசியஸ், இந்தோனேசியா, மலேயா ஆகிய நாடுகளிலும் கேட்கும்படியாக அந்த நிலையங்களில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட வேண்டும்.

கலையின் சிறந்த உறுப்புகளுள் ஒன்று, நாம் உடுத்தும் உடை எனலாம். தமிழ்ப் பெண்கள் தாங்கள் சென்றவிடமெல்லாம் சேலை உடுத்தும் பழக்கத்தை பரப்பி வருகின்றனர். விருந்தினரை பூரண கும்பம், குத்துவிளக்கு முதலியவற்றோடு வரவேற்கும் வழக்கம் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்களிடம் இன்றளவும் நின்று நிலவி வருகிறது. திருக்கோணமலைப் பகுதியில் வாழும் தமிழ்ப் பெண்கள் நாட்டுப் பாடல்கள் பலவற்றை இன்னும் போற்றி வருகிறார்கள். மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் முஸ்லிம்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல் ஒன்றை மட்டும் இங்கு தருவோம். உணர்ச்சி வயப்பட்ட பெண் தன் தோழியிடம் சொல்வது இப்பாடல் :—

**ஒய்யார நடையழகன்**
**ஒருவருக்கும் சொல்லாமல்**
**நையாமல் போனார்**
**நைந்ததடி என் மனது.**

இந்தோனேசியாவில் தமிழர்களுக்கே உரிய பல கலைகள் இன்னும் வளர்ந்து வருகின்றன. தாயம் போடுவது அங்கு ஒரு பெரிய பொழுது போக்காக இருந்து வருகின்றது.

கடல்கடந்த தமிழர்களிடம் நான் கண்ட பெரிய குறை, அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாதிருப்பதாகும். தக்க தலைவர்கள் இல்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள். கலை அன்பர்கள் அடிக்கடி இங்கிருந்து பல நாடுகளுக்கும் சென்று அங்கு வாழும் தமிழர்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வலியுறுத்த வேண்டும். அவர்கள் ஒன்றுபட்டால், தாங்கள் வாழுகின்ற நாடுகளில் பெரிய சக்தியாக விளங்குவார்கள். அந்த சக்தி, தமிழ் நாட்டுக்கும் தமிழ் நாட்டின் வழியாக இந்தியாவுக்கும் பேருதவியாக இருக்கும். ★



*Always buy famous*

**ZEPLIN. PRESIDENT. SIMPLEX**

**WATCHES**

# L. BHAGAT & CO.,

*Head Office:*
ABDUL REHMAN ST.,
BOMBAY 3.

*Branch:*
400, KALBADEVI RD.,
BOMBAY 2.



***Bank With***

# DENA BANK

## DEVKARAN NANJEE BANKING CO., LTD.

**57, OFFICES & 11 SAFE DEPOSIT VAULTS**

- ★ CURRENT ACCOUNTS: Interest allowed at $\frac{1}{4}$%.
- ★ SAVINGS BANK ACCOUNTS: Interest allowed at $1\frac{1}{2}$%. Withdrawals by cheques.
- ★ SPECIAL SAVINGS ACCOUNTS: Interest allowed at $2\frac{1}{4}$% and 2% minimum balance Rs. 1,000 and Rs. 500.
- ★ 6-YEAR & 3-YEAR CASH CERTIFICATES: Yield $3\frac{1}{2}$% and $2\frac{3}{4}$% interest respectively.
- ★ FIXED DEPOSITS: Accepted from 1 month to 3 years on attractive rates of interest. 2-year and 3-year deposit scheme pays interest half yearly.
- ★ SAVINGS INSURANCE SCHEME: Makes taking an insurance policy almost as easy as opening a Savings Bank Account.
- ★ SAFE DEPOSIT VAULTS: At 11 offices. Lockers available.
- ★ SMALL SILVER BARS: Bearing I. G. Mint stamp, available in various denominations.
- ★ INVESTMENT SERVICE: Helps clients to purchase and sell Shares, Government Securities, Bullion, etc.
- ★ FOREIGN EXCHANGE: Letters of credit opened and Foreign Exchange Business transacted.

**SAVE FOR THE FUTURE AND
LET DENA BANK HELP YOU TO DO IT.**

**Head Office:**
**DEVKARAN NANJEE BLDGS., BOMBAY.**

**Pravinchandra V. Gandhi,**
*Managing Director.*

★ வனப்பும் புதுமையும் மிளிரும் காட்சித் திரைகளைத் தீட்டி நாடகக் கலையை முன்னேற்றப் பாதையில் செலுத்தத் துணைபுரிந்த ஓவியர் மாதவம் பிள்ளையின் மனத் திரையில் படரும் நினைவுகள் 'விறு விறுப்பும், வேகமும், கலைத் தாகமும்' கொண்ட கருத்தோவியம்.

# எனது நாடக நினைவுகள்

**நா**டகத்தைப் பற்றிய எனது நினைவுகளுக்கு ஓர் உருக்கொடுத்து ரஸிகர்கள் முன் நிறுத்த வேண்டுமென்பது என் நீண்ட நாளைய அவா. அதற்கு நல்லதொரு சந்தர்ப்பமளித்தனர் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர்; ஆனால், அறிவிப்புக் கிடைத்த நேரம், நான் சிந்திக்கச் சிறிதும் அவகாசமில்லாமல் சினிமா விளம்பர வேலைகளில் இரவு பகலாக ஈடுபட்டிருந்த சமயம். "கலையை ரஸித்து அனுபவிப்பதில் என்றுமே தலை சிறந்தவர்கள் தமிழர்கள்" என்ற பாராட்டுக்குரிய பண்போடு எத்தனையோ மைல்களுக்கப்பாலிருப்பினும் இதயத்தை இந்நாட்டுக் கலைகளிலேயே நிலைக்க வைத்திருக்கும் சிறந்த ரஸிகர்களின் விருப்பத்தை லேசில் தவிர்க்கமுடியுமா? அதனால் ஒன்றிரண்டு மட்டும் குறிப்பிடுகின்றேன்.

1924ல் நான் திருவனந்தபுரத்தில் கலைக்கூடத்தில் (School of Arts) பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும்போதே அக்காலத்தில் நாடகங்களுக்குச் சீன்கள் வாடகைக்குக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்ட சிலர் அடிக்கடி வேலை கொடுத்து வந்தார்கள். அவர்கள் மூலம்தான் முதன்முதலாக நாடக சீன்களை எழுதத் தொடங்கினேன். அதிலிருந்து நாடகக் காட்சிகளை மிக உயர்ந்த முறையில் எழுத வேண்டுமென்ற ஒரு பேரார்வம் எப்பொழுதும் என்னைத் தூண்டிக் கொண்டேயிருந்தது.

அதனால் கலைக்கூடத்தில் பரீக்ஷைக் குரிய பயிற்சிகளைக்கூட விட்டுவிட்டு சீன்கள் எழுதுவதிலேயே ஈடுபட்டிருக்கிறேன். அவ்விதம் செய்தது நல்ல வருவாய் கிடைக்கும் என்பதற்காகவல்ல. 'சீன்கள் எழுத நல்ல வாய்ப்புக் கிடைத்ததே' என்றுதான். ஒருவிதமாகக் கலைப்பள்ளி பரீக்ஷையின்வெற்றியோடு வெளிவந்த சில வருஷங்களில் திரை ஓவியங்களிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தேன். மேலும் புதுப்புது முறையில் பல திரைகள் எழுதவேண்டுமென்ற ஆவல். அதற்கு வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தபோதுதான், அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய ஸ்ரீ ஜெகன்னாத அய்யரின் "மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபா" திருவனந்தபுரத்திற்கு வந்து சேர்ந்தது. அதில் எனது குரு திரு. வேலாயுதாச்சாரி அவர்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டு பிரதம ஓவியராக நியமனமாகியிருந்தார். அவ்வொப்பந்தவாசகம்தான் என்னை நாடகக் கம்பெனியில் காட்சி எழுதும் பணியில் நிரந்தரமாக இருக்கும்படிச் செய்துவிட்டது. அவர் அக் கம்பெனியில் சேரும்போது சர்க்கார் வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தார். எனவே, ஒப்பந்த வாசகத்தில் "சர்க்கார் வேலை கிடைத்துவிட்டால் தனக்குச் சமமான ஓர் ஓவியரைப் பதிலாக நியமனம் செய்துவிட்டு விலகவேண்டும்" என்று கண்டிருந்தது; அதன்படி என்னை நியமித்தார். இப்படியாக முதன்முதலாக எனது நாடகக் கம்பெனிப் பிரவேசம் ஆயிற்று. அங்கு தொடர்ந்து சில ஆண்டுகள் வேலை செய்து கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் ஜகன்னாதய்யர் போன்ற ஒரு நாடகக் கம்பெனி முதலாளி, விறுவிறுப்பும், வேகமும், கலைத் தாகமும்கொண்ட ஒரு யுவ ஓவியனின் கருத்துக்களை எல்லாம் நிறைவேற்றுவது சர்வசாதாரணம்! ஆனால் என் உள்ளே மட்டும் கலை வெறி புரட்சி செய்துகொண்டுதான் இருந்தது.



எனது அனுபவத்தில் நாடகக் கம்பெனி முதலாளிகளிற் சிலர், தங்கள் கம்பெனியிலுள்ள எந்தக் கலைஞனாவது ஏதாவது நல்ல ஆலோசனைகளை சிறந்த கற்பனைகளை சுவாரஸ்யமான சம்பவங்களைச் சொன்னால் அதை நன்றாக மனதில் வாங்கி

வி. மாதவம் பிள்ளை




## Shape Your Future

God "Jupiter" was known to possess knowledge about the future and to shape the destinies of mankind.
In a humble manner the Jupiter General Insurance Co., Ltd., strives to provide you necessary safeguards against uncertainties of future and unforeseen dangers.
Write for details today.

*Insure with* **JUPITER**

GENERAL INSURANCE CO., LTD.

Established 1919 Fort, Bombay.

*Branches and Representatives all over India.*

LIFE - FIRE - MARINE - ACCIDENT

NAS. 325

வைத்துக்கொண்டு, அப்போதைக்கு அதை அலட்சியமாக விட்டுவிட்டு அதில் எவ்வளவு குறை கூற முடியுமோ அவ்வளவும் கூறிவிடுவதைக் கண்டிருக்கிறேன். ஆனால், சில நாட்களுக்குப் பின் அதே கற்பனை, அதே சம்பவம், அதே காட்சி அப்படியே முதலாளியின் சொந்த முலாம் பூசி அவரது ட்ரேட் மார்க்குடன் வெளிவந்துவிடும்! இவர்களை என்னவென்பது?

“மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபா” வில் என்னைப் போலவே கலையார்வம் கொண்ட ராஜமாணிக்கம் முதலிய நடிகர்கள் மற்றும்பலரும் தங்கள் தங்கள் திறனைக் காட்ட சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார்கள். இவை எல்லாம் ஒன்று சேர்ந்துதான் தஞ்சையில் “மதுரை தேவி பால விநோத சங்கீத சபா” என்ற பெயரால் உருவாகியது. இங்கு வந்தபின் நல்ல முறையில் சில வேலைகள் செய்யமுடிந்தது; என்றாலும் இங்கும் என் விருப்பத்தை நிறைவேற்ற குறுக்கு வழிகளைத் தான் கையாள வேண்டி வந்தது.

அப்போது கம்பெனி முதலாளி பக்கிரி ராஜா என்பவர் வியாபார நோக்குடனேயே இருந்து வந்ததால் கம்பெனியை அபிவிருத்தி செய்வதில் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. மாடி சீன் வேண்டுமென்று நினைத்தோம். முதலாளி அதைச் செய்விக்க இசைய மாட்டாரென்பது தெரியும். ஆனால், வருவாய் அதிகரிக்கப் புது நாடகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் வேண்டியதைச் செய்ய இசைவார். அப்போது துருவ நாடகம் ஆரம்பமாக விருந்தது. அதில் “மாடி சீன் வேண்டுமா வேண்டாமா” என்பது அவருக்குத் தெரியாது.

தேவையென்று நாங்கள் செய்து கொண்டோம். அதை இக்காலத்தில் மற்ற கம்பெனிகள் அந்த நாடகத்தில் ஓர் அவசியக் காட்சியாகவே ஆக்கிவிட்டன. இப்படியேதான் ஞான சௌந்தரியிலும் வேலனுள் வீட்டு மாடிக் காட்சியும். இன்னும் எத்தனையோ? இவ்விதமாகக் கம்பெனி உருவாயிற்று.



அதன்பிறகு அதே கம்பெனியை ராஜமாணிக்கம் தலைமையில் நடிக நண்பர்கள் சிலருடன் தொடர்ந்து நடத்தினோம். இப்போது அது நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாக நடந்து வருகிறது. அக்காலத்துக்கு ஏற்ற முறையில் அதில் சில புதுப்புது முறைகளையும் புகுத்த முடிந்தது. அந்த நீண்ட கால அனுபவங்களைத் தொடர்ந்தால் பல அத்தியாயங்களாக விரியும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் முழு சக்தியோடு உழைக்கும் ஒரு பருவம் உண்டு. அந்தப் பருவத்தில் அதே முழு சக்தியோடுதான் பதினாறு ஆண்டுகள் அக் கம்பெனியில் உழைத்தேன். கலைஞன், அதிலும் ஓவியன் பதினாறு வருடங்கள் ஒரே இடத்திலிருந்தது என்பது ஆச்சரியமாகத் தோன்றலாம். அது உண்மையே. காரணம்; கடமையை கடமைக்கு மேலேயும் கடந்து சக்திக்கப்பாலும் சென்று நிறைவேற்றிவிடும் எனது குணம்தான்.

கால வளர்ச்சி! கருத்துக்களில் புதுமை! எங்கு பார்த்தாலும் புதுமை மோகம்! இந்தப் புதுமை வெள்ளத்தில் மிதந்தேன்.

என் கற்பனை ஊற்றுக்கு, கருத்து ஓட்டத்திற்கு அணைக்கட்டு ஏற்படுவதைக் கண்டேன். மீண்டும் அதே ஆர்வம்! அதே வேகம்! சக்தியோடு பாய்ந்தது! “ஸ்ரீ சக்தி நாடக சபா” வாகப் பரிணமித்தது. இதில் ஓரளவு என் இஷ்டப்படி காட்சிகளை ஆக்கவும், புதுமைகளைப் புகுத்தவும் முடிந்தது. என் சீடன் தர்மராஜனும் மற்ற எனது நண்பர்களும் ஒத்துழைத்தனர். கலாபிமானிகளும், கலைஞர்களும் கௌரவித்தனர்; ரசிகர்கள் பேராதரவு தந்தனர். மக்கள் மனமாரப் பாராட்டினர். நானும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்க விரும்பினேன்; ஆனால், சிலமாதங்களிலேயே நாடகக் கம்பெனிகளையே வெறுக்கக் கூடிய மன நிலைமையை உண்டாக்கிவிட்டது! உயிருள்ளபோதே கலைஞரைப் பாராட்டும் ஒரு சில சம்பவங்களைக் கண்ட பிறகுதான் இழந்த என் உணர்வு புத்துயிர் பெற்றது.

அதன்பிறகும் சில நாடகக் கம்பெனிகளுக்கு வேலை செய்து கொடுத்து வந்தேன்; ஆனால் ஒப்பந்தம் செய்துகொண்டு.

மக்கள் புதிய கருத்துக்களையும், கற்பனைகளையும் வரவேற்கிறார்கள். எனக்கும் நாடகத்தில் இதுவரை வெளிவராத, யாரும் செய்யாத புதிய காக்ஷிகளை அமைத்துக்காட்ட வேண்டுமென்ற ஆர்வமும் அளவு கடந்துதான் இருக்கிறது; ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் உருவாக்க உதவுபவர்கள், உண்மையுள்ளவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, உழைப்புக்கு ஊதியங்கொடுத்து ஊக்கும் உத்தமர்களாக இருக்கவேண்டும். அந்த முறையில் ஒரு கம்பெனி தோன்றுமா?

# ORIENTAL

CAN NOW MEET ALL YOUR INSURANCE NEEDS

**LIFE, FIRE, MARINE, ACCIDENT**
**MOTOR, MACHINERY**

It is in the interest of **ORIENTAL LIFE POLICYHOLDERS** to place all their general business with the **ORIENTAL FIRE & GENERAL** because all the profits of the latter go to increase the profits of the **ORIENTAL LIFE** which, in turn, are distributed as increased bonuses.

**ORIENTAL**
**GOVT. SECURITY LIFE ASSURANCE COMPANY LTD.,**

**ORIENTAL**
**FIRE & GENERAL INSURANCE COMPANY LIMITED,**
ORIENTAL BLDGS., BOMBAY 1.



*REMEMBER*

# "ASIAN PAINTS"

*FOR*

**QUALITY AND DURABILITY**

★

WHITE ZINC PAINTS

READY MIXED PAINTS

ENAMELS ★ VARNISHES

*ENQUIRIES SOLICITED*

*Dial: 26756, 60476.* *Write P. O. Box 3514, Bombay 4.*

*Contact*

**194/A, Gaiwadi, Girgaum, Bombay 4.**

# கிரேக்க ட்ராஜடி

**பழம் புராணங்களில் காணக்கிடக்கும் நம்பத்தகாத கதைகளை மெதுவாக ஒதுக்கி விட்ட மனிதனின் மனம் எங்ஙனம் வாழ்க்கையின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைச் சித்திரித்த சோக நாடகத்தை உவக்கத் தலைப்பட்டது என்பது கிரேக்க நாட்டு ஆதி காலத்திய நாடக வரலாற்றை நோக்கின் புலப்படும்.**

ப. கோதண்டராமன்

பழங் கிரேக்கரிடையே, ட்ராஜடி என்றும், காமடி என்றும் இரண்டு விதமான நாடகங்கள் சிறப்புடன் வளர்ச்சியுற்றன. ட்ராஜடி என்பது ஆழ்ந்த கருத்துடைய விஷயங்களைப் பரிகாசமில்லாமலும், கம்பீரமாகவும் விவரித்தது. இயற்கையின் கோரத் தாண்டவத்தையும் தெய்வங்கள் மக்கள்மீது விதித்த இரக்கமற்ற விதியையும் எதிர்த்துப் போராடின மனிதனை அது சித்திரித்தது. காமடியானது சமூகத்திலும் சமூகத்தில் சிலரிடமும் கண்ட குற்றங் குறைகள், ஊனங்கள், கோணல்கள், அவிவேகங்கள், பிரமைகள், கபடங்கள் முதலியவற்றைப் பரிகாசம் செய்தது. சாதாரணமாக ட்ராஜடி துன்பத்தில் முடிகிறதென்றும், காமடி இன்பமாக முடிகிறதென்றும் சொல்வதுண்டு. ஆனால், அவை இங்ஙனமாகவே அமைந்திருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. ட்ராஜடி மங்கலமாகவும், காமடி அவலமாகவும் முடிவடையலாம். இவ்விருவகை நாடகங்களுள், ட்ராஜடி என்னும் வகையில்தான் கிரேக்கர் சிறப்புற்று விளங்கினர். ட்ராஜடியே அவர்கள் உலகுக்கு அளித்த விசேஷ நன்கொடை என்றுகூடச் சொல்லலாம். இத்தகைய ட்ராஜடியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

கிரேக்கர் தம் பழம் புராணங்களிலும் சரித்திர வரலாறுகளிலும் சிறப்பு மிகுந்த நிகழ்ச்சிகளையும் மேம்பட்டவரின் குணாதிசயங்களையும் கண்டனர். அவை ஒன்றோடொன்று மாறுபட்டிருந்தன. உலக வாழ்க்கையில் நடக்காத அபூர்வ விஷயங்களையும் மூட நம்பிக்கைகளையும் அவை கொண்டிருந்தன. ஆயினும், அவர்கள் கலையின்பொருட்டு அவற்றை ஏற்று, ஒழுங்கு செய்து நாடகமாக அமைத்தனர். மக்களின் ஆசாபாசங்கள், துயரங்கள் விதி செய்த கொடுமைகள் ஆகியவற்றையெல்லாம் அற்புதமாகச் சித்திரித்தனர். வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிய அவர்கள், அதன் அழகைப் போலவே தீமை, கொடுமை, அநீதி ஆகியவற்றுடன் அது பிணைந்திருப்பதையும் தெளிவாகக் கண்டு உணர்ச்சி மிகுந்த கவிதைகளில் பாடினர். அவர்களின் கவிதா சக்தியானது அவர் சித்திரித்த கொடுந் துயரங்களையும், பயங்கரங்களையும் உயர் நிலைக்கு உயர்த்தி மேன்மைப் படுத்தியது. அந்த நிலையில் அது வாசகர், பார்ப்பவரிடையே இன்பச் சுவையையே விளைவித்தன. அவர்களும் உள்ளம் நெகிழ்ந்து தூய்மையும் விழுப்பமுமடைந்தனர்.

ட்ராஜடியின் தனிச்சிறப்பு இங்ஙனமாக இன்பச் சுவையை எழுப்புவதில்தான் உள்ளது. இன்பச் சுவை எழுப்பாத ட்ராஜடி ட்ராஜடியாகாது. துக்கத்தின் காரணமாக மனிதன் மிருகமாகி இழிவு அடையலாம். வாழ்க்கையின் உட்பொருளை காம்பீரியத்தை, கண்ணியத்தை இழந்து விடலாம். அந்த நிலையில் ட்ராஜடி உதிப்பதில்லை. துன்பத்தை எவன் அதிதீவிரமாக உணருகிறானோ, எவன் அத்துன்பத்தை ஏற்று கண்ணியமாக நடந்துகொள்கிறானோ, அவனிடமே 'ட்ராஜிக்' நிலை உள்ளது. அத்துன்பத்தின் ஆழத்தை அளந்து அழகுறக் கூறும் ட்ராஜடியில் தனிச் சிறப்பொன்று காண்கிறது. நாடகம் பார்ப்பவர் சோக நிகழ்ச்சிகளைக் கண்டும் ஓர் உயரிய இன்பத்தில் ஆழ்கின்றனர்.

இத்தகைய ட்ராஜடி கிரேக்கரிடையே எங்ஙனம் தோன்றி உருப்பெற்றது? அது சுவாரசியமானதொரு கதையாகும். கிரேக்க ட்ராஜடி மக்களின் பொழுது போக்குக்காக ஏற்பட்டதன்று. அது ஆதியில் டயோனிஸஸ் என்ற தேவனின் வழிபாட்டின் ஒரு பகுதியாகவே தோன்றியது. அவனது திருவிழாவின்போது நாடகங்கள் அரசாங்கத்தின் மேற்பார்வையின்கீழ், வழிபாட்டின் அம்சமாகவே நடந்து வந்தன. அக் காலத்தில் கிரேக்க மக்கள் தம் தெய்வங்களை மனிதர் போலவும், ஆனால் மானிடர்க்குரிய சக்தியைவிட அதிகமான சக்திவாய்ந்ததாகவும், மானிடரின் இன்ப துன்பங்கள், கெட்ட எண்ணங்கள், பக்ஷபாதங்

*With the compliments of*

WIMCO

**THE WESTERN INDIA MATCH CO. LTD.,**

INDIAN MERCANTILE CHAMBERS,

BALLARD ESTATE,

**BOMBAY.**




" கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு "

— நமது பாரத நாடு

உயர்தரமான, சுத்தமுள்ள, அறுசுவை

உணவும் சிற்றுண்டியும்

கிடைக்கும் இடங்கள்

| சாரதா பவன் | அம்பா பவன் |
|---|---|
| மாதுங்கா (ஸெண்ட்ரல் ரெயில்வே) | கிங்ஸ் ஸர்க்கிள் |



பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

மாதுங்கா

★

சங்கக் கட்டிட நிதிக்காக

# நாடக விழா - 1953

★

டான் பாஸ்கோ மைதானத் திறந்த வெளி அரங்கில்

தினசரி இரவு 7-30 மணிக்கு

## ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள்

நடிக்கும்

| | | | |
|---|---|---|---|
| மே | 9உ | சனி | ஔவையார் |
| | 10உ | ஞாயிறு | சிவலீலா |
| | 11உ | திங்கள் | உயிரோவியம் |
| | 12உ | செவ்வாய் | வித்யாசாகரர் |
| | 13உ | புதன் | தமிழ்ச் செல்வம் |

★

பம்பாய்ப் பிரதம நீதிபதி

கனம் ஸ்ரீ எம். ஸி. சக்ளா அவர்கள்

விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

★

# AVVAIYAR

By Sri P. ETHIRAJ.

★



This is the story of Tamilnad's most famous poetess. Avvai belongs to an age when the Tamil was at the height of its glory. The story of her life is re-built from anecdotes handed down by tradition.

Avvai, according to legend, is the incarnation of the Goddess of Learning, Saraswathi. Abandoned as a child, the orphan is picked up by a songster in whose home she grows up. When the foster-parents are discussing her marriage, a messenger comes from the king of the hilly tracts that his master seeks her hand. Soon the king himself comes down to see her; Avvai pleads that she does not want to marry at all. Her foster-parents are piqued and they rebuke Avvai. But by the grace of Lord Vinayaka, Avvai suddenly becomes an old woman and the eager bridegroom flees in terror. Avvai consoles her parents and goes out, an apostle in the service of Tamil.

In her travels Avvai comes across a poor farmer who is oppressed by his shrewish wife. Avvai tired and hungry seeks his succour and the farmer, hospitably by nature, takes her home. He tries his best to pacify his termagant wife to feed the guest, but the shrew, unimpressed by his pleading, gives the poor farmer a beating. Avvai advises the husband to take holy orders.

Avvai is now a respected poetess; kings vie with each other in entertaining her. Adhikaman, known far and near for his hospitality, gives her a fruit which would keep off for ever illness and the burden of old age. In the meantime, news comes that a neighbouring king Tondaiman is planning to invade Adhikaman's kingdom. Avvai goes to the court of the war-minded king and by her wise counsel prevents the wasteful war. The two kings are united by bonds of friendship. Avvai resumes her travels. A mischief-maker shows Avvai a hunted house as a good place to rest for the night. But the ghosts are powerless before Avvai's divine gifts as a poetess, and they are freed from a curse that had condemned them to such an existence.

Avvai reaches the court of another king-Pari who introduces her to his two daughters. In spite of their pressing requests to stay in the place for the night, Avvai resumes her travels. As she leaves the city, she is waylaid - a strategem adopted by Pari to get her back. Avvai, who goes from place to place preaching the dignity of labour and the glory of Tamil achieves still greater renown as a poetess when she composes four crores of stanzas and shames her calumniators in the court of the Chola king.

One day Pari's daughters, now reduced to penury, give shelter and food to Avvai who is drenched to the skin by rain. They tell her of their plight and Avvai moved by their story, is able with divine help to marry one of them to a king in the presence of the three great kings of Tamilnad. They witness too Avvai's supernatural gifts and return to their lands pledged to propagate Avvai's message to the world. The Lord Muruga too comes to test Avvai in the garb of a little shepherd boy. Through her he preaches the gospel of divine love and wisdom. ★

# ஔவையார்

ஆசிரியர் : ஸ்ரீ **பி. எதிராஜு.**

**மா**னிடக் குழந்தையாக மாறிய சரசுவதி தேவி மலர் கொய்ய வந்த பாணரைச் சேர்ந்து, வளர்ந்து மணப் பருவமடைகிறாள். பெற்றோர் காண விழையும் மண அணியை விரும்பவில்லை அந்தப் பெண், ஔவை. தாயும் தந்தையும் அவளைக் கடிகின்றனர். இந்நிலையில் மணமகளைக் காண வந்த மலைநாட்டு மன்னவனிடமிருந்து தப்ப எண்ணி, விநாயகனை வேண்ட அவன் அருளால் ஔவை கிழப்பருவம் பெறுகிறாள். கன்னியைக் காணவந்த மன்னவன் கிழவியைக் கண்டதும் ஓட்டமெடுத்து விடுகிறான்.

அகம் நொந்துள்ள அன்னை தந்தையருக்கு ஆறுதல் கூறிவிட்டு அமுதத் தமிழ் சொரிய வெளியேறுகிறாள் ஔவை. வாக்கின் அரசிக்கு வழியெல்லாம் அநுபவங்கள்.

களைப்புற்ற ஔவையைக் கண்டு இரங்கிய குடியானவன் ஒருவன், அவளைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று மனையாளை அக்கிழவிக்கு அன்னமிடச் சொல்லிக் கொஞ்சிக் கெஞ்சியும், அந்த இல்லாள் பொல்லாளாகி அவனையே அடிக்கப் புறப்பட்டுவிடுகிறாள். அறிந்த ஔவை அகம் நொந்து, இத்தகைய மனையறத்திற்குத் துறவறமே மேல், என்று கூறி அவனுக்கு உணர்த்துகிறாள்.

பின் ஔவை அதிகமானை அடைகிறாள். அவ்வள்ளல், அறிவின் உருவமான அவளைக் கண்டு நெஞ்சலர்ந்து, அரியதான கருநெல்லிக் கனியை அளித்து மகிழ்கிறான். தொண்டை மன்னவன் அதிகமானிடம் சண்டை கூறி வந்திருப்பதை அறிந்து ஔவை அவனிடம் தூது சென்று போரின் இன்னல்களை விளக்கிக் கொடுமையைத் தடுக்கிறாள்.

மற்றுமொருநாள் இரவில் படுக்கப் பொது இடம் விசாரித்த ஔவைக்கு, இரு வழிப் போக்கர்கள் பேய் குடிகொண்ட பாழும் சத்திரத்தைக் காட்டிச் செல்கின்றனர். அவள் படுத்துறங்கும் போது பயமுறுத்த வந்த பேய்கள், ஔவை யாரெனத் தெரிந்து அவளை வணங்கி நிற்க, அவைகளின் முன் பிறப்பறிந்து விமோசனமளிக்கிறாள்.

பாரியின் மகளிர் அங்கவையும் சங்கவையும் எவ்வளவோ வேண்டியும் மறுத்துப் புறப்பட்ட ஔவையைத் தன்னிடம் திரும்பி வரவழைக்க அவ்வள்ளல் தான் தந்த பரிசல்களைத் தன் ஆட்கள் மூலமே கவர்ந்து வரச் செய்து, பின் ஔவை வந்து முறையிட்டபோது, உண்மையை உரைத்து அவளைத் தங்கச் செய்கிறான்.

பழுதற்ற பணி உழவுதான் என்று சொல்லி வாக்கு வாதம் செய்து கொண்டிருந்த விவசாயித் தம்பதிகளுக்கு விளக்கிக் கொண்டிருக்கும் ஔவையை வழியில் கண்டு உவகைகொண்டு பாரி வள்ளல் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்று உபசரிக்கிறான்.

புலமையின் திறனுக்குப் பொற்கிழி அளிக்க பாண்டியன் ஏற்படுத்திய பரிசை யாரும் அடைய இயலாது போகவே, புலமைப் பெருங்கிழவியான ஔவை தான் பாடி அதை அடைந்து பரிசைப் புலவர்களுக்கு அளிக்கிறாள்.

நகர் வலம் வரும் சோழனது மேற் பட்டாடையைக் குழந்தையொன்று விரும்ப, ஔவை தன் கவிக்குக் காணிக்கையாக அதைப் பெற்றுக் குழவிக்கீந்து அதனைக் குலவுகிறாள்.

இரவு ஒன்றில் நாலுகோடி செய்யுள் இயற்ற இயலாது தவிக்கும் புலவர்களின் பொறுப்பைத் தான் ஏற்று, புலமையின் உருவான ஔவை ‘அடி கோடி பெறும்’ ஒரே செய்யுளை இயற்றி தலை தடுமாறி நின்ற புலவர்களை நிலை குலையச் செய்கிறாள்.

மாரியில் நனைந்து வந்த ஔவைக்கு பாரியின் மகளிர் புகல்தர, ஔவை அவ்வள்ளலின் செல்வங்கள் தாழ்வுற்ற நிலைஎண்ணிவருந்தி, அங்கவையைக் கோவலூர் மன்னனுக்கு மண முடிக்கிறாள். திருமணத்திற்கு வந்திருந்த மூவேந்தர்களும் அப்போது பனம்பழம் வேண்ட, ஔவை தன் தமிழ்த் திறனாலேயே பனம்பழம் பெற்று அவர்களுக்கு அளிக்க, வேந்தர்கள் மகிழ்ந்து ஔவையின் அரிய நீதிகளைத் தங்கள் நாட்டில் பரப்புவதாக உறுதி கூறுகின்றனர்.

இடைப்பிள்ளை உருக்கொண்டு நாவற் பழம் கேட்ட ஔவையை முருகன் முதலில் சோதித்துப் பின் தன் மெய்யுறுகாட்டி, அவள் மூலமாகப் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறார்.

கைலாயம் போகவேண்டி விரைவில் பூசை முடிக்க விரும்பிய ஔவையை, கரிமுகத்தோன் நிதானப்படுத்தி பின் தன் துதிக்கையாலேயே அவளை வானுலகிற்கனுப்புகிறார். ★

# SIVA LEELA

By Soolamangalam
Sri **Vaidyanatha Bhagavathar.**

★

Lord Siva, while instructing his Consort Parvati on the eternal truths of the Vedas in his Silvery Abode in the Himalayas, is offended by her irreverent indifference. He curses her to a life of fisherwoman on the earth. His son Murugan questions His dispensation and defends His Mother. Siva is annoyed at this impertinence and ordains him the life of a dumb boy. He plumps his guard Nandhi for his negligence in allowing Murugan into his apartment, to a river to pine as a shark.

Hemanath, a musician from the north, arrogates his talents in the court of Pandya king. The king calls for a musical contest between him and his court musician Bana. Bana, feeling diffident about his success, turns to Lord Siva to get out of the impending test of talent. Moved by the prayers of His ardent devotee the Lord, posing as a woodcutter, pours a forth exquisite music on the streets of the Capital. Hemanath is enervated at the high level of Music in the Pandya kingdom and, apprehending defeat at the hands of Bana, flees in the enveloping darkness of night.

Shenbaga Pandyan is perplexed at the fragrant smell emanating from the locks of his wife and announces a thousand sovereign reward for the best verse on this mysterious fragrance. Poor Darumi implores the Lord to help alleviate his misery with a gift of eloquent verse that will please the King. Siva, ever at the command of his devotees, presents him with the verse. In the thronged court studded with a galaxy of scholars Darumi submits the verse to the King. Poet Nakkirar spots blemishes in the divine verse. Siva himself comes down to the court to defend his composition but Nakkirar is not to yield. Driven to boundless fury by the adamant poet the Lord opens his fiery third eye and discloses his identity. The poet is all the more unbending and persists on his stand. But scorched by the intense heat radiating from the Divine Eye he runs into the Lotus Tank. The scholars of the Sangham, the Supreme Academy of Tamil Literature, implores Siva for pardon to the rigid poet and He condescends to redeem him.

The talented poets of the Tamil Academy lose their heads in petty bickerings of their works. With senseless ego unbecoming of one's learning, each claims his own to be the best. The Sangam is thus torn by dissension and its members turn to the Almighty to settle their dispute. He commands them to approach the dumb boy at Madurai whose nod, He says, will decide the issue. The dumb boy with the divine radiance bows to the talents of Kapilar and Baranar and later gives Darshan to the poets in His divine form.

Thirukurippu Thondar of washerman community is by conviction a Saivite. His resolve to wash only the clothes of Saivite saints leaves him one day with none. The Lord comes to the rescue of his devotee who is overcome by remorse and gives him His clothes. Thondar's exuberance is soon snapped by unexpected rains which make it impossible to dry the clothes in time. Agitated over his failure to keep up his promise he is about to knock himself to death against the cleansing slab when Siva, pleased with the overflowing devotion of his disciple, gives him Darshan.

Nandhi, now a shark, plunders the river and causes untold misery to fishermen of the area. Their chieftain offers his daughter in marriage to anyone who will catch the shark. The Lord assumes the form of a fisherman, catches the fish, and, redeeming Nandhi to his divine life, takes His wife Parvathi, plodding along the earth as the chieftain's daughter, back to his Celestial Abode. ★



# ‘சிவலீலா’

ஆசிரியர்: சூலமங்கலம், ஸ்ரீ **வைத்தியநாத பாகவதர்**

**கை**லாயத்தில் ஒரு நாள் ஈசனார் இறைவிக்கு வேதத்தின் உட்பொருளை விளக்க முற்படும் காலையிலே, தேவி அதனைக் கவனியாது இருப்ப, இறைவன் குறைகொண்டு அவளையும், அவரைத் தடுத்த முருகப் பெருமானையும், முருகக் கடவுளை அதுபோது உள்ளே அனுமதித்த நந்தி தேவரையும் முறையே வலைச்சி, ஊமைப் பிள்ளை, சுறா மீன் – இவ்வகையாக உலகில் பிறக்குமாறு சபித்து விடுகிறார்.

வட நாட்டினின்று வந்த சங்கீத வித்வான் ஹேமநாதன் பாண்டியனது சபையில் இறுமாந்து பேசுகிறான். அதுகேட்ட அரசன் தனது அவையின் இசைப் புலவராகிய பாணரை ஹேமநாதருடன் இசைப் போட்டியிடக் கட்டளையிடுகிறான். சிவ சீலரான பாணர் தான் போட்டியிட வேண்டி வந்ததை எண்ணிப் பரமனைத் துதிக்க, பரமசிவன் விறகுத் தலையனாக வெளிப்பட்டு வீதியில் தமிழிசையைப் பொழிந்துகொண்டு செல்லுகிறார். அதைச் செவியுற்ற ஹேமநாதன் பாண்டி நாட்டினர் பாடும் திறமை அறிந்து பதறி இரவோடிரவாக ஓடிவிடுகிறான்.

தன் மனைவியின் கூந்தலினின்று வெளிப்பட்ட நறுமணத்தின் காரணத்தை அறிய செண்பகப் பாண்டியன் ஆயிரம் பொன் கொண்ட கிழியைப் பரிசிலாக அமைத்துப் போட்டியை அறிவிக்கிறான். அதை அடைய அவாவிய பரம பக்தனான தருமி என்ற ஏழை ஈசனிடம் இறைஞ்ச, சிவனார் கவி கொண்ட ஏடு ஒன்றை அவனிடம் அளித்து பரிசு பெறுமாறு மொழிகிறார். ஆனால், அரசனது அவையிலே அரனாரின் கவிக்குக் குற்றம் சாற்றப்படுகிறது, புலவர் நக்கீரரால். தனது செய்யுள் தள்ளப்பட்டதையறிந்த பரமன் தருமியுடன் ஒரு புலவனைப்போல் சங்க மண்டபத்தை அடைந்து வாதாடுகிறார். நக்கீரரை வெல்ல முடியவில்லை. முடிவில் சங்கரன் நெற்றிக் கண்ணைத் திறக்க, நக்கீரரும் “நெற்றிக் கண் திறந்திடினும் குற்றம் குற்றமே” என்றுரைத்து வெப்பம் தாளாது பொற்றாமரையில் விழுகிறார். பின்னர் சங்கப் புலவர்களின் வேண்டுகோளிற்கிணங்க முக்கண்ணுடைத்த முதலோன் நக்கீரரைக் கரையேற்றுகிறார்.

சங்கப் புலவர்கள் தலை தடுமாறிப்போய், ‘எவர் கவி உயர்வு’ என்ற கலகத்தைத் தீர்க்கக் கடவுளை வேண்ட அவர் மதுரையில் உள்ள ஊமை செட்டிப் பிள்ளை உண்மையான உயர் கவிகளுக்குத் தலை வணங்குவான். அதன் மூலம் உங்கள் கவிப் பெருமை தெரியும் என்கிறார். அதுபோலவே அந்த ஊமைப் பிள்ளையும், கபிலர், பாணர் – இவர்களது தீந் தமிழ்ச் செய்யுட்களைக் கேட்டுப் பரவசமடைந்து சிரம் சாய்த்துப் பின்னர் பிள்ளைக் கடவுள் முருகனாகக் காட்சி தருகிறார்.

சிவனடியார்களின் துணிகளையே வெளுப்பதென்ற திருக் குறிப்புத் தொண்டரின் உறுதியானது தனமுள்ளவர்களைக் கோபமூட்டுகிறது. இருப்பினும் தொண்டரின் போக்கு மாறவில்லை. ஒரு நாள் அடியார்களின் ஆடையே கிடைக்காமல் போக, தொண்டர் மனம் வெதும்புகிறார். ஆலவாயனே அடியாராக வந்து அவரிடம் தன் ஆடையைக் கொடுத்துச் செல்கிறார். அகமகிழ்ந்து எடுத்துக் கொண்டு போய்ப் படித் துறையில் அடித்து வெளுக்கும்போது அடை மழை வந்து விடுகிறது. நனைத்த துணி நேரத்தில் உலராதே என்று நைந்துபோய், தொண்டர் தன் வாக்கைக் காப்பாற்றத் தவறியதற்காக தலையைக் கல்லில் மோதி உயிர்விட எத்தனிக்கிறார். தொண்டரின் சைவ உள்ளத்தைக் கண்டு களிப்புற்ற இறைவன் அவரைத் தடுத்துக் காட்சி அளிக்கிறார்.

சுறா மீனாக மாறிய நந்தி தேவர் ஆற்றிலே நீந்தி வலையர்களை இடையூறு செய்துவர, அதை வலைபிடுவோர்க்குத் தன் மகளைத் தருவதாக வாக்களித்த வலையரசனின் செய்தி கேட்டு, கலைப்பெருமான் தானே ஒரு வலையனாகச் சென்று சுறாவைப் பிடித்து விமோசனமளித்து, வலைச்சியாய்ப்பிறந்து வாழ்ந்துவந்த மலைச் செல்வியை மணம்புரிகிறார்.

# UYIROVIAM

By Sri "JEEVA"

★

In an age when society has petrified with inflexible customs, women have hardly been granted their fundamental rights. They are not deemed as partners but are pawns in the marriage contract. Bold women, who, defying such worn-out customs, make their own choice, have earned the displeasure of the society which forces them either to elope or to end their lives. Neither does the sardonic society acknowledge the supreme sacrifice of many a woman who lay her life in the altar of her family's prestige. But this is the unique story of an ideal husband who, shaking off the shackles of society, comes out boldly to free his wife from her crushing thraldom heedless of the taunting eyes of the world

Karpagam, the daughter of Sabaratna Mudaliar, is an M. A student with Tamil as her special subject. Natarajan, a Tamil Scholar, gives her tution. His colleague, Mangalamma, is jealous of his new appointment, but soon her envious feelings take an amorous turn. Natarajan, now in love with Karpagam, turns down her overtures.

Mangalamma is annoyed at her failure to seduce Natarajan and is out to create a rift between the two. She craftily recommends to the Mudaliar a youth by name Chandrasekharan for Karpagam's hand. The Mudaliar, innocent of her inner motives, approves of the offer and, without even seeking for his daughter's approval, makes all arrangements for the marriage. This shocking news confounds Natarajan, who, unaware of Karpagam's predicament, resigns to seclusion with frustrated feelings.



Karpagam is torn between her love for Natarajan and regard for her father. After sustained thinking, she resolves to uphold the fair name of her family and decides to abide by her father's wish.

But, on the marriage day her pent-up agony overpowers her and at the sight of Natarajan, she faints The bridegroom, a man with progressive outlook, learns with regret the true love that binds Karpagam and Natarajan. He is sorry for the tragic plight of contemporary womanhood who, with no choice of her own, moves like chattels. A shocking scene presents itself before Chandrasekaran when he steps out to the backyard after the wedding feast. Natarajan, a sore victim of passions, implores Karpagam for a hearty embrace but she admonishing him sedately reminds that she is no longer a free bird but the wife with a pledge of fidelity to another. Her words pregnant with wisdom sets him on foot. Turning repentant, he bids her adieu. Chandrasekaran with uncommon magnanimity, offers his wife the right of divorce with a view to setting her free to marry Natarajan. Karpagam does not approve of this idea and points out that her divorce, in violation of prevalent canons will disrupt the social set-up and that she has already forfeited her rights in favour of social order. But Chandrasekaran is not convinced of her plea, and hits on a plan which holding her as his wife, will give her freedom.

The secret of this scheme which satisfies both and still keeps her virtuous in the eyes of the society, the stage will disclose.

# உயிரோவியம்

ஆசிரியர் : 'ஜீவா'

★

மனதுக்குகந்த மணாளனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு உண்டு என்பதைச் சொல்லளவோடு வைத்துக்கொள்ளும் உலகம் இது. நியமனம் செய்யப்படும் கணவனோடு வாழ்ந்தால்தான் பத்தினி என்று நற்சாட்சி தரும் இவ்வுலகத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல, சில பெண்கள் புதிய வழிகளைக் கையாளுவது சகஜம். ஆனால் அம்மாதிரிப் புது வழிகளைக் கையாளாது பெற்றோரது மனதுக்குகந்த மணாளனோடு இணங்கி வாழ்க்கைப்படும் பெண்மணி பெரும்பாலோரின் பாராட்டுதலுக்கு உரியவளாகிறாள். பெண்ணின் தியாகத்தை மதித்து அவளுக்கு உரிமையை வழங்கியதோடு உலகத்தின் கண்களுக்கு அவள் குற்றவாளியாகாமலும் காத்து நின்ற ஒரு கணவனின் கதை "உயிரோவியம்."

சபாரத்ன முதலியாரின் பெண் கற்பகம் கல்லூரி மாணவி. எம். ஏ., பரீட்சைக்காக அவளுக்குத் தமிழ்ப் பாடம் போதிக்கப் பிரத்தியேகமாக நியமிக்கப்படும் நடராஜனைக் கண்டு பண்டிதை மங்களம் உத்தியோக விஷயமாகப் பொறாமை கொள்கிறாள். சீக்கிரத்தில் அது காமத் தீயாக மூளுகிறது. ஏமாற்றத்தைக் கண்ட மங்களம் காதலால் பிணைக்கப்பட்ட கற்பகத்தையும் நடராஜனையும் பிரிக்க சூழ்ச்சி செய்கிறாள்.



கற்பகத்துக்கு மிகவும் பொருத்தமான வரன் என்று ஒரு ஆடவனைச் சபாரத்ன முதலியாரிடம் தந்திரமாக சிபார்சு செய்து மங்களம் வெற்றியும் பெறுகிறாள். சந்திரசேகரனின் தோற்றம், குணம், கல்வி அனைத்தும் பிடித்துப் போன சபாரத்ன முதலியார் நேரடியாக விவாக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பிக்கிறார் – பெண்ணைக் கேளாமல்.

இடிபோல வந்த மணச் செய்தியைக் கேட்ட நடராஜன் வாழ்க்கையை வெறுத்து, கடைசியாககற்பகம் அனுப்பியிருந்த அபயக் கடிதங்களைத் தீண்டுவது கூட பாபம் என்று கருதி வாளாயிருந்துவிட்டான். தவறான எந்தச் செயலிலும் இறங்க மனமில்லாமல் கற்பகம், பிறந்த குடிப் பெருமையை எண்ணி தன் தந்தையின் விருப்பப்படி நடந்து தியாகம் செய்கிறாள்.

திருமண தினத்தன்று திடீரென நடராஜனைக் கண்ட கற்பகம் மூர்ச்சையாகி, அவன் மனதைக் கிளறிவிடுகிறாள். அவள் கடிதம் எழுதிய விவரத்தைத் தெரிந்துகொண்ட நடராஜன் ஓடிப் போய் அவற்றை யெடுத்து உள்ளம் பதற வாசிக்கிறான்.

கற்பகம் காதலால் நடராஜனிடம் தொடர்பு கொண்டிருந்த உண்மையை ஊகித்த சீர்திருத்தவாதி சந்திரசேகரனின் உள்ளம் தற்காலப் பெண்களின் நிலைமையைப் பற்றி இரக்கம் கொள்கிறது.

விருந்து முடிந்த பின்னர், பின் தோட்டத்திற்கு வந்த சந்திரசேகரனின் கண்களுக்கு முன் ஒரு திடுக்கிடும் காட்சி.. கற்பகத்தை நடராஜன் தழுவ விரும்புவதையும், வேறொருவன் மனைவிதான் என்று அவள் புத்திமதி கூறி அவனை மன்னிப்புக் கேட்க வைத்தனுப்பியதையும் சந்திரசேகரன் அதிர்ச்சியுடன் கண்டான்.

மெய்க் காதலுக்கு யமனாக வந்தோமே என்று வருந்திய சந்திரசேகரன் பெருந் தன்மையுடன் கற்பகத்துக்கு விவாக விடுதலை வழங்குகிறான். "தற்கால சமுதாய அமைப்பில் அது நன்றாயிராது. சமுதாய ஒழுங்கிற்காக எங்கள்வாழ்க்கையைத்தியாகம்செய்துவிட்டோம்" என்று தெரிவிக்கிறாள் கற்பகம். கடைசியாக, சந்திரசேகரன் ஒரு தீர்மானத்திற்கு வருகிறான். வெளித் தோற்றத்தால் இவ்வுலகத்தின் கண்களுக்குக் கணவன் — மனைவியாக இருக்கவேண்டிய நிர்ப்பந்த விதியையும் வழுவவிட மனமில்லாது, லக்ஷியவாதியான அவன் உள்ளம் அவளுக்குப் பிரத்யேகமாக அமைத்துக் கொடுக்கும் அப்புதிய சுதந்திர உலகம் என்ன என்பதை ஊகிக்க முடியுமா?

# VIDYASAGARAR

By Vaduvur Sri **K. Doraiswamy Iyengar**

Vidyasagarar, the handsome son of the late engineer, Singaravelu Mudaliar, with infinite faith in the sophisticated concept of matrimony spurns all offers of marriage made on traditional lines, and pins his hopes on a bride with brain and beauty mentioned in the wanted columns of a newspaper. Accordingly he intimates through a letter to Gopala Iyer, the father of the bride, of his intention to see the girl in person. The letter falls into the hands of two vagabonds who had moved by now to Gopala Iyer's residence after he shifts to some other place. The scheming villains lay a trap and extend a faked invitation to innocent Vidyasagarar to pay a visit to the place, with the ostensible motive of stripping him of his all.

The scheme fructifies and Vidyasagarar comes down to Tirupattur without the sanction of his widowed mother out of fear of refusal. Stranded penniless in the untidy varandah of a chowltry, he comes across a sanctimonious sanyasi, Muruga Nadavi, who assumes the role of his bosom friend. He soon dons the saffron robes of a saint under the advice of Nadavi with a view to gathering money for his return home. Nadavi becomes his first disciple. Introduced to the unsuspecting world as a pious saint from the snowy slopes of the Himalayas, and credited with supernatural powers to cure all human ills by the wide propaganda of his gifted disciple, saint Vidyasagarar comes to the notice of the Zamindar of Chembudhanapuram. The Zamindar seeks his help to cure his only daughter, Aparanji, who is in a fit of temporary lunacy.

This Zamindar of huge fortunes has, of late, fallen to the malignant beauty of a seductive woman, Mohaambal, brought to his court by his wily prime musician with a selfish motive of fortifying his hold over his master.

The court musician soon finds his influence waning with the surreptitious intrusion of the shrewd lady who undermines his own security. He makes a bid to regain his domination over the Zamindar, and Vidyasagarar comes handy to his scheme. Alleging that the pious saint will receive the Zamindar in audience only with his betrothed wife, he strives to reunite his master and his estranged wife and thereby to isolate Mohaambal. But this woman of easy virtue is the unseen witness to the scene where the musician hatched the plan in conjunction with the Zamindar's wife. Enraged at this effrontery, Mohaambal counter-manoeuvres to outwit the court musician.

She draws him to a solitary spot of the mansion one day at dead of night and adroitly brings the Zamindar's wife as well there through a forged letter from the musician asking her to meet the Zamindar. The Zamindar who is also brought to the spot misunderstands the innocent presence of his loyal wife at that odd hour with a stranger whom he mistakes for her clandestine lover. Furious at this appalling infidelity he orders the capture of his wife's secret lover. The musician, duped into the trap and taken by surprise at the impending trouble, takes to his heels only to stumble into a well nearby. Vidyasagarar, hearing the rumble of the chase, comes out of his house and is taken to the Zamindar by his entourage who mistake him for the fleeing miscreant.

Vidyasagarar, now an innocent victim of naive circumstances, is brought to trial but is saved at the last moment by the timely appearance of the musician who unfolds the truth and clears the mystery bred by misconceptions. Vidyasagarar, no more a fake fakir, is set free. His "disciple" Nadavi, wanted by the police for his crowded record of earlier offences, is brought to book. The disillusioned Zamindar, mournful of his misdeeds, turns over a new leaf and takes his wife back. Mohaambal, frustrated at the unexpected failure of her schemes by sudden turn of events runs amuck. Aparanji, cured of her love-bred lunacy by the sprightly charm of Vidyasagarar, marries him. ★

# வித்யாசாகரர்

ஆசிரியர்: **வடுவூர் ஸ்ரீ கே. துரைசாமி ஐயங்கார்.**

**சே**லம் இன்சினீயர் சிங்காரவேலு முதலியாரின் மகன் வித்யாசாகரன் புதுமைமோகி. வந்த வரன்களையெல்லாம் தட்டிக்கழித்து விட்டு, ஒரு நாள் செய்தித் தாளில் வெளியாகியுள்ள, சங்கீதம், படிப்பு, அழகு — இவ்வளவும் கொண்ட 'மணமகளை'க் காண, தாயிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் திருப்பத்தூருக்கு வருகிறான்.

'மணமகள்' ராஜலக்ஷ்மியின் தந்தை கோபாலய்யர் ஒரு காலத்தில் குடியிருந்த வீட்டை அமர்த்திக் கொண்டு இத்தகைய போலி விளம்பரத்தினால் ஏமாளிப் பணக்காரர்களை மடக்கிப் பறிமுதல் செய்ய இட்ட மேற்படி 'மணமகள் தேவை'த் திட்டம், வேணு, முனிரத்னம் என்ற இரு 'கேடி'களுக்கும் வித்யாசாகரரை வலைக்குள் இழுத்து வந்தது. பெண்பார்க்க வந்த முதலியார் மகன், கேடிகள் கொடுத்த காப்பியுடன் கலந்து தந்த மயக்க மருந்தினால் ஏமாந்து பறிமுதல் செய்யப்பட்டு ஊர்ச் சத்திரம் ஒன்றின் திண்ணையில் — சேலத்திற்கு டிக்கட் வாங்கிச் செல்லவும் காலணாஇல்லாத ஓட்டாண்டியாக விடப்படுகிறான்.

மயக்கம் தெளிந்து கண் விழிக்க, வித்யாசாகரன் முருகநாடாவி என்ற பரதேசியால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, தெரிந்த அந்த ஒரே மனிதனது உதவியைச் சேலம் செல்ல நாட, அந்தப் பரதேசி, வித்யாசாகரன் கொஞ்ச நேரம் சாமியார் வேஷம் போட்டால், பணம் சேர்ந்து விடும். அதைக்கொண்டு சேலம் செல்ல முடியும் என்ற யோசனையையும் ஏற்று யோகீஸ்வரர் வித்யாசாகரராகத் திகழ்ந்து விடுகிறார்.

தற்காலிகமாகப் போட்ட சந்நியாசி வேஷம், சிஷ்யன் முருக நாடாவியின் தயவில்லாமல் கலைபட முடியவில்லை. 'அன்னமில்லாமல், பழம் பாலையே உட்கொண்டு ஜீவிக்கும் அந்த ஹிமாசலத் தவசி தீராத வியாதிகளைத் தீர்த்து வைப்பார்; தங்கமும் செய்வார்' என்ற முருக நாடாவியின் விளம்பர ஜாலம் புகழாகப் பரவி வித்யாசாகரரைச் செம்புதானபுரம் ஜமீந்தாரின் புத்திரி அபரஞ்சியின் பைத்தியத்தை தெளிவிக்க அங்கே அழைத்துச் செல்லுகிறது.

செம்புதானபுரம் ஜமீந்தார், ஆஸ்தான வித்வான் நாராயண பாகவதரால் கொண்டு விடப்பட்ட மோகாம்பாளின் மோகத்தில் திளைப்பவர். தனது அறிமுகமாக இருந்தாலும், பாகவதர், மோகாம்பாள் அங்கே ஒட்டிக் கொண்டு விட்டதைக் கண்டு, ஜமீந்தார் தன் தயவை இனி நாட மாட்டாரே என்று பொறாமைகொண்டு செய்த சூழ்ச்சியின் முதற்படிதான் வித்யாசாகரர் விஜயம்.

வித்யாசாகரர், ஜமீந்தார் தன்னைப் பட்டமகிஷியோடுதான் காணவேண்டுமென்று சொன்னதாகப் புனைந்து அவ்வாறு, பல ஆண்டுகளாகப் பிரித்து வைத்த பட்டமகிஷியைச் சேர்த்து, மோகாம்பாளைப் பிரித்துவிட வேண்டு மென்று செய்த சதியை, பாகவதர் பட்டமகிஷியுடன் தனிமையில் பேசிக் கொண்டிருந்ததை மோகாம்பாள் கேட்டு, பாகவதரை அவமானப்படுத்தத் திட்டம் போட்டு விடுகிறாள்.

அதன்படி, தான் இரவு ஒருமணிக்குப் பாகவதரை அரண்மனை ஏகாந்த மகாலில் சந்திப்பதாய்க் கூறி வரச் சொல்லிவிட்டு, அதே நேரம், அதே இடத்தில் பட்டமகிஷியை ஜமீந்தார் சந்திக்க விரும்புவதாய்ப் பாகவதர் எழுதுவது போல் கடிதம் எழுதி, பட்டமகிஷியையும் பாகவதரையும் ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் சேர்த்துவிட்டு ஜமீந்தாருக்கு அதைக் காட்ட விரைகிறாள், மோகாம்பாள்.

ஜமீந்தார் இதை ஓடிவந்து பார்க்க, அப்போது தப்பித்துச் சென்ற பாகவதரை ஆட்கள் துரத்துகிறார்கள். பாகவதர் ஓடிவரும்போது பாழுங் கிணறொன்றில் இடறி விழுந்து விடுகிறார். ஆனால், தொடர்ந்து வந்த ஆட்கள் அதுபோது சத்தம் கேட்டுக் கதவைத் திறந்து பார்த்த வித்யாசாகரரைப் பிடித்து விடுகிறார்கள். வழக்கு விசாரணைக்கு வருகிறது. பாழும் கிணற்றிலே விழுந்து உயிர் நீங்காமல் தப்பித்த பாகவதர் விஷயங்களை வெளிப்படுத்துகிறார். வேஷம் கலைந்த வித்யாசாகரருக்கு விடுதலை. முன்னமேயே போலீஸ் தேடி அலைந்த முருகநாடாவியின் மேல் வழக்குகள். இது மட்டுமா? உண்மை தெளிந்த ஜமீந்தார் பட்டமகிஷியை அழைத்துக் கொள்கிறார். உண்மை உடைபட்ட அதிர்ச்சியில் தாசி மோகாம்பாள் பைத்தியமாகி விடுகின்றாள். கல்யாணமாகாததால் பித்தாகிவிட்ட அபரஞ்சி வித்யாசாகரரைக் கண்டதும் தெளிந்து காதலாகி விட்டதை உணர்ந்த ஜமீந்தார் அவர்களை மணத்தால் பிணைக்கிறார். ★

# TAMIL SELVAM

By Sri K. A. P. Visvanatham.

★

Tamil Selvam or the wealth of Tamil Literature is a sapient summons for a sojourn into Tamil's "realms of gold" to those who, with a contemptuous disdain for the treasures of their Mother Tongue, turn to foreign works for intellectual satisfaction. It is not, however, an apotheosis of its virtues but an unchronicled glimpse of its matchless jewels, an unfolding of the depth and profundity of the themes propounded by Tamil Authors.

Tirukural, a poetic bouquet of 1330 profound aphorisms by the immortal poet Valluvar, scintillates with didactic doublets. The poet in search of an utopian state calls on the Pandya king who shows him round his happy land abundant in free clinics, chowltries and an array of up-to-date weapons of warfare. The Poet is not to be convinced by this apparent plethora of good. For, to him the ideal State is one of perennial and resplendent bliss with no poverty and no privation, no rivalry and no enmity.

Purananuru enunciates the attributes of an ideal king and his subjects. It sings in verses the rule of King Karikalan who is confronted with two parties in dispute over a piece of land sold by one to the other. Each pleads that the treasure belongs to the other. The king, young by age but mature with wisdom, suggests the marriage of one's daughter to the other's son and thus disposes of the case with infinite joy at the supreme sense of justice prevailing among his people.

In love poems of earlier works symbolism in delicate and restrained form was the accepted mode. Love, Kural says, is not wholesome without the petty pranks of a love-lorn girl before her blissful union with her husband, back home after a long period of separation.

Which is the highest and noblest of endeavours-to seek and secure the petty or to aim at the higher even at the risk of losing it? The Sceptre and Crown goes to the young prince who fails in his solitary mission to capture an elephant and not to his brother who brings a hare after the hunt.

To beg is base. But to refuse a mendicant who forsaking his self-dignity comes out with open arms for alms, is baser, meaner and more contemptible. That is the code Tamil tradition lays for adjudging a deed.

To give one's all to the poor and needy is the inborn trait of Tamils. Purananuru speaks of the munificence of Monarch Kumanan who driven by his evil brother to the forest with a huge prize over him offers to a poor bard, his head–the only possession of the value left with him.

Valour and Chivalry are the moving themes of many Tamil poems. A Chera King declares war on his neighbouring kingdom of Chola. The Valiant mother undaunted by the death of her brother and husband in the battle field, clothes with an amazing poise, her only son with armour and sends him too to the front. Even her son's death is an abiding joy for her; for, is it not a mighty instance of matchless chivalry of the blood in her veins ? Chera is wounded in the back and overwhelmed with agony at his cowardice, is on the verge of killing himself. But Chola is equally ready to lay down his life; for is it not poor valour to hit a Hero at his back ?

Silappathikaram, the Epic of the Anklet, deifies virtue in the person of Kannaki. This tragic heroine of the epic, furious at the injustice meted out to her husband, avenges her wrath by unleashing a consuming fire on the City of Madurai by the innate spark of virtue. The Chera King bows down to her immaculate virtue and erects a temple while his brother enshrines her life in his immortal Epic of the Anklet.

Such are the lofty concepts of Love and Virtue, Honour and Justice, Valour and Chivalry that are embedded in Tamil Works. ★

# தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : **கி. ஆ. பெ. விசுவநாதம்**

★

**த**மிழர்களுக்கு தாய் மொழியிலுள்ள அறிவுச் சொத்தை உணர்த்துவதே "தமிழ்ச்செல்வம்"

நாடு எப்படி இருக்க வேண்டுமென்பதைக் குறள் சொல்லுகின்றது. இதைப் பின்னனியாக வைத்துப் பின்னப்படுகிறது காட்சி. லட்சிய நாட்டைத் தேடிவந்த வள்ளுவருக்குப் பாண்டியன் தன் நாட்டைக் காட்டுவிக்கிறான். ஏராளமான சத்திரங்கள், எங்கும் இலவச மருந்து சாலைகள், என்றுமே போருக்குத் தயாராக படைக் கருவிகள். இவைகண்டு வள்ளுவர் வருந்துகிறார். 'சோறு வழங்காமல் பசியற்று வாழும் நாடாகவும், மருந்து கொடாமல் பிணியற்று வாழும் நாடாகவும், போரிடாமல் பகையற்று வாழும் நாடாகவும், பாண்டி நாட்டை ஆக்குங்கள்' என ஒலிக்கிறது அவரது லட்சியக் குரல்.

மக்கள், அரசன் — இவர்களை இலக்கியப் படுத்துகிறது புறநானூறு. வாங்கிய நிலத்தில் கிடைத்த தங்கம், நியாயமாக விற்றவருக்கே சேர வேண்டும் என்று வழக்குரைக்க வந்தவரையும், விற்ற நிலத்தோடு வெளிப்பட்ட தனமும் வாங்கியவருக்குத்தான் உடைமை என்று வாதாடி பொன்னைப் பெற மறுத்தவரையும், தங்கள் மக்களை மணம் மூலம் இணைத்து வழக்கை முடித்துக் கொள்ளச் சொல்லி நீதி வழங்கிய கரிகாலன் வயதால் சிறியவனாயினும் வாழ்க்கையால் பெரியவன். புறநானூற்றிலே பேசப்படும் இந்நிகழ்ச்சி பிரிதொரு காட்சி.

காதல் பற்றிப் பேசும் அகப் பொருட்காட்சியில் 'அவள்' பிரிந்துபோய்த் திரும்பிவந்த 'அவனு'டன் கலவு முன்னால் புலவிக் குலவும் மென்மை விளையாடுகிறது.

எது சிறப்பு? சிறிய லட்சியத்தை அடைந்த வெற்றியா? அல்லது பெரிய லட்சியத்தை அடைய முயன்றதில் தோல்வியா? 'புறம்' பின்னதைத்தான் சிறப்பு என்று பேசுகிறது. இளவரசுப் பதவிக்கு இரு பிள்ளைகள்-ஒருவன் முயலை வேட்டையாடி வெற்றி கொள்கிறான்; அடுத்தவனோ யானையைத் தனிமையில் பிடிக்க முயன்று தோல்வியுறுகிறான். பெரிய லட்சியத்திலே தோல்வியுற்ற பின்னவனுக்குத்தான் அந்த வேடர் மன்னவன் வாரிசு தருகிறான்.

உண்மைச் செல்வத்தைத் திரட்டிவரக் கிளம்பிய இரு இளைஞர்கள் — அறிவு, பொருள், ஆராய்ச்சி எல்லாம் அது வல்ல, ஆனால் "உயர்வளித்து, விழுப்பம் தரும் ஒழுக்கம்தான் உயிரினும் ஓம்பப்படும்" என்ற உணர்வுடன் திரும்புகின்றனர். இது ஒரு காட்சி.

ஏற்பது இகழ்ச்சி. ஏந்தும் கரங்களுக்கு இல்லை எனல் இதனினும் இகழ்ச்சி என்னும் குறள் கருத்து மற்றொரு காட்சி.

முல்லைக்குத் தேரீந்தான் பாரி. அவ்வைக்கு அரும்பிணியும், பெரும்பசியும் தீர்க்கும் அரியதான நெல்லிக்கனி அளித்தான் அதிகமான். 'குழவி தாய் முகம் நோக்க, தாய் என் முகம் நோக்க, யான் நின் முகம் நோக்கி வந்தேன்' என்று இறைஞ்சிய புலவருக்குத் தன் ஆயிரம் பொன் பெருமான தலையையே காணிக்கையாக வைத்தான் குமணன். புறநானூற்றுப் பாடலின் இக்கருத்து இவ்விதம் காட்சியளிக்கிறது.

உடன் பிறந்தோன், உயிர்க் கணவன் இவர்களைக் களத்திற்குக் கொடுத்துவிட்டு ஒரே மகனும் போருக்குச் சென்று வீரம் சொரிந்து மார்பிலேதான் பட்டு வீழ்ந்தான் என்பதை அறிந்து உவக்கும்வீரத் தமிழன்னையின்உள்ளம், போரிலே புறமுதுகு அடியுண்டதே என்று வருந்தி உயிர்விடும் சேரன் பண்பு, முதுகிலே அடித்து வீரமரபிற்கு இழுக்கு ஏற்படுத்திக் கொண்டோமே என்று அவமானமடையும் சோழனது உயர்வு—இவையெல்லாம் புறநானூறு கூறும் பெருமையும் வீரமும் நிறைந்த காட்சிகள்.

கண்ணகி யெனும் கற்பரசிக்குச் சேரன் கற்கோயிலும், அவன் தம்பி 'சிலப்பதிகாரம்' எனும் காவியக் கோயிலும் எடுக்கின்றனர். இமயம் சென்று கனக விசயர்கள் தலையில் கல்லை ஏற்றிக் கொணர்ந்து கற்புக்குச் சிலை வடிக்கும் இந்த நிகழ்ச்சி அற்புதமான காட்சி.

பழைய மொழி, இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, தனித்த மொழி—இவை தமிழின் சிறப்பு. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே இலக்கணம் பெற்றது தமிழ். அகப் பொருள் பாதையைத் தனி உடைமையாகக் கொண்டது தமிழ். ஒழுக்கத்தைப் பற்றி ஒரு நூலில் கூறப்படுவது தமிழிலேதான்.

இவை தமிழரின் செல்வம்; தமிழ்ச் செல்வம்.

★


NEW size
NEW blend
NEW enjoyment
Smoke the
NEW
deLuxe
TENOR
MAGNUM
CIGARETTES
de Luxe TENOR
All tobaccos used in De Luxe Tenor cigarettes are THERMO VACUUM treated to ensure purity.
Issued by the National Tobacco Co. of India Ltd., Licensees of James Carlton Ltd., London. Cigarettes made in India.



ஸ்ரீ டி. கே. ஷண்முகம்



T.K.பகவதி


டி.ஏ.
ஜெயலக்ஷ்மி
டி.என்.சிவதாணு
எம்.என்.ராஜம்
கே.ராமசாமி
கே.எஸ்.ராஜம்
டி.கே.எஸ்.
சகோதரர்கள்
நாடகக் குழுவினர்
ஔவை T.K.ஷண்முகம்



கட்டிட நிதிக் கமிட்டித் தலைவர்

டாக்டர்

# எஸ். எஸ். கிருஷ்ணன்

# ஆண்டி மடம்

**பூர்ணம் விச்வநாதன்**

**காட்சி 1**

[ஊர்ச் சத்திரத்துத் திண்ணையில் தணிகாசலம், முத்துசாமி, மருதை, ரத்னவேலு நால்வரும் கவலையுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள்]

மரு : (அலுப்புடன்) டேய், நம்ம நாலுபேத்துக்கும் எண்ணைக்கும் வேலே யில்லேடா......... இண்ணைக்கிச் சொல்றேன்.

முத்து : இந்தா மருதை, ஒன் பல்லுலே போட்டாத்தான் சரிவரும்.

ரத்ன : சொல்லிட்டுச் சும்மா இருக்கிறியே முத்துசாமி! அவன் துக்கிரிப் பேச்சுக்கு அப்படியே நாலு சாத்து சாத்திர வேணும்?

மரு : டேய், என்னுடா சாத்திரம் படிக்கிறீங்க ரெண்டுபேரும். நான் சொல்லுறதுலே என்ன தப்பு? நமக்கு வேலே கிடைக்கிற மாதிரியா இருக்குது இப்ப?

தணி : நானும் அதை நினேச்சுத்தானே இப்பமே தயார் பண்ணிக்கிட்டு வர்ரேன்.

முத்து—ரத்ன : என்ன?

தணி : வேறொண்ணுமில்லே. சில பக்திப் பாடல்களைக் கத்துக்கிட்டு வர்ரேன்.........

முத்து : டேய் தணிகாசலம், நீ இந்த அளகுலே பாடிக்கிட்டுக் கௌம்பினு பரதேசிகளுக்குக் கூட பொளேப்பு போயிரும்டா (சிரிக்கிறான்)

ரத்ன : (பொறுமையிழந்து) சேச்சே, இந்த வெட்டிப்பேச்சுத்தான் சகிக்குதில்லே. தலேக்கு ஒரு வேலேயைத் தேடிக்கிட்டு அப்புறம் சிரிப்புச் சிரிச்சிக்கிட்டு இருக்கலாம்.

முத்து : அட நம்ம நாலுபேர்லே யாராச்சியும் கொஞ்சம் பசையுள்ள ஆசாமியாயிருந்தாலும், அவன் பணத்தை வச்சிக்கிட்டு நாலுபேரும் கூட்டா ஒரு கடை கண்ணியாச்சியும் வச்சுப் பொளேக்கலாம். அதான் நாலு ஆளுகளும் 'நீ நான்'ன்னு போட்டி போட்டுக்கிட்டு ஆண்டியாயிருக்கமே!.........

மரு : இரு இரு முத்து, நீ இப்ப சொன்னதைக் கேட்ட பெறகு எனக்கு ஒரு சிறு யோசனே தோணுது...... ஏம்ப்பா, தணிகாசலம் நீயோ ஒம்பெஞ்சாதியோட மாமாகூடத்தானே இருந்துகிட்டிருக்கே? பணத்துக்கு மெல்லமா அவரு தலேயிலே கை வையேன்!

முத்து, ரத்ன: (ஒரே குரலில்) சரியான யோசனே அப்பா!

தணி : ஐயோ அவரு பைசாப் பெறாத ஆசாமி அப்பா. சும்ம ஒரு கீரை வாங்குறதுக்குக்கூட ஆயிரம்வாட்டி தேடித் திண்டாடி பைசா எடுத்துக்குடுக்கற மன்சன், என்னமோ சொல்றியே! இதுலே அவருக்கு ஞாபகமறதிவேறே. ஒயாம, பைசாவை இங்கே வச்சிட்டேனே, அங்கே வச்சிட்டேனேன்னு கேட்டு நச்சரிச்சிருவாரு எங்களே. எனக்குத் தெரிஞ்சமட்டிலே அவக்கு இருக்கிறது அந்த வீடு ஒன்னுதான்.

ரத்ன : எனக்கென்னமோ அவுரு துட்டுக்கார ஆசாமின்னுதான் தோணுது.

தணி : அதெல்லாம் இருக்காது ரத்னவேலு. அவுரு ஏதோ நெலபொலன்லே வர்ரதை வச்சிக்கிட்டு.........

முத்து : டேய் தணிகாசலம், ஒனக்கோ நிச்சயமாகத் தெரியாது. கேட்டுத்தான் பாரு வேண்டா.........

மரு : ரொக்கம் இருக்கும் தணிகா, கேளு, கடனுகவே கேளு; அப்பத்தான் அவருக்கு நம்பிக்கைப்படும்.........

தணி : கேட்டுப் பாக்கறதுலே ஒண்ணுமில்லே; இருந்தாலும்.........

மரு : (எரிச்சலுடன்) சரி, சரி. மேக்கொண்டு இளுக்காதே தணி...... நீ இண்ணைக்கே கேக்கப்போறே அந்த கிளவருகிட்டே. மறந்துராதே...... ஆமாம்.

(எல்லோரும் சிரித்துக்கொண்டே எழுந்து நடையைக் கட்டுகிறார்கள்.)

**காட்சி 2**

[தணிகாசலம் வீட்டுக்குள் வரும்பொழுது முன் ரூமில் வீரம்மா பொறுமையிழந்து உட்கார்ந்திருக்கிறாள்]

வீர : (தணிகாசலத்தைக் கண்டவுடன்) என்ன இத்தினி நேரமாக்கிட்டீங்க?

தணி : மாமா, எங்கே வீரம்மா?

வீர : மாமா கடையிலே செருப்பை மறந்து வச்சிட்டு வந்துட்டாங்களாம் எடுத்துவரப் போயிருக்காங்க. ஆமாம் ஒங்க விசயம் என்னுச்சு?

தணி : ஆகறதென்ன, பளைய பாட்டுதான். வேலே யில்லேயாம்.

வீர : பெறகு சல்தியா வந்திர்ரதுதானே? ஏன் இத்தினி நேரம்?

தணி : வந்துகிட்டுத்தான் இருந்தேன். வளியிலே முத்துசாமி, மருதை......

வீர : நெனேச்சேன்...... இந்த வம்படிக்ற பளக்கத்தை.........

Always use the M. 99 Bar Soaps for washing your clothes

AND

Always use the Malti Brand Vanaspati Ghee
for preparing tasty food.

THEY ARE POPULAR & ARE QUALITY GOODS.

*Agents wanted for Bombay and South.*

***Contact for particulars:***

M/S. B. R. HERMAN & MOHATTA (I) LTD.,
PEOPLES' BUILDING, SIR PHEROZESHAH MEHTA ROAD,
BOMBAY.



Telephone: 60268 Telegrams: NUTEM

**NEW ERA TEXTILE MILLS LIMITED**
TULSI PIPE ROAD
**BOMBAY 16.**

Manufacturers of Silk and Art Silk Fabrics,
Dyers, Bleachers, Proofers and
Printers of
Silks, Georgette, Georgette Sarees, Flat Crepe, Satins,
Printed Chints Voiles, Mineral Dyed Drills,
Water and Oil proofed Materials,
Seersucker and Nylon Fabrics.

***Available in retail at:***

EVANS FRASER & CO. (INDIA) LTD.,
FORT HOUSE, BOMBAY 1.

தணி : (ரோசத்துடன்) நாங்கல்லாம் அப்பிடி வம்படிக்கிற ஆளுங்க இல்லை வீரம்மா......... இத்தினி நேரமா எப்பிடியெல்லாம் திட்டம் போட்டிருக்கோம், நீ என்னவோ அத்தினி சுளுவா........

வீர : என்ன திட்டம் போட்டீங்க? சொன்னா வல்ல தெரியும்.

தணி : இல்லை வீரம்மா, இப்பிடி வேலைக்கு இன்னொருத்தன் கையை எதிர்பாக்கறதுலே புண்ணியமில்லை, அதனாலே நாங்க நாலுபேரும் சேந்து கூட்டு வியாபாரத்துலே எறங்கப் போறோம்.........

வீர : என்ன? வியாபாரமா? ......பணம்?

தணி : அது விசயமாத்தான் மாமாவைப் பார்க்கணும்.

வீர : அது சரி, ஒங்க யோசனை எல்லாம் நல்லாத்தான் இருக்குது. ஆனா அவருகிட்ட பைசா இருக்குதா, தருவாராங்கறதுதான் தெரியலை.

தணி : பலிச்சமட்டுலேயும் பாப்போம். (மாமா வருகிறார், களைத்துப் போய்)

வீர : அதோ வந்துட்டாரு...... (உரக்க) வாங்க மாமா (சமயம் பார்த்து) ஆமாம் நீங்க என்னமோ கேக்கணும்னு......

தணி : உம்...... ஆமாம்...... கேக்கணும்

மாமா : என்ன மாப்பிள்ளை?

தணி : (வெட்கத்துடன் சிரித்து) ஹி ஹி ஹி ... பெறகு கேட்கிறேன்........

மாமா : சும்மாச் சொல்லுங்க மாப்ளை......

தணி : (துணிந்து) வேறொண்ணுமில்லை... ஒரு பெரிய தொகை வேண்டியிருக்குது இப்ப. நான் வியாபாரத்துலே எறங்கலாம்னு நிச்சயம் செய்திருக்கேன்.

மாமா : (சாவதானமாக) வியாபாரத்துலே எறங்கறது நல்ல யோசனைதான். அதுக்கு ஒரு பெரிய தொகையும் வேண்டியதுதான். ஆனா அதுக்கு எங்கே போறது?

வீர : ஐயோ மாமா, அதைத்தான் ஒங்ககிட்டே கேக்றாங்க அவுங்க.

மாமா : (திடுக்கிட்டு) ஐயையோ, எங்கிட்டையா?

தணி : (அசட்டுச் சிரிப்புடன்) ஆமாம். ஒரு ரெண்டாயிரம் வேண்டியிருக்கும்.

மாமா : (விழுந்து விழுந்து சிரித்து) நல்ல ஆளைப் புடிச்சீங்க மாப்ளை! நான் பஞ்சை பாப்பார்னு தெரிஞ்சும்......

வீர : எல்லாம் இருக்கும் மாமா... வெளையாடாதீங்க......

தணி : கடனாகத்தான் கேக்கறேன்......

மாமா : மாப்ளை, வச்சுக்கிட்டு வஞ்சகமா? கையிலே இருந்தா ஒங்களுக்குச் செய்யாமே வேறே யாருக்குச் செய்யப்போறேன்?

தணி : (ஏமாற்றமடைந்து) பரவாயில்லை மாமா ஒங்ககிட்டே இருக்கும்னு நெனைச்சேன்......

(உள்ளே செல்லப் பார்க்கிறான்)

மாமா : ஆனா மாப்ளை, ரொம்ப ரகசியமான விசயம்ஒண்ணு ஒங்ககிட்டே சொல்லணும். அதுலே நீங்க மொயற்சி செஞ்சா, ஒரு வேளை ஒங்களுக்கு வேண்டிய தொகையும் கெடச்சு, மேக்கொண்டு எனக்கும் கிடைக்கும்.

தணி, வீர : (ஆவலுடன்) என்ன மாமா?

மாமா : மாப்ளை, நீங்க கொஞ்சம் கவனமாகக் கேக்கணும் (குரலைத் தணித்துக்கொண்டு) நாலஞ்சு வருசத்துக்கு முந்தி எங்கையிலே ஒரு ஆறாயிரம் ரூவா வரையிலேயும் ரொக்கமா இருந்திச்சு. அதைவந்து, திருடன்களுக்கு பயந்து... நம்ம சாஸ்தா கோயில் இருக்குது பாத்திங்ளா, ஊருக்கு வெளியிலே......... ?

தணி : ஆமாம்........

மாமா : அதுக்குப் பின்னாலே இருக்கிற பொட்டல்லே, அந்தத் தொகையை ஒரு சட்டிக்குள்ளேபோட்டு பொதைச்சு வருசம் நாலாகுது இப்போ அதுக்குத் தேவை வந்து ஒரு ஆறு மாசம், ராவோடு ராவாப்போயி, பொட்டலைப் பல எடங்கள்லே தோண்டிப் பார்த்துட்டேன் பைசா தட்டுப்படலை.........

தணி : ( துன்பங் கலந்த குரலில் ) ஐயையோ போயிரிச்சா?

மாமா : அது இருக்கிறது எவனுக்கும் தெரியாது பணம் போகலை; இன்னம் பொட்டல்லேதான் இருக்குது. ஆனா எங்கே வச்சேன்னு குறிப்பாத் தெரியலை. இந்தப் பாளாப்போற ஞாபக மறதி...... ஆனா பொட்டல்லெங்கறது ஆணித்தரமா ஞாபகம் இருக்குது.........

தணி : (திடீரென்று நிமிர்ந்து நின்று) நான் அதைக் கண்டுபிடிச்சிர்ரேன் மாமா.

மாமா : இதோ பாருங்க மாப்ளை, அங்கேபோய் தோண்டி பாக்கறதா இருந்தா ராத்திரி வேளையிலேதான் போகணும். எனக்கு இந்த வயசுலே முடியாமத்தான் நானாவே சொல்லணும்னு இருந்தேன் ஒங்கிட்டே. அங்கே போனா என்னென்ன செய்யணுங்கறதை யெல்லாம் விவரமாச் சொல்றேன். (எழுந்து) வாங்க, சாப்பிட்டுக்கிட்டே பேசலாம். ( மூவரும் உள்ளே போகிறார்கள். )





Mr. G. C. MOTWANE
founder of the famous
CHICAGO
TELEPHONE &
RADIO CO., LTD.
Estd. 1909

# ELECTRONIC HEADQUARTERS

*Everything in Electronics*

Home Radio Receivers.

Communication Radio Receivers.

All-Wave Radio Receivers.

Radio Components.

Radio Test Equipment.

Broadcast Radio Transmitters.

Radio Communication Transmitters.

Police Radio Transmitters.

Marine Radio Transmitters.

Aircraft Radio Transmitters.

Electronic Industrial Heating Equipment.

Radar Equipment.

Television.

F.M., A.M. and Short-wave Radio Transmitters.

Electronic Welding Equipment, etc., etc.

---

**We also deal in everything Electric, Telephones, Talkies, Public Address Loudspeaker Equipments. First in the field of Radios, Pioneers of Loudspeakers in India, Cinema Equipment Suppliers from the beginning of the Industry.**

# CHICAGO TELEPHONE & RADIO CO., LTD.

THE OLDEST RADIO CONCERN IN INDIA—ESTD. 1909

*OFFICES:*

25, Chowringhee, Post Box 2589, CALCUTTA, Phone: Bank 1953

48, Hazratganj, Post Box 46, LUCKNOW, Phone: 860

196, Mount Road, Post Bag 5238, MADRAS 2, Phone: 85357

68, Queensway, Post Box 47, NEW DELHI, Phone: 45075

37-38, Silver Jubilee Park Road, BANGALORE 2, Phone: 3833

TELEGRAMS "CHIPHONE" ALL OFFICES

## காட்சி 3

[சத்திரத்துத் திண்ணை. தணிகாசலம் நண்பர்களுடன் மந்திராலோசனை நடத்துகிறான்]

தணி : நான் என்ன சொல்றேன், கோயிலோ ஊருக்கு வெளியேதான் இருக்குது. நல்லா இருட்டின பிறவு, தனித்தனியா அங்கே போய் கூடிக்கிரது. அதிகசத்தமில்லாம தோண்டலாம்.

ரத்ன : நீ சொல்றதைப் பாத்தா, தொகை நிச்சயம்னில்லே தோணுது ?

மரு : (கையை உதறி) நீ ஏன் தணிகா ரெண்டாயிரம்னு சொன்னே ? அவருக்குத்தான் ஆறாயிரம் கெடைக்குதே, நீ கேக்காது மூவாயிரமாக் கேக்கக் கூடாது ?

தணி : அட இப்பொ என்ன கெட்டுப்போச்சு ? தொகை கையிலே கெடச்ச உடனே கேட்டா தராமலா போயிருவாரு ?

முத்து : ஆமாண்டா டேய் தணிகாசலம் சரியானபடி அலசிப் பாத்தா, தொகை நம்ம கையிலே நிச்சயம் கிடைக்கத்தான் போகுது. கூட்டு வியாபாரத்துக்கு வேணும்னு இப்பமே திட்டம் போட்டு வச்சிரலாமே !

மரு : ஆமாம் தணிகா, எப்பிடி நடத்தனும், யாருக்கு என்ன வேலைங்கரதை யெல்லாம் இப்பமே தீத்து வச்சிரலாம் ரெடியா.........

ரத்ன : பெறகு, கடைன்னு வைக்கறதாயிருந்தா பலசரக்கு சாமான் மட்டும் கூடாது. சவுளி, பேனு, பென்சிலு, பவுடரு, சோப்பு, சீப்பு எல்லாத்துலேயும்தான் வியாபாரம் நடத்தனும்

தணி : அட வியாபாரம்னு எறங்கிட்டா, நல்ல பெரிய எடுப்பிலேதான் நடத்தனும். எல்லாம் இப்பமே தீர்மானிச்சிரலாம்.

மரு : கடைக்கு என்ன பேரு, மானேசரு யாரு, வேலையாள் எத்தனி........

ரத்ன : டேய் மருதை, ஒரு பேப்பரும், பென்சிலும் எடு பையிலேயிருந்து. சரியானபடி ஒரு ப்ளான் போட்டு வச்சிரலாம்.

[நால்வரும் முனைந்து உட்காருகிறார்கள்]

## காட்சி 4

[தணிகாசலத்துக்காகக் காத்திருந்த வீரம்மா அவனைக் கண்டவுடன் ஆவலுடன் எழுந்திருக்கிறாள். தணிகாசலம் சட்டை, வேஷ்டி யெல்லாம் மண் படிய வருகிறான்.]

வீர : (ஆவலுடன்) என்ன இண்ணைக்கும்......?

தணி : இல்லை வீரம்மா, இல்லை.........

வீர : ஆறு நாளாகுதே ! பூரா பொட்டலையும் தோண்டிப் பாத்துட்டீங்களா ?

தணி : பூராப் பொட்டலுமா ? ஓரத்துலே நாலஞ்சு குட்டிச் சுவரு நின்னுகிட்டிருந்தது. அதையும் இடிச்சுக் கீளே தள்ளிப் பாத்துட்டோம். இதுக்கு நடுவிலே பெரிய சண்டை வேறே... ஹ...ம் !

வீர : என்ன ? சண்டையா ? யாருகூட ?

தணி : எங்களுக்குள்ளேதான். கடைக்கு என்னை மானேசராப் போடறதுலே மத்தவங்களுக்கு கொஞ்சம் இச்டமில்லே...... அதான் புடிச்சு 'வ்ளாசு வ்ளாசு'ன்னு விளாசினேன். என்னடா நெனைச்சுக்கிட்டீங்க, சேந்து தோண்டிப் பாக்ரதுனாலே, எல்லாருமே மொதல் போடறதா ஆயிருமா ? ...... அப்படின்னு........

வீர : நல்லாருக்குதே! அதுஎப்படியாகும்? பணம் மாமா பணம்தானே ? இதுலே இவுங்களைச் சேத்துக்கிடறதே பெரிசு !

தணி : அவுங்களுக்கு இந்தப் பணவிசயம் தெரிஞ்சிட்டதினாலே அவுங்களை விரோதிச்சிக்கிட முடியலை...... கடை பேரு என்ன வைக்கறதுங்றதுலே பெரிய சண்டை......... 'மருதை விலாஸ்'னு வைக்கச் சொல்லி அந்த மருதைப் பய அட்டகாசம் பண்ணிக்கிட்டிருக்கான். நான் எல்லாரையும் ஒரு தினுசா அமுத்தி வச்சிருக்கேன். பணம் கையிலே கிடைச்ச ஒடனே அத்தினி பயகளையும் காலை வாரி உட்டுரப் போறேன் நிச்சயம்.

வீர : அப்படிச் செஞ்சாதான் புத்தி வரும்.

## காட்சி 5

[இரண்டு நாட்கழித்து. அதிகாலை. தணிகாசலத்துக்காகப் பொறுமையிழந்து காத்திருந்த வீரம்மா, அவனைக் கண்டவுடன் துள்ளிக் குதிக்கிறாள். தணிகாசலம் கண்பொங்க வந்துநிற்கிறான்.]

வீர : நேத்து ராவைக்குப் போனவங்க, வெடிஞ்சு இந்நேரம் களிச்சு வர்றீங்களே எங்கே ஒறங்கினீங்க ராவுலே ?

தணி : 'போலீசு லாக்கப்பு'லே ஒறங்கினோம்.

வீர : (பதறி) என்ன ? போலீசுலேயா ?

தணி : ஆமாம் வீரம்மா, ஆமாம். நேத்துப் பாதி ராத்திரிக்கு, நாங்க கொத்திக்கிட்டிருக்கும் போது, போலீசு ஆளுக ரெண்டு பேரு வந்து எங்களைப் புடிச்சிக் கிட்டு போயி, 'லாக்கப்'புலே தள்ளிட்டான். 'பயிர் செய்யறதுக்காகக் கொத்தினோம்'னு என்னல்லாமோ சொல்லி கடாசிலே இன்னைக்கி வெடிஞ்ச பெறகு 'இனிஸ்பெட்டரு' வந்து, நல்லாக் கண்டிச்சு, கன்னுக்குட்டி கணக்கா வெளியே வெரட்டி உட்டாரு.........

வீர: ஐயையோ, நெசமாவா நடந்திச்சு இதெல்லாம்?......... கடாசிலே நேத்தும் ஒண்ணும் கெடைக்கலியா?

தணி: நேத்து கெடைச்சதத்தான் சொன்னேனே இப்ப...... இருக்கட்டும் ஒரு நாலு நாளு பொறுத்து மறுபடி போகலாம்னு பேசி வச்சிருக்கரோம். நீ மாமா கிட்டச் சொல்லிராதே. அதா வர்ராரு.

இருவரும்: (உரக்க) வாங்க மாமா.........

மாமா: (உள்ளே வந்துகொண்டே உற்றுப் பார்த்து) ஓ மாப்பிள்ளையும் இருக்கீங்களா, நல்லதாப் போச்சு.........

தணி: ஏன் மாமா?

மாமா: பணம் பொதைச்சு வச்சதாச் சொன்னேனே, அது இப்போ இருக்காது.

தணி: (திடுக்கிட்டு) ஏன் மாமா, திருட்டுப் போயிரிச்சா?

மாமா: இல்லே...... இப்ப ஒக்காந்து பேசிக்கிட்டிருக்கமே, இந்த வீடு அந்த பணத்தைப் போட்டு வாங்கினதுதான்.

வீர, தணி: நெசமாவா? (மிரள விழிக்கிறார்கள்)

மாமா: ஆமாம், பணத்தைப் பொட்டல்லே பொதைச்சு வச்ச வரையிலேயுந்தான் ஞாபகம் இருந்திச்சு. பாக்கியெல்லாம் மறந்தே போயிருந்திச்சு. நல்லவேளே இப்ப திடீர்னு ஞாபகம் வந்திச்சு, படுக்கைவிட்டு எளுந்திருச்ச ஒடனே மறுநிமிசம் துள்ளிக் குதிச்சு ஓடியாந்தேன். பெறகு சொல்லிக்கிடலாம்னு இருந்தா மறந்து போயிருமில்லே மறுபடி?

தணி: (அயர்ந்து அப்படியே கீழே உட்கார்ந்து) ஏ கடவுளே (சிரிக்கிறார்) இத்தினி நாளா, ராவுலே எல்லாம், கூடையும், மம்புட்டியும் எடுத்துக்கிட்டுப் போயி...... ஹூம்......

(ஆழ்ந்த பெருமூச்சு விடுகிறான்)

## காட்சி 6

[அரை மணி கழித்து, சத்திரத்துத் திண்ணை. நண்பர்கள் நால்வரும் வாடிப்போய் உட்கார்ந்திருக்கிறார்கள்]

மரு: டேய் தணிகா, நமக்கு ஒரு நாளும் வேலை கெடைக்கப் போறதில்லே.

முத்து: சொல்லு மருதை, சொல்லு. இதைத் துக்கிரிப் பேச்சுன்னு சொல்லமாட்டேன்.

ரத்ன: இத்தினிதூரம் ஆண்டி மடம் கட்டி மோசம் போனோமில்லே? இனி எவ்வளவு மோசமாச் சொன்னாலும் நமக்கு பொருந்தும்.

[எல்லோர் முகத்திலும் ஏமாற்றம் கலந்த புன்னகை அரும்புகிறது.] ★

*With Compliments from*

# LALVANI BROTHERS,

LARGEST WHOLESALE HOUSE IN INDIA

*for*

GIFTS, NOVELTIES, WATCHES & CLOCKS.

TAJ BUILDING, HORNBY ROAD.

BOMBAY.

# தமிழர் வளர்த்த பண்பு

★ ★ ★ கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழுக்கு என்று ஒரு தனிப் பண்பும், தமிழருக்கு என்று ஒரு தனிப் பண்பும், தமிழ் நாட்டுக்கு என்று ஓர் தனிப் பண்பும் இருந்து வருகின்றன. இவை அனைத்தையுமே ஒன்று படுத்தி தமிழர் வளர்த்த பண்பு எனக் கூறுவது உண்டு. அவற்றுள் கலைப்பற்று என்பதும் ஒன்று.

தமிழ் நாட்டில், தமிழ் மொழியில், தமிழ் மக்களிடத்தில் காண்கின்ற கலைப் பற்றைப் பிற நாட்டில், பிறமொழியில், பிற மக்களிடத்தில் காண இயலாது. சுருக்கமாகக் கூறுமிடத்து தமிழ் மக்களின் வாழ்வே கலையாகவும், கலையே வாழ்வாகவும் இரண்டும் பிரிக்க முடியாதவை யாகவும் இருந்து வருகிறது எனக் கூறலாம்.

தமிழர், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர் என்பது மரபு. அவர்கள் அன்றுதொட்டு இன்று வரையிலும் வானம், நிலவு, சுனை, அருவி, சாலை, சோலை, மலை, வனம், மான், மயில், கடல், அலை, நீர், நிலம், மாடம், கூடம், திசை, தென்றல், காவியம், ஓவியம் ஆகிய அனைத்திலுமே ஒரு தனி அழகினைக் கண்டு, அதைக் கலையாக ஆக்கி வாழ் வினிற் புகுத்தி வாழ்ந்து வந்திருக்கின்றனர்; வாழ்ந்தும் வருகின்றனர். இது ஒன்றே தமிழ் மக்களுக்குள்ள கலைப் பற்றை விளக்கப் போது மானதாகும்.

பண்பு என்பதைக் 'குணம்' என்று வட மொழியிற் கூறுவதுண்டு. தமிழில் அதை விளக்கிக் கூற வேண்டுமானால் இயல்பாக உள்ளது, இயல்பாக அமைவது, இயல்பாகச் செய்வது எனக் கூறலாம். வாழ்வே கலையாகவும், வாழ்க்கையையே பண்பாகவும் தமிழன் கண்டான். அதையே தன் இயல்பாகவும் கொண்டான். அவ்வளவுதான்.

சிற்பக் கலையில் தமிழர்க்கு உள்ள பற்றை யும், அதை அவர்கள் வளர்த்து வந்த பண்பையும் நெல்லை, மதுரை, திருச்சி, பேரூர், சிதம்பரம் ஆகிய ஊர்களிலுள்ள கோவில்களும், அவற்றில் உள்ள கல் தூண்களும் இன்றைக்கும் காட்டிக் கொண்டிருக்கின்றன. 1015-ம் ஆண்டில் கட்டி முடித்த தஞ்சை பெரிய கோவிற் கோபுரம் இன்றைக்கும் "இராஜ இராஜேச்சுரம்" என்று அதைக் கட்டி முடித்த மன்ன னின் பெயரைச் சொல்லிக் கொண்டு உயிரோடு நின்று கொண்டிருக்கிறது. தமிழ் நாடு மட்டுமல்ல, வடக்கே இமயம், கிழக்கே சாவகம், தெற்கே சிங்களம், மேற்கே எகிப்து முதலிய நாடுகள்கூடத் தமிழரது சிற்பக் கலைப் பண்பை அன்றைக்கும் காட்டி, இன்றைக்கும் மெய்ப்பித் துக் கொண்டிருக்கின்றன. இது உலக அறிஞர் அனைவராலும் வியந்து கூறப்பட்ட ஒன்று.

இசைக் கலையின் மீது தமிழர்க்கு உள்ள பற்றும், அதை அவர்கள் வளர்த்துவந்த பண்பும் வியப்பிற்குரியதாகும். தொட்டிலாட்ட இசை, களை பிடுங்க இசை, கதிரறுக்க இசை, உண்ண இசை, உறங்க இசை, எழுந்திருக்க இசை, எல்லாம் இசை மயமேயாம். இதுமட்டுமல்ல; பாம் பும் இசை கேட்டு ஆடுகிறது, பசுவும் இசை கேட்டு கறக்கிறது, கல்லும் இசைகேட்டு நகர் கிறது (ஏலகத்தா!), கப்பலும் இசைகேட்டு ஓடு கிறது (ஐலசா). அதிகம் கூறுவானேன்? தமிழ் நாட்டில் செத்த பிணம்கூட ஒப்பாரி இசை கேட்ட பிறகுதான் சுடுகாடு போய்ச் சேருகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை தமிழ் மக்களின் வாழ் வையே இசைக்கலை பின்னிக் கொண்டிருக்கிறது எனலாம்.

இப்பெரிய நிலப்பரப்பை மலை, காடு, நகர், மணல்வெளி, கடல் என ஐவகை நிலங்களாகப் பிரித்து அவற்றிற்குரிய மரம், பூ, விலங்கு, பறவை, மக்கள், தொழில், ஒழுக்கம் முதலியவைகளையும் வகுத்து, அந்தந்த நிலங்களுக்கு ஏற்ற 'பண்' களையும், இசைக் கருவிகளையும் தொகுத்து முறைப்படுத்தி, வகைப்படுத்திப் பின் தொகைப் படுத்தித் தந்துள்ள பழந்தமிழ் மக்களின் கலை அறிவையும், கலைப்பண்பையும் இன்றைக்கு நினைத் தாலும் உள்ளம் உருகிவிடும்.

**மொழி வழியாகவும், பழக்க வழக்க மேம்பாட்டின் மூலமாகவும், சொந்த நாட்டின் வாயிலாகவும் பிரத்தி யேகப் பண்புகள் பெற்று உயர்ந்த தமிழனின் நாகரீகம் அவனுக்கே உரிய தனிப்பெரும் செல்வ மாகும் – என்ற கருத்தை அழ கொழுக விளக்குகிறார் ஆசிரியர்.**

*With the compliments*

*of*

# KEMP & Co., LTD.



## THE PIONEER FIRE & GENERAL INSURANCE COMPANY LTD.

H. O. COIMBATORE

★

*TRANSACTS :*

LIFE, FIRE, MARINE & MOTOR CAR

INSURANCES

★

BOMBAY BRANCH :

**Saheb Buildings, 4th Floor, 195, Hornby Road, FORT.**

★

*Wanted Field Workers on Attractive Terms.*

*Apply with full particulars.*

இசைக் கலைக்கு உரிய கருவிகளைத் தமிழ் மக்கள் கண்டுபிடித்து அவற்றைத் தோல் கருவி, தொளைக் கருவி, நரம்புக் கருவி என மூவகைப் படுத்தி அவற்றிற்குத் தமிழாலே பெயரிடஎண்ணி அதிலும் தமிழ் மொழியில் மட்டுமே இருக்கிற 'ழ' என்ற சிறப்பு ழகரத்தை புகுத்தி, தோல் கருவிக்கு 'முழவு' எனவும், தொளைக் கருவிக்குக் 'குழல்' எனவும், நரம்புக் கருவிக்கு 'யாழ்' எனவும் பெயரிட்டிருக்கின்றனர். இதனால் இந்த இசைக் கருவிகள் தமிழுக்கும் தமிழர்க்கும், தமிழ்நாட்டிற்கும் உரியவை என நன்கு விளங்கும்.

பழந்தமிழர்கள் இசைக் கலைக்கு இசைக் கருவிகளை எவ்வாறு கண்டு பிடித்தார்கள்? என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் விலங்கினைக் கொன்று தின்ற பிறகு அதன் தோல்களை மரக் கிளைகளில் உலரவைத்த பொழுது, உலர்ந்த தோல்களின் மீது காய்ந்த குச்சிகள் உராய்வதால் ஏற்படும் ஒலியிலிருந்து மனிதன் தோல் கருவியைக் கண்டு பிடித்தான். வேட்டையாடுகின்ற பொழுது வில்லின் நாணிலிருந்து கிளம்பும் ஓசையைக் கண்டு மனிதன் நரம்புக் கருவியைக் கண்டுபிடித்தான். ஆற்றின் இரு கரைகளிலும் இருக்கின்ற நாணற் செடிகளிலுள்ள தீஞ்சுவையை வண்டுகள் தொளைத்து உண்ட பிறகு, அதில் தென்றற் காற்று புகுந்து ஓசையிடுவதைக் கண்டு மனிதன் தொளைக் கருவியைக் கண்டு பிடித்தான் என்று தெரிகிறது. எப்படித் தமிழனின் இசைக் கலை அறிவு? இது அன்றும் இன்றும் நின்று நிலவும் தமிழர் வளர்த்த பண்பாடுகளில் ஒன்றாகும்.

மருத்துவக் கலையில் தமிழர்கள் சிறந்து விளங்கியிருக்கின்றனர். உடற் கூறுகளை, பிணிக் கூறுகளை. மருந்தின் கூறுகளைக் கண்டு, கூறியிருப்பதும், நோய் வராமல் உடலைப் பாதுகாப்பதற்குப் பல்வேறு மருந்துப் பொருள்களையே உணவுப் பொருள்களாக்கி உண்ணச் செய்து வருவதுமாகிய தமிழர் மருத்துவக் கலையின் பண்பு வியக்கக் கூடியதாகும்.

காவியம் என்றால் அதில் ஓவியம் இருக்க வேண்டும். இன்றேல் அது சிறப்படையாது. ஓவியம் என்றால் அதில் காவியம் இருக்க வேண்டும். இன்றேல் அது உயிர் பெறாது. அது போலவே பண்பாட்டில் கலையும், கலையில் பண்பாடும் அமைந்திருக்க வேண்டும். இன்றேல் அது கலையும் ஆகாது, பண்பும் ஆகாது. தமிழர் பண்பாடுகளில் கலையைக் காண்பது போலவே, தமிழ்க் கலையிலும் தமிழர் பண்பாட்டினைக் காணலாம். காணும் பொழுது நம் உள்ளம் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

தமிழறிஞர்கள் தமிழ் நாட்டிலிருந்து செய்துள்ள தமிழ்க் காவியங்களெல்லாம் "உலகம்" என்ற சொல் குடிகொண்டிருக்கிறது, இது ஒரு தமிழ்ப் பண்பு. சங்க காலத்து நூலாகிய பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப் படையைச் செய்த புலவர் நக்கீரர் "உலகம் உவப்ப" என்று தொடங்கியிருக்கிறார். அழுது வருந்தும் மக்களுக்கு ஆறுதல்கூற எண்ணிய ஔவைப் பாட்டி "மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்! "என்றே கேட்கிறார். திருவள்ளுவர் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றுதான் திருக்குறளைத் தொடங்கியிருக்கிறார். கம்பரும் இராமாயணத்தை "உலகம் யாவையும்" என்றே தொடங்கி யிருக்கிறார். சேக்கிழார் பெரிய புராணத்தை "உலகெலாம்" என்றே தொடங்கி யிருக்கிறார். கடைசியாகப் பாரதியாரும் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' எனக்கூறி தமிழ்நாடு உலகுக்குச் செய்த தொண்டினை உலகத்தவருக்கு நினைவுறுத்திப் போயிருக்கிறார்.

முல்லை மலர்ந்தும் தன் காதலன் ஏன் வரவில்லை? என்று நினைத்த காதலி, 'என்னை மறந்திருப்பானோ? போரில் புண் பட்டிருப்பானோ? ஒருக்கால் வேறொருத்தியைக் காதலித்திருப்பானோ? பின் ஏன் இன்னும் அவன் வரவில்லை? ஆகா! அவன் சென்றது மதுரைக்கு அல்லவா? அங்கு அவன் தமிழ் படிக்கத் தொடங்கி யிருப்பான். தமிழை ஆராயத் தொடங்கியவனா என்னை நினைந்து திரும்பிவரப் போகிறான்?' இது அவள் பெருமூச்சு விட்டுக் கண்ட முடிவு! இது காதல் சுவையா? கலைச் சுவையா? காதற் கலைச் சுவையா?

தமிழர் தம் கலையால் வளர்த்த பண்பாடுகளில் தலை சிறந்தது ஒழுக்கமாகும். உலகம் பெரிது! உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிக்கும். உயர்ந்தோர் என்பவர் ஒழுக்கத்திற் சிறந்தவர் என்பது தமிழர் பண்பு! அறத்தின் வழி நின்று பொருளைத் தேடி, இன்பத்தைப் பெறு,என்பது தமிழ் நாட்டுப் பண்பு!

"மானத்தை இழப்பதா? உயிரையிழப்பதா? என்ற ஒரு நிலை ஏற்படுமாயின், உயிரை இழந்தேனும் மானத்தைக்



★ THE OUDH SUGAR MILLS LTD., HARGAON, Dist., Sitapur.
★ UPPER GANGES SUGAR MILLS LTD., SEHORA, Dist., Bijnor.
★ NEW INDIA SUGAR MILLS LTD., HASSANPUR ROAD
★ NEW SWADESHI SUGAR MILLS LTD., NARKATIAGANJ, Dist., Champaren.
★ BHARAT SUGAR MILLS LTD., SIDHWALIA.

*Managing Agents :*

# COTTON AGENTS LIMITED.

IMPERIAL BANK BUILDINGS,
BANK ST., FORT,
**BOMBAY.**

8, ROYAL EXCHANGE,
**CALCUTTA.**

*With best compliments*

*from*

# CHAMUNDI CONSTRUCTION CO. LTD.

ENGINEERS AND CONTRACTORS,

Peoples Building
Sir Pherozeshah Mehta Road,
BOMBAY 1.

காப்பாற்று" என்பது தமிழர் நெறி! யாதும் ஊரே! யாவரும் கேளிர்! ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்பது தமிழர் கொள்கை. "எல்லாம் கடவுள் செயல்! எல்லாம் தலைவிதி! என்று சும்மாயிருந்துவிடாதே, முயற்சி செய். வெற்றி பெறுவாய்! என்பது தமிழரின் திட்டம்.

துன்பப் படுகின்ற மக்களைப் பார்த்து கண்ணீருகுத்தலும், இரக்க மனம் படைத்து ஏழை மக்கட்கு உதவுதலும், வந்த விருந்தினரை மகிழ்ந்து உபசரித்தலும் ஆகியவை அன்றும் இன்றும் உள்ள தமிழ் நாட்டு வழக்கம்.

பிச்சை எடுப்பது மிகவும் இழிவு. அத்தகைய இழிவுக்கும் அஞ்சாமல் மானத்தையும் இழந்து பிச்சை கேட்க வருபவரிடம் போய் "இல்லை" என்று கையை விரிப்பது இருக்கிறதே அது அதைவிட இழிவு என்பது புறநானூறு காட்டும் புதுமை. குற்றமற்ற ஒருவனுக்குக் கொலைத் தண்டனை கொடுத்தவன் மன்னனாக இருப்பினும், தன் உயிரைக் கொடுத்தேனும் பழியைத் துடைப்பான் என்பது சிலம்புச் செல்வத்தின் ஒலி. தீமை செய்தவனை விட்டு விடாதே! அவனைத் தேடிப்பிடித்தேனும் தண்டனை கொடுத்தாக வேண்டும். அந்தத் தண்டனை என்ன, தெரியுமா? அவனுக்கு ஒரு நன்மை செய்துவிடு. அதை விடக் கடுமையான தண்டனை அவனுக்கு எதுவும் இல்லை என்பது குறள் காட்டும் நெறி.



பல மன்னர்கள் புலவர்களை தங்களைவிட உயர்ந்தவர்கள் எனக் கருதி நண்பர்களாகவும், அமைச்சர்களாகவும், ஆசிரியர்களாகவும் கொண்டிருந்தனர். மன்னர்களில் பலர் தமிழை அறிந்து சுவைக்கக் கற்றுக்கொண்டிருந்தனர். சில மன்னர்கள் தமிழ்ப் பெரும்புலவர்களாகவே இருந்திருக்கின்றனர். தம்மைப் பாடிய புலவர் பெரு மக்களுக்குப் பொன்னும், மணியும் புகழ்ந்துகொடுத்து மலையும் நிலமும், மகிழ்ந்து கொடுத்தார்கள் என்பது பத்துப் பாட்டு வரலாறு. தமிழுக்குத் தலை கொடுத்தான் என்பது குமணன் வரலாறு. நந்திக் கலம்பகம் கேட்டுத் தமிழுக்கு உயிர் கொடுத்தான் என்பது நந்தி வர்மன் வரலாறு.

தமிழர் வளர்த்துவந்த பண்பாடுகளில் போர் முறையும் ஒன்று. போரை வெறியாகக் கருதாமல் ஒரு கலையாகக் கருதி வந்தவர்கள் தமிழர்கள். அதிக வலிமை இருந்தும் அதனை எளிய மக்களிடத்துக் காட்டாமை இறுதிவரையிலும் நாட்டில் போர் நடைபெற விடாமை, வந்த தூதுவர் வாய்த்துடுக்காகப் பேசினும் பெருந்தன்மை கொண்டு அவர்களைத் துன்புறுத்தாமை, போருக்கு அஞ்சாமை ஆகியவைகளும் போர் நடக்கும் இடத்தையும், காலத்தையும் முன்னதாக அறிவித்தலும், அந்த இடத்தைவிட்டுப் பெண்டிரும், பிள்ளைகளும், பிணியாளரும், பெரியோரும் விலகிப்போய்விட வேண்டுமென படையெடுக்கும் மன்னன் பறையறைந்து கேட்டுக்கொள்ளுதலும், போர்ப் பறை கேட்டதும் புயம் வீங்கி மகிழ்தலும், போரில் புறங்காட்டாது சண்டை செய்தலும், வயது முதிர்ந்து அரண்மனையில் இறந்து விட்டாலும் அந்த மன்னனுடைய நெஞ்சில் மாற்றானது வேல் கொண்டு தாக்கி அதனாலேயே அவன் இறந்து விட்டான் எனக் கருதி மகிழ்ச்சி அடைதலும் ஆகிய இவைகள் போர்க் கலையின் மூலம் தமிழர் வளர்த்து வந்த பண்பாகும்.

நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு ஒப்புரவு, ஆற்றலறிதல், அறிவுடைமை நல்லினத்தாரோடு நட்டல் ஆகியவைகள் தமிழர்களின் சிறந்த அறநெறியின் வித்தாகும்.

இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமிழர் உண்டலுமிலர், பிறர் அஞ்சுவ தஞ்சி, புகழ் எனில் உயிருங் கொடுக்குவர், பழி எனில் உலகுடன் பெறினும் கொள்ளார், தமக்கென முயலார், பிறர்க்கென முயலுவர் என்பது தமிழர் பண்பை விளக்குகின்ற காவியத்துள் உள்ள ஒரு ஓவியம்.

இதுகாறுங் கூறியவைகளால் தமிழர் வளர்த்த பண்பாடுகளையும், அவர் தம் கலைப் பற்றையும் ஒருவாறு அறியலாம். தமிழ் கூறும் நல்லுலகில்தோன்றிய தமிழ்க் கலை இப்பரந்த உலகில் வாழட்டும்! ★

## NON-CRAZING SANITARY WARES

- ★ Indian Patent W. C. Pans
- ★ European Closets
- ★ Wash Basins
- ★ Wall Urinals
- ★ Aryan Pans
- ★ Aqua Pans
- ★ Orissa Pans
- ★ Sinks, Etc.

## GLAZED TILES

White as well as in different pleasing colours



INDIAN W. C. PAN BOMBAY PATTERN & P. TRAP



WASH BASIN



EUROPEAN CLOSET

*For full particulars contact:*

# BOMBAY POTTERIES & TILES LIMITED

PIPE ROAD, KURLA,

**BOMBAY.**

Telephone: **87336 - 87928**　　　　Telegram: **BOMPOT**







## நாடக விழா-'52.

1 விழாவை ஸ்ரீ பி. ஜி. கேர் ஆரம்பித்து வைத்தார்.

2 'ஔவையார்' நாடகத்திற்குத் தலைமை வகிக்கும் கனம் முரார்ஜி தேசாய்

3 'ரத்தபாசத்'தைப் பாராட்டும் ஸ்ரீ எஸ். கே. பாடீல்.

4 நாடகங்களை அனுபவித்த ரஸிகர்களின் ஒரு பகுதி.






அன்பு நல் வாழ்த்துக்கள்

★

**கருணாநிதி அச்சகம்,**

(உரிமையாளர்: கருணை. எம். ஜமால்)

தபால் பெட்டி எண் 1

விஜயபுரம் P. O., தஞ்சை ஜில்லா.



## பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

### கட்டிட நிதிக் கமிட்டி

ஸ்ரீ ஏ. என். சட்டநாதன்,
*சங்கத் தலைவர்.*

டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்,
*கட்டிட நிதிக் கமிட்டித் தலைவர்.*

ஸ்ரீ எஸ். ஏ. ஐயர்

,, எம். ஜி. அய்யர்

,, டி. வி. ராமாநுஜம்

ஸ்ரீமதி உமாராஜன்

ஸ்ரீ எஸ். கந்தஸ்வாமி

,, ரெ. முருகையா,
*செயலாளர், கட்டிட நிதிக் கமிட்டி.*






**Awco**

**WATCHES, CLOCKS & TIMEPIECES**

enjoy nation - wide popularity
on account of their exquisite
styles and superb workmanship.

★

*With best compliments from :-*

**ASSOCIATED WATCH CO., LTD.**

**EXCELSIOR WATCH CO., LTD.**

# அன்னையின் வாழ்த்து

**சோ**தனைக் கட்டம் சமைத்த விதியும், அதன் கூட்டாளியாக இயங்கிய கதாசிரியனும் மேடையில் வாடிய கதாநாயகி கமலத்தின் துய ரங்களுக்கு ஒரு எல்லை யிட்டார்கள். சூறுவளிக் காற்று மேடையைச் சூறையாட "இனியும் கதி மோட்சம் பிறக்குமா" என்று அவள் முறையிடும் தறுவாயில் கொட்டகை விளக்குகள் அனைத்தும் அணைந்து விட்டன.

இருளில் மூழ்கிப்போன ரஸிகன் வெளிச்சத்தைக் காண்பதற்கு நெடுநேரம் பிடித்தது. கொட்டகை காலியாக இருந்ததைத் திடீரென நோக்கிய ரஸிகனின் கண்கள் பரபரப்புடன் நாலு திசைகளையும் குடைந்தன. காற்று வேகத்தில் ஆடிய படி மேடை வெறிச்சென்றிருந்தது. 'க்ரீன் ரூம்'க்கும் அதே கதி. எங்கே எல்லோரும் ஓடிப்போய் விட்டார்கள்?

"யார் அங்கே? நாடகம் முடிந்து விட்டதா? அடுத்த ஸீன் எப்போது?" என்றுகூச்சலிட்டான் ரஸிகன்.

'மற்றவைகளை மேடையில் கண்டு கொள்க' என்று கதை முடியுமுன்பு கதவடைக்கும் நாடக நோட்டீஸைப் போல் மேடை மௌனம் பூண்டு இருந்தது.

"இனியும் கதி மோட்சம் பிறக்குமா" என்ற அதே குரல் திடீரென எதிரொலித்தது.

"யாரது? கதாநாயகியா?"

"கதாநாயகி கமலம் நானில்லையப்பா. கதா ஆசிரியன் அருளால் அவள் பிழைத்து சுகமாயிருக்கிறாள். ஆனால் இதே மேடையில் உழலும் இந்த ஏழையின் கதியை நினைந்தார் யார்?"

"யார் நீ பேசுகிறது? வெளியே வா!"

"இந்த முகத்துடன் என்னால் வெளியே வர முடியாதப்பா. எட்டினில் இயல் முகமும், பாட்டினில் இசை முகமும் காட்டிவரும் நான் இன்று என் மூன்றுவது முகத்தைக் காட்டக்கூட அஞ்சுகிறேன். ஔவையைப் போலவே தலை நரைத்து சுருக்கம் விழுந்து, தளர்ச்சியுற்ற இம்மேனி யாருடையது என்று உணர்ந்தால் நீ கலங்கிப் போவாய். ஆம்! நான்தான் **நாடகக் கலைத்தேவி**"

பின்னணிக் குரலில் லயித்த ரசிகன் பிரமித்தான்.

"நாடகம் சுபமாக முடிந்து விட்டதாக எண்ணி ஜனங்கள் வெளியேறிவிட்டார்கள். நாடகக் கலையணங்கே வாடி உயிர் விடும் மாபெரும் வாழ்க்கை நாடகத்தில் இது ஒரு பயங்கர இடைவேளை என்பது அவர்களுக்குப் புலப்படவில்லை. நாளை என்ன நிகழுமோ அறியேன்; ஆனால் இன்றுவரை நடந்ததை வேண்டுமானால் சொல்ல முடியும்!

"ஆஹா தாராளமாக........."

"இலக்கியக்கிளையில் இளையவளான எனக்கு வளரும் பருவத்தில் தோன்றிய விரோதிகள் அனந்தம். பொதுஜன அலட்சியம், செலவின பயங்கரம், கொட்டகைப் பஞ்சம், வரி வேதாளம், சினிமாப் பூதம் முதலிய பகையம்சங்கள் எனது வாழ்க்கை நாடகத்தின் 'வில்லன்கள்'. கவலையால் தேய்ந்த என் தேகத்தை ஒரு சுமையாகவே மக்கள் மதிக்கலாயினர். நூலிழையில் ஊசலாடிய எனதுயிரை மீட்கத் துணிந்து சில கரங்கள் முன் வந்தன. சமூகத்தால் அசட்டை செய்யப்பட்ட அன்னையைக் காப்பாற்ற முன்வந்த வீரப் புதல்வர்களின் கரங்களே அவை. அச் செல்வக் கரங்களுக்கு எனது நன்றியறிதல்!

"ஔவையார், வீர சிவாஜி, ராமதாஸ் முதலிய பெருமை தரும் ஜீவிய சரிதங்களை அரங்கேற்றிய அதே கலை மேடை தன்னை சிருஷ்டித்த கலைஞர்களின் ஜீவிய சரிதத்தையாவது ஒலிபரப்பி தனது நன்றியறிதலைத் தெரிவிக்கத் துடிக்காதா?

"என்னைக் காப்பாற்றிய கரங்களில் முக்கியமானவை ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள் அவர்களுடையவை!

"நாடக மறுமலர்ச்சிக்குரிய சில மொட்டுக்கள் அரும்பிய பெருமைபடைத்த நகரங்களில் திருவனந்தபுரமும்

***'......நூலிழையில் ஊசலாடிய எனது உயிரை மீட்கத் துணிந்து சில கரங்கள் முன்வந்தன. அசட்டை செய்யப்பட்ட அன்னையைக் காப்பாற்ற முன்வந்த கலைச் செல்வர்களின் கரங்களே அவை. அச்செல்வக் கரங்களுக்கு எனது நன்றியறிதல்...!'***

***இது நடிப்புப் புதல்வர்களான ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்களுக்கு நாடக அன்னை வழங்கும் வாழ்த்து.***


Smooth Glide
PLATO '66'
Rs. 4/- each
PLATO
REGD.
FOUNTAIN PEN
பௌண்டன் பேனா.
செல்ப் பில்லர் & ரெகுலர் { ஒவ்வொன்றும் ரூ. 4.
ஆடோபில் ஒவ்வொன்றும் ரூ. 4/8.
நெ. 77 லேடீஸ் பேனா ஒவ்வொன்றும் ரூ. 4.
பூரண விநியோகஸ்தர்கள்:
பெஸ்ட் பௌண்டன் பேன் டிப்போ,
ஆனந்த் புவன், ப்ரின்ஸஸ் தெரு,
பம்பாய்-2.
A MAHTRE PEN'S PRODUCT.

ஒன்றாகும். ஏனெனில் சகோதரர்களான சங்கரன், முத்துசாமி, ஷண்முகம், பகவதி — நால்வரும் பிறந்த ஊர் அது. சிறந்த நடிகரான ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளையைத் தந்தையாகவும், ரசிகையான ஸ்ரீமதி சீதையம்மாளைத் தாயாகவும் கொண்டு, "மனோன் மணீய" நாடக இலக்கியத்தின் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரம் பிள்ளையின் பரம்பரையில் உதித்த ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்களின் தேகத்தில் கலைப் பெருக்கே உதிரமாக ஓடிக்கொண்டிருக்க வேண்டும்!

"இளஞ் சகோதரர்களின் கலைத்தேர்ச்சிக்கு வளர்ப்புத் தொட்டிலாக இருந்து மெருகிட்டு அரங்கேற்றிய பெருமை தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ தூ. தா. சங்கரதாஸ் ஸ்வாமிகள் அவர்களுடையது.

"1918ம் ஆண்டில் சகோதரர்களின் நாடக மேடை வாழ்க்கை ஆரம்பமாயிற்று. முதல் ஏழு வருடங்கள் மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ சபா மூலமாகவும் இடையே இரண்டு மாதம் பாலமனோகர சபா மூலமாகவும் தங்கள் ஆற்றலையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொண்டார்கள்.

"தமிழ் நாடக மேடையைப் பொருத்தவரையில் 1925ம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டு. ஏனெனில் அவ்வருடம் மார்ச்சு மாதம் 31வ சகோதரர்களின் பெரு முயற்சியால் ஸ்ரீ பால ஷண்முகானந்த சபா ஸ்தாபிதமாயிற்று. நடிகர்களாகத் தொண்டு செய்த சகோதரர்கள் அது முதல் நிர்வாகிகளாகவும் மாறினார்கள். பின்னர் நாடக சபை நடிப்புக் கல்லூரியாகவும் திகழ்ந்தது.

"கடற் புயலைப்போல அடங்காச்சீற்றத்துடன் தாக்கிய எண்ணிறந்த கஷ்டங்களை எதிர்த்து நீச்சலடித்து முப்பத்தைந்து வருடங்கள் அவர்கள் நடத்திய போராட்டம் ஜீவ மூச்சுக்காக நான் மன்றாடிய சரிதமே யாகும். "தெய்வ வழிபாடு மிகுந்த மக்களுக்குகந்த இராமாயணம், மகாபாரதம், கிருஷ்ண லீலா ஆகிய புராணக் கதைகளோடு தற்கால சமூக வேட்கைக்கு உட்பட்டு நாடகப் பேராசிரியர் ஸ்ரீ ப. சம்பந்த முதலியார், வடுவூர் ஸ்ரீ துரைசாமி அய்யங்கார், ஸ்ரீ ஜே. ரங்கராஜு ஆகியோர் இயற்றிய நாவல்களையும், தமிழிசையைப்போற்றும் சிவலீலா, ஒளவையார் போன்ற சரித்திரங்களையும் தகுந்தமுறையில் அரங்கேற்றிய சகோதரர்களின் நாடகமேடை, புராதனமும் நவீனமும் பொருந்தியிழைந்த புரட்சிக் கலையரங்கு.

"ரஸனையில் மட்டுமல்ல, லக்ஷ்யத்திலும் புரட்சியே செறிந்திலங்கியது. மக்கள் மனோபாவத்தை மாற்றியமைக்கும் கருவிகளாக இயங்கிய பிரசங்கியின் நாவுக்கும், எழுத்தாளனது பேனாவுக்கும் மேலாக ஆதிக்கம் செலுத்துவது நடிகனின் உணர்ச்சியுள்ள நடிப்பே என்பதை சகோதரர்களின் நாடகமேடை மெய்ப்பித்துள்ளது. சட்ட விரோதம் என்று ஆங்கில அரசாங்கம் தடை விதித்திட்ட வகையில் ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள் அரங்கேற்றிய கதரின் வெற்றி, தேச பக்தி ஆகிய இரு நாடகங்கள் இந்திய சுதந்திர முன்னணி வரை முழங்கிய சங்கொலி.

"கவிஞனின் குரல், கலைஞனின் திறல், அறிஞனின் பொன் மொழி, அடிகளின் உபதேசம், சீர்திருத்தவாதியின் பேச்சு-இவ்வளவும் ஒருங்கே அமையப் பெற்ற சகோதரர்களின் நாடகமேடை நாட்டு நலனை நடு நாயகமாக வைத்து நிறுவப் பட்ட நாடகமேடையன்றோ!

"விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாகத் தோன்றிப் பரவி நாடகக் கலையையே விழுங்க முயன்றுவரும் சினிமாப் பூதத்தோடு போட்டியிடத் துணிந்த சகோதரர்கள் அம் மேடையில் கையாண்ட புத்தம் புது நுட்ப திட்பங்கள்தாம் என்னே! அதோ உங்கள் கண் முன் அந்த மேடையில் பாருங்கள்......

**தேவியின் சொற்களில் வசப்பட்ட ரசிகன் மேடையை கவனித்தான். விசித்திரக் கனவு போல அக்காட்சிகள் ஒவ்வொன்றாக மேடையில் படர்ந்தன.**



## முதல் பாதை

பம்பாயிலிருந்து தாணு வரை 1853, ஏப்ரல் 16ல் சென்ற புகை வண்டி, மகா இந்திய தீபகற்ப (தற்போது மத்திய) இருப்புப் பாதையின் முதல் புகை வண்டியாகும்; அக்காரணத்தால் இந்தியாவின் 'முதல் பாதை' என்ற தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

அன்று முதல் இன்றளவும் முற்போக்குத் தீரத்துக்கு உறைவிடமாக விளங்கிவரும் ஜி. ஐ. பி. ரெயில்வே புதிய வசதிகளை இந்தியாவில் முதன் முதலாகப் புகுத்தியபெருமை பெறும். அவையாவன:

பம்பாய்ப் பிராந்தியப் போக்கு வரத்துப் பகுதி முழுமையும் மின்சார மயமாக்கியது.

பிரதான மார்க்கத்தில், பூனா, இகத்புரி வரை முன்பிருந்த நீராவிச் சாதனத்தை பூரண மின்னியக்க சாதனமாக மாற்றி அமைத்தது.

பம்பாய்ப் பிராந்தியப் பகுதியில், தன்னியக்கமுள்ள வர்ண ஒளி சமிக்ஞை முறையை நிறுவியது; பிரதான மார்க்க முழுமையும் இயந்திரச் சமிக்ஞை இணைப்புச் சாதனத்தை ஏற்படுத்தியது.

பிரயாணி, பண்டம் ஆகிய இருவகைப் போக்குவரத்திலும் தற்சலன 'வாக்வம் ப்ரேக்' நிறுவியது.

ஆகர்ஷண இயக்கத்துக்குரிய மின்சாரத் தேவை பூர்த்தியாகும் பொருட்டு (பம்பாய்க்குச் சமீபம்) கல்யாணில் உஷ்ணோதய மின்சக்தி நிலையம் நிர்மாணித்தது.

இத்தகைய முற்போக்குத் தீரத்தை என்றுமே கடைப்பிடிக்கவும், வருங்காலத்தில் அபிவிருத்தி நல்கும் நற்பணி ஆற்றவும், இந்திய ரெயில்வே ஸ்தாபன நூற்றாண்டு விழாவின் போது மத்திய ரெயில்வே சங்கல்பம் செய்து கொள்கிறது.




**மத்திய**
**ரெயில்வே**

.........சாம்பல் தரித்த சிவபெருமான், சட்டத்தைத் தாங்கிய இன்ஸ்பெக்டர், அருளாய்ச் சுரக்கும் ஔவைப்பாட்டி, மருளா விழியாள் புதுமைப் பெண்........

.... மனிதன்......மிருகம்......

.....வனம், முகில், மின்னல், மழை, புயல்......

....... வான வில்லின் வண்ண வீச்சு, காணத் திகைப்பளிக்கும் துரித மாறுதல், "ஸ்லைடு டெக்னிக்" நிழல் வடிவங்கள், மாயாஜாலத்தோற்றங்கள், தந்திரக் காட்சிகள், ஒலி இன்பம், பின்னணி சங்கீதம்.........

எல்லாவற்றையும் கண்டான் ரசிகன். ஒலி பரப்புக் கருவி மீண்டும் தன் கதையைத் தொடர்ந்தது.

"அதோ சங்கீதம் எவ்வளவு அனுசரணையாக அமைந்திருக்கிறது பார். ஆரம்ப காலத்தில் சங்கீதத்தின் ஆதிக்கத்தில் அழுந்திக்கிடந்த நடிப்புக் கலை நாளடைவில் சுயாட்சி பெற்றுள்ளது. செயல் திறன், சாதுரியம், சாரீரம் அனைத்தும் அமைந்தால்தான் சிறந்த நடிகன் என்று அங்கீகாரம் பெறலாம். பால்முனி, ரோனால்ட் கால்மன் போன்ற மேனாட்டு நடிகர்களுக்கு நிகராக இந்தியர்களும் நிமிர்ந்து நிற்கலாம் என்ற நம்பிக்கை ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்களின் குணசித்ர நடிப்பைக் கண்டதும் நமக்குத் தோன்றுகிறது. மூன்று மணி நேரம் முதுகைக் கூனிக்கொண்டு குரலையும் மாற்றிக்கொண்டு தொண்டு கிழவியாக நடிக்கும் ஷண்முகத்தை நோக்கும்போது ஔவையின் அருள்முகத்தையே கண்ட இலக்கிய பிரமை தட்டுகிறது.

"தமிழ் நாடகத் துறை முன்னேறுவதற்கு சகோதரர்கள் இன்னும் எவ்வளவோ பயனுள்ள பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். நாடக இலக்கியப் பஞ்சத்தை விரட்டும் நோக்கத்தோடு அவர்கள் நிறுவிய ஆயிரம் ரூபாய்ப் பரிசுத் திட்டம் தமிழ் நாட்டுக்குப் பல உயர்தர நாடகங்களை அளித்துள்ளது. பிரபல நாடகங்களை அச்சியற்றி புத்தக உருவில் பிரசுரித்து அமெச்சூர் நாடக சபைகளுக்கு அன்னார் அரிய உதவி செய்துள்ளார்கள் இன்னும் நாடகக் கலை வளர்ச்சியை ஆராயும் மாநாடு, தமாஷா வரி எதிர்ப்பு இயக்கம் முதலியவைகளில் முன்னின்று வழி வகுத்துள்ளார்கள். வருங்கால நாடகக் கலை வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள நாடகக் கழகத்தை வலுப்படுத்துவதில் சகோதரர்கள் விசேஷ சிரத்தை காண்பித்து வருகிறார்கள்.

"நடிப்புடன் பண்பாடும் பயிற்றுவித்தல்,, தொழில் ஒற்றுமை, நல்லொழுக்கம் மிகுந்த நிர்வாகம், மொழிப் பற்று இவைகளை குணங்களாக அமையப்பெற்ற சகோதரர்கள் தமிழ்ப் பெரு மக்களுக்கு செய்துள்ள சேவை அளப்பரியது. 50-நாடகங்களை அரங்கேற்றி, நன்கொடையாக 300-நாடகங்கள் நடித்துள்ளார்கள். அவர்களுடைய சபையிலே தேர்ச்சிபெற்ற அநேக நடிகர்கள் இன்று சினிமா வானில் சிறந்த நக்ஷத்திரங்களாகச் சுடர் விடுவது கண்கூடு.

"நிதியை விரும்பி சினிமாக் கலையை அவர்கள் பின்பற்றி யிருந்தார்களானால் குறைவற்ற செல்வத்தைக் கண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் சிந்தையில் என்றும் நிலைபெற்ற எண்ணம் நாடகக் கலை வளர்ச்சியே!

"கால் நூற்றாண்டுக்கு மேல் கடத்திவிட்டேனப்பா. எத்தகைய போராட்டம் நிறைந்த சோதனைக் காலம்! என்னிடம் கலைப் பயிற்சி பெற்று தாய்ப் பால் அருந்திய சினிமா நங்கை நிர்க்கதியாக என்னை விட்டுச் சென்று இன்று செல்வத்திலும், பொதுஜன ரஞ்சக மஞ்சத்திலும் புரளுகிறாள். ஊர்தோறும் நல்ல கொட்டகையின்மை, செலவினத் தொல்லை, அரசாங்கத்தின் அசட்டை முதலிய இன்னல்கள் என் உடலை உருக்கி என் இளமையைப் பலி கொள்கின்றன. இத்தகைய நெருக்கடியிலும் என் பக்கத்தே வாழ்நாள் முழுமையும்இருந்து பணிவிடை ஆற்றிவரும் என் செல்வப் புதல்வர்களை நான் மனமாற வாழ்த்துகிறேன்!"

பின்னணிக் குரலில் நாடகச் செல்வி முழங்கிய வாழ்த்தொலி அடங்கியும், மேடையின் எதிரொலி அடங்காததை ரசிகன் கேட்டான். முடிவு நிர்ணயம் பொறாது நீடித்துவரும் வாழ்க்கை நாடகத்தில் ஆவியாய் அலைந்துழலும் நாடகப் பாத்திரமாகிய அவளுக்கு எதிர்காலம் வைத்திருப்பது என்ன?

சோதனைக் கட்டம் சமைக்கும் விதியும், அதன் கூட்டாளியாக இயங்கும் கதாசிரியனும் மேடையில் வாடும் கதாநாயகி கமலத்தின் துயரங்களுக்குச் சுலபமாக முற்றுப் புள்ளி வைத்து விடுவார்கள். ஆனால், உரிய பராமரிப்பின்றி, 'இனியும் கதி மோட்சம் பிறக்குமா?' என்று முறையிடும் **தமிழ் நாடகச் செல்வி**யைக் காப்பாற்றி உய்வு தர அனுசரணையான சமூகமும், சகோதரர்கள் போன்ற அரிய கலைஞர்களும் தேவை.

★


Ruia
fabrics
BEST VALUE FOR THE MONEY
Sarees, Mulls, Voiles, Prints, Shirting, Poplins, Hair Cord, Grey Sheeting, Checks, Drills, Coatings, Bleached Long Cloth, Bed Ticks.
HOSIERY : Vests, Drawers, Socks, Hosiery Cloth.
YARNS : Single & Double from 3/4's to 60's. Sewing Threads & Embroidery Threads.
MERCERISED : 2/12's & 2/60's
Phoenix MILLS
BRADBURY MILLS
DAWN MILLS
Managing Agents : RAMNARAIN SONS LTD., IMPERIAL BANK BUILDING, BANK STREET, FORT, BOMBAY.
SISTA'S RN-I.

# தமிழ் வளர்க்கும் பெரியார்— டி. கே. சி.

கே. வஸந்தா.



தமிழில் சுவைத்துச் சுவைத்து அனுபவிக்க நிறையக் கவிதைகளும், பாட்டுக்களும் உள்ளன. இன்று தமிழ் நாட்டில் பாட்டுக்களையும் கவிதைகளையும் அனுபவிப்பவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர். ஆனால் இது நல்ல ரஸமான கவி, இது வெறும் அர்த்தமற்ற சொல்லடுக்குகள் என்றிவ்வாறு நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்தவர் இன்று தமிழ் நாட்டில் ஒருவர் உண்டென்றால் அவர் வேறு யாருமல்ல; டி. கே. சி. அவர்கள்தான்.

தமிழ் இலக்கிய ரஸிகர்களிடையே டி. கே. சி. அவர்கள் வகிக்கும் ஸ்தானம் மகத்தானது. டி. கே. சி. என்ற மூன்று எழுத்துக்கள் தமிழ் நாட்டிலே பிரசித்தம். தென்காசியிலுள்ள களங்காடு இவருடைய பூர்வீகமான ஊர். தென்காசியில் வதிந்துவந்த தீத்தாரப்ப முதலியார் இவருடைய தந்தையாவார். ஆகவே, இவருடைய உண்மைப் பெயர் க. தி. சிதம்பரநாத முதலியார். ஆனால் 'கே'யும், 'டி'யும் இடம் மாறி இன்று டி. கே. சி. என்று நிலைத்துவிட்டது.

கம்பர் இராமாயணம் பாடிப் பல வருஷ காலம் ஆகிவிட்டது. இத்துணை காலத்திற்குள் எத்தனையோ பேர் கம்பனைப் படித்து அனுபவித்துள்ளார்கள். எல்லா பாஷைகளிலும் பாண்டித்யம் பெற்ற வ. வே. சு. ஐயர், கம்பனை ஹோமர், தாந்தே, ஷேக்ஸ்பியர் முதலிய பல மேல்நாட்டு கவிகளோடு ஒப்பிட்டு, கம்பன் எல்லோருக்கும் பேரரசன் போல் விளங்குபவன் என்று கூறினார். டி. கே. சி. அவர்கள் கம்பன் கவிதையைப் படித்த விதமே வேறு. டி. கே. சி. கம்பனைத், தான் படித்து அனுபவித்தது மாத்திரமல்லாமல் மற்றவர்கள் அனுபவிக்கும்படி செய்தார். டி. கே. சி. கம்பன் கவிதையாகிய தேனிலே தோய்ந்து ரீங்காரம் செய்கின்ற வண்டுபோல் பாடிப் பாடி ஆனந்தமடைவார். நாம் ஒரு பாட்டைப் பன்முறை கேட்டுச் சுவைத்ததாய் இருப்பினும், அதேபாட்டை டி. கே. சி. யின் வாயிலாகக் கேட்கநேரிடின் அது உணர்ச்சி மிகுந்ததாயிருக்கும். அவர் கம்பனைப் படித்துவரும்போது பலபாட்டுக்கள் மிகப் பிரமாதமாயிருந்தன. ஒரு சில மிக மட்டமாயிருந்தன. பின் அவர் சிறந்த பாகத்தையே முறையாய்ப் படித்து ஆராய்ந்து, மட்டமான பாகங்கள் பிற்காலத்தில் பலரால் இயற்றிச் சேர்க்கப்பட்டவை என நினைத்து அச் செருகு கவிகளை நீக்கி மற்றுமுள்ளவைகளில் தகுந்த திருத்தங்கள் செய்தார்.



பரதநாட்டியம் ஒரு சிறந்த கலை. எல்லோரும் அதைக் கற்றுக்கொள்ளலாம் எனப் பிரசாரம் செய்தவர்களில் முக்கியமானவர் டி. கே. சி.

---

வருடந்தோறும் சங்கத்தின் ஆதரவில் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் கட்டுரைப் போட்டி நடைபெறுகிறது. கடந்த நான்காண்டுகளில் அப்போட்டிகளில் முதற் பரிசு பெற்ற கட்டுரைகளில் சிலவற்றைச் சுருக்கி வெளியிடுகிறோம்.

## ஆம்!

உங்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த,

கலைக் கண்களை மகிழ்விக்க,

கருத்துக்கு விருந்தளிக்க,

கலாசாரத்துக்குச் சான்று கூற

## ஏடுகளால் கூடுமா?

## ஆம்!

என்பதுபோல்
இக்கேள்விக்குப்
பத்திரிகை உலகம்
தரும் பதில்:

# விந்தியா

(மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.)

★ கலை, இலக்கியம் முதலிய துறைகளில் தமிழனின் தாகத்தைத் தணிக்க வல்லது!

★ அறிவு, உணர்ச்சி, அனுபவம் — மூன்றையும் ஈடுபடுத்தி, பண்பாட்டை உயர்த்த வல்லது!

★ வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையே இணைப்புப் பாலமாக உதவ வல்லது!

தனிப் பிரதி அணா 4. — வருட சந்தா ரூ. 3.

ஆசிரியர்: ஆர். வி. ராகவன்.
கூட்டாசிரியர்: ரெ. முருகையா.

208, HIMALAYA HOUSE
PALTON ROAD, BOMBAY 1.

டி. கே. சி. நல்ல சைவர். சமய தத்வங்களைப்பற்றி நன்றாக விளக்கிக் கூறும் இவரது முருக பக்தி, முத்தொள்ளாயிரம் ஆசிரியரது பக்தியைவிட பன்மடங்கு அதிகமானது என்றால் அது மிகையாகாது.

இன்று அவர் பெயரால் நான்கைந்து புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவை இதய ஒலி, கம்பன் யார்?, கம்ப ராமாயண பதிப்பு, முத்தொள்ளாயிரப் பதிப்பு முதலியன. அவருடைய நூல்களைப் படிக்கும்போது அவரது வீர உணர்ச்சி, தமிழ் வசன நடை முதலியன நன்கு புலப்படும். 'கம்பன் யார்' என்ற கேள்விக்குப் பதில் அளிக்கக்கூடியவர் அவர் ஒருவரே. முத்தொள்ளாயிரம் ஒரு அருமையான நூல். இதில் ஏறக்குறைய எல்லாப் பாகங்களுமே கிடைக்காவிடினும், ஒரு சில பாட்டுக்களை நாம் அனுபவிப்பது டி. கே. சி. யின் பெரு முயற்சியாலேயே.

தமிழுக்காகப் பாடுபடுகிற டி. கே. சி. பண்பு நிரம்பப் பெற்றவர். "அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவையிரண்டும் பண்புடைமை" என்னும் வழக்கு. இக்குணங்கள் அமைந்துள்ள இவரை 'தமிழ் நாட்டின் தாகூர்' எனலாம். தமிழ் நாட்டிலே இவரைப் போன்ற ஒரு சில பெரியார் அவ்வப்போது தோன்றி, தமிழின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதால்தான் அது இன்று தழைத்தோங்கி நிற்கின்றது.




★ ACCURATE

★ ROBUST

★ DEPENDABLE




The Finest Precision -Engineered Meters.. now made in India

JAIPUR
WATT-HOUR METERS
TESTED AND PASSED BY THE GOVERNMENT TEST HOUSE ALIPORE

Manufactured by:
JAIPUR METAL INDUSTRIES LTD,
JAIPUR

Selling Agents:
KAMANI ENGINEERING CORPORATION LIMITED.
KAMANI CHAMBERS, NICOL ROAD, BALLARD ESTATE, BOMBAY.

Enquiries for Dealership

solicited.

*Space Donated By*

# THE EASTERN CHEMICAL CO., (INDIA),

Props: **J. K. Chemicals Ltd.,**

J. K. BUILDING, DOUGALL ROAD, BALLARD ESTATE,

**BOMBAY.**

*MANUFACTURERS OF:*

**Heavy Chemicals viz:—**

**Superphosphate, Acids, Mag. Sulph. and**

**Quality Disinfectants etc.**

**Leading House For Health & Vitality**

# B. TAMBE LTD.

Our cheap and vitaminised Vegetarian dishes
(101 varieties from 1 anna to Re. 1, to suit every taste)
have been favourite with South Indians.

Visit once and you will relish our unique specialities like hot milk,
butter milk, curd, tomato soup, vegetable salad,
fruit juices, salads, aerated waters, Tea,
Coffee and snacks etc.

**Full Tiffin ... As. 12.** **Special Lunch ... Re. 1.**

**B. TAMBE LTD.**

NEAR OLD FORT SHARE BAZAR, HAMAM STREET, FORT, BOMBAY.

**General Manager: BALACHANDRA V. JOSHI.**

*Our other 3 Branches:* 1. Near Thakurdwar tram junction.
2. Cona Restaurant, Opp. Majestic Cinema, Girgaum.
3. Income Tax Office, A. G.'s Office, Queens Road.




# பெண்கள் கடமை

**பி.வி. ஜானகி**

உலகில் ஆணின்றி பெண்ணும், பெண்ணின்றி ஆணும் வாழ்வதியலாது. பொறுமை, அடக்கம், அழகு, தியாகம், பரநலம் இரக்கம் முதலியவையே பெண்மையாகும். பெண்கள் எக்காலத்திலும் எப்பருவத்திலும் செய்யவேண்டிய கடமைகள் சில உள. அவைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

மகள் :— பேதமின்றிப் பழகி, பெற்றோருக்கு சிசுருஷைகள் செய்து, நற்பழக்கங்களையும், உலகானுபவங்களையும், கல்வியறிவையும் விருத்திசெய்து கொள்ளவேண்டும்.

சகோதரி :— பிறரது மனப் பான்மையை அறிந்து ஒற்றுமையை, வளர்த்து, அவர்களுடைய இன்ப துன்பங்களை உணர்ந்து நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மனைவி :— அடக்கம், தாம்பத்திய அன்பை வளர்த்தல் முதலியன ஒரு பெண்ணுக்கு இன்றியமையாதது. கருத்தொருமித்து இல்லறத்தை நடத்தி, சிக்கனமாக இருந்து, விருந்தினரை உபசரிப்பதும், கணவனுக்கு துன்பம் நேரிடின் அதைத் தானும் பகிர்ந்து கொண்டு இன் மொழிகள் கூறி ஆற்றவேண்டியதும் அவளுடைய கடமை. வீடு நன்மைபெறுவதும், தீமையடைவதும் அவளாலேயே.

தாய் :— உலகில் பெண்ணால் உண்டாகும் பல நன்மைகளில் பெரும்பகுதி அன்பின் தெய்வமான தாய்ப் பருவத்திலேயே உண்டாகிறது. நல்ல தாயாக இருந்து நல்ல சந்ததிகளைத் தருவது இப்பருவமே. தாயைத் தெய்வமாகத் தொழ வேண்டும். தாயின் அன்பைவிடச் சிறந்தது உலகில் வேறொன்றுமில்லை. தாய், தான் கற்ற நற்பழக்கங்களைத் தன் மகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். மன ஒற்றுமையைத் தன் மகளுக்கும், மருமகளுக்கும் இடையே ஏற்படுத்த வேண்டும். 'தற்காலப் பாலர்களே வருங்காலப் பெரியோர்கள்' ஆகையால் அப்பாலர்களைப் பெரியோர்களாக்கி, நல்ல கீர்த்தி அடைவதற்கு வேண்டிய சத்போதனைகளையும் நீதி மார்க்கங்களையும் கற்றுத் தரல் வேண்டும்.



ஆண்டாள் நன் மகளாகவும், திலகவதியார் நல்ல சகோதரியாகவும், வாசுகியம்மையார் உத்தம மனைவியாகவும், கௌசலை, சுமித்திரை முதலியவர்கள் நல்ல தாய்மார்களாகவும் இருந்து உலகினுக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

சகோதரர்களே! உங்களை ஈன்றதும் பெண், உங்களோடு பிறந்தவளும் பெண், உங்களை வளர்த்தவளும் பெண், உங்களோடு வாழ்பவளும் பெண். பெண்ணே உங்களைப் பலவிதத்திலும் முன்னேற்றம் அடையச் செய்கிறாள். 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்ளுவதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' என்ற பாரதியாரின் வாக்கின்படி பெண்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கி நமது நாட்டையும் உங்களது வாழ்க்கையையும் முன்னேற்றம் அடையச் செய்வீர்களாக! ★


எங்கள் குழலோசை
எல்லோர்க்கும் இனிமை தரும்
ஜெமினி ஸ்டூடியோஸ்
சென்னை

# பாரதியார்



ஆர். கமலவிஜயம்

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மகாகவிகள் அவதரிப்பது வழக்கம், என்பது முதுமொழி. அதையொட்டிக் கவிச் சக்ரவர்த்தி கம்பனுக்குப் பிறகு தமிழ் நாட்டிலே தோன்றியவர் மகாகவி பாரதியார்.

தமிழகத்தின் வான வெளியிலே பாரதிப் பரிதி தோன்றுமுன் தமிழகம் அந்தகாரத்தில் அழுந்திக் கிடந்தது. பாஷாபிமானம், தேசாபிமானம் முதலியன இல்லாதிருந்தனர் மக்கள். ஆங்கில மோகினிக்கு அடிமைப்பட்டுத் தாயை மறந்திருந்தனர். சுதந்திர வேட்கை வற்றிப் போயிருந்தது. அடிமை வாழ்விலே அவர்கள் ஊறிப் போயிருந்தனர். ஆனல் கவிக்குயில் கூவ ஆரம்பித்ததும் "புன்மையிருட்கணம் போயின யாவும்." பாரதியார் தனது வீரம் நிறைந்த பாக்களால் நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை ஊட்டினர்; கனல் மூட்டினர்; கோழைப்பட்ட ஜனங்களுக்கு உண்மைகள் கூறினர். புல்லடிமைப் பட்ட மாந்தருக்குச் சுயபுத்தி வரச் செய்தார். பாரதி தனது மணியான வீர வாக்கினைக்கொண்டு புதியதொரு தமிழ்ச் சமுதாயத்தை—இல்லை, புதிய தமிழ் நாட்டையே – படைத்து விட்டார்! பாரதியின் கூரிய வாசகங்கள் தோளை வலியுடைத் தாக்கி உடற்சோர்வு பிணிபல போக்கி, உடல் உறுதி தந்து நம்மை ஊக்கவல்லன; காக்க வல்லன. பாரதியின் புத்துயிர் தரவல்ல சஞ்சீவிச் சொற்கள் தமிழ் ஜாதிக்கு உயிர் ஊட்டின; தீர மீந்தன; வீரம் தந்தன; தமிழரைத் தமிழராக்கின. பாரதியின் பாடல்களை நினைத்தாலே உள்ளத்திலே வீர வெள்ளம் பெருகும். "உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை" என்ற திடமனம் தோன்றும். பாரதி பாடலை யாரேனும் பாடுவதைக் கேட்டாலோ — இன்பத் தேன் வந்து காதிலே பாயும்; மூச்சிலே ஒரு சக்தி பிறக்கும்.

பாரதியின் தேசாவேசம் நம்மால் நினைக்கவும், சொல்லவும், எழுதவும் இயல வொண்ணதது. "வந்தேமாதரம்" என்றால் வாய் பூட்டப் பட்டிருந்த அக்காலத்திலேயே வள்ளிசாக முழு விடுதலையையும் வாங்க முயன்றார் நம் கவி. அவர் வேண்டியது வீர சுதந்திரம். "கட்டென்பதை வெட்டென்போம்," 'அண்டம் சிதறினும் அஞ்சிடோம்', 'குன்றெனத் தலைநிமிர்'; 'கொடுமை எதிர்த்து நில்' – இவை பாரதி மந்திரங்கள். 'நாடு முழுவதும் ஒரே ஜாதி; ஒரே குடும்பம்;' "ஏழை என்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்" "மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்" 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்' – என்பன அவர் கொள்கை.

பாரதியார் ஆண்களுக்கு ஆண்மையும், பெண்களுக்கு விடுதலையுமீந்தார். பெண்களும், ஆண்களும் சமமானவர்களே என்பதை நிரூபித்தார். அவர் பாடல்கள் இதைத் தெளிவுறுத்துகின்றன.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்"**
**"மாதர் தம்மை யிழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்"**

பாரதியார் நவரசங்களையும் ஊட்டுகின்ற முறையிலே வெகுலாவகமான முறையையே கையாளுவார். தெளிந்த தமிழில் தெளிவுற மொழிதல், ஆழ்ந்த கருத்து, கருத்தினை வருத்தமின்றித் தெரிவிக்கும் ஆற்றல்—இவை பாரதிவாக்கின் இயல்பு. நடை சிற்ப நடை.



சின்னஞ் சிறு வாக்கியங்கள். உவமைகளோ வாழ்க்கையோடு ஒட்டிய எளிய உவமைகள். பாடல்களுக்கு மெட்டுப் போடுகின்ற வகையினும் புரியும்படியான மெட்டுக்களையே கையாளுவார். பாரதி பாடல்களைப் படித்துச் சுவைக்க அகராதியைப் புரட்ட வேண்டிய அவசியமே ஏற்படாது. அவர் கவிதை ஆழமும், கரையும் காணமுடியாத பெருங்கடல். 'அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதுமில்லை.'

காலக் கனலிலே உருகிய தமிழ் கரடு முரடு நீங்கித் துரிசின்றி மாற்றேறி இப்பொழுது பாரதியாரால் சொக்குப் பொன்மணி மாலைகளாக்கப் பட்டு தமிழ்ச் சமுதாய தேவிக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணிமாலை, பாரதி அறுபத்தாறு, குயில், பாஞ்சாலி சபதம், முரசு, பாப்பாப் பாட்டு, ஆத்திசூடி முதலியன பாரதியின் கவிதைகள். எளிய சொற்கள், எளிய நடை, பொதுமக்களால் விரும்பப்படும் மெட்டு இவைகளமைந்த ஒரு காவியம் பாரதியின் பாஞ்சாலி சபதம். இது பெண்ணுரிமைக்கும் ஒரு வீரச் செங்கோல் போன்றது. மன்றிலே பாஞ்சாலி செய்யும் சபதம் பெண்ணடிமைப் பேயை நடு நடுங்கச் செய்கிறது.

பாரதியின் புதிய ஆத்திசூடி, ஔவையின் பழைய ஆத்திசூடியைத் தழுவிஎழுதப்பட்டிருந்த போதிலும், இதிலே புதுமையும் வியப்பும் தரக் கூடிய அநேக மனோபாவங்களைக் காணலாம்.

பாரதியின் வசனமும் கவிதையைப் போன்றே நம் மனத்தை அள்ளக் கூடியது. தராசு, ஞான ரதம், சந்திரிகைக் கட்டுரைகள், கீதை மொழி பெயர்ப்பு முதலியன அவரது வசன நூல்கள். தமிழ் இலக்கியத்தின் மூலமாகத்தான் தமிழர்கள் மனதைப் பண்படுத்த முடியும் என்பதை நன்குணர்ந்திருந்தார், பாரதி.

பாரதியார் எதிர்காலத்திலே பல நூற்றாண்டுகள் பெருமையுடன் மதிக்கப்படப் போகும் கவிகளுள் சிரேஷ்டமானவர். இதை நினைத்துப் பெருமைகொள்வோமாக. ★






ஒரு நாட்டின் நாகரீகத்தை அறிந்து கொள்ள அங்குள்ள பத்திரிகைகளும், அவற்றின் வளர்ச்சியும் துணை புரியும். இந் நாட்களில் தேச முன்னேற்றத்திற்குப் பத்திரிகை அவசியமானது. ஆகவே, தேச நலனையொட்டிய ஆபாசமற்ற பத்திரிகைகள் வரவேற்கத் தக்கவை. அவைதான் மக்களது ஆதரவினால் வளரும். பணத்தை மாத்திரம் குறிக்கோளாகக்கொண்டு, கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டிக் கவரும் பத்திரிகைகள் விருத்தியடையா.

இப்போதெல்லாம் நாளுக்கொரு தமிழ்ப் பத்திரிகையாக வெளிவருகின்றன. அவைகளில் பல கண்ணியமான பாதையில் செல்லாத காரணத்தினாலோ என்னவோ, முதலில் மக்களைக் கவர்ந்தாலும் போகப் போக வாசகர்களின் ஆதரவை இழந்து 'குழந்தைச் சாவு'க்கு உள்ளாகின்றன.

வாழும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு இன்று வாய்ப்பு அதிகம். கடல் கடந்த தமிழ் மக்கள் வசிக்கும் மலேயா, இலங்கை, பர்மா போன்ற வெளிநாடுகளில் அவை விற்பனையாகின்றனவல்லவா?



தமிழில் பல நூற்றாண்டுகட்கு முன்பே பத்திரிகைகள் வெளி வர ஆரம்பித்துள்ளன எனத் தெரிகிறது. இன்று சுமார் முந்நூறு தமிழ்ப் பத்திரிகைகள்-தினசரி, வாரப்பதிப்பு பட்ச வெளியீடு, மாதமொரு முறை என்று – உலவுகின்றன. இவைகளில் சில முதலாவது சொல்லப் பட்டது போல் ஆரம்பித்து, கடைசியில் கூறப்பட்டது போல் ஆகி, பின்னர் அஞ்ஞாத வாசத்தில் மறைந்துவிடுகின்றன.

தமிழ்ப் பதிப்புகள், அரசியல், தொழில், சமூகம், அறிவியல், ஆராய்ச்சி என்ற துறைகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை. குழந்தைகளுக்குப் பாலூட்டுவதுபோல் அறிவையூட்டும் குழந்தைப் பத்திரிகைகள் நிறைய வெளிவருகின்றன. இன்னும் அமெரிக்க 'வாசகர் விருந்து' (Readers Digest) போன்ற முறையில் வெளிவருபவை அறிவைச் சாறு பிழிந்து தரும் தன்மையில் பணியாற்றுகின்றன.

அறிவை வளர்க்கும் உயர்ந்த வெளியீடுகள் சிறுவர்கள் மனதைப் பண்படுத்தும் சிறிய குழந்தைப் பதிப்புகள், நாட்டு நலனையே பேணி ஆக்கும் தன்மையில் எழுதப்படும் அரசியல் அபிப்பிராயங்கள் – இவைகள் தேசத்தின் முன்னேற்றத்தைப் பறை சாற்றுகின்றவை. இப்படிப் பல தமிழில் உள்ளன. இது மகிழ்ச்சியேதான்.

கலைச் செல்வங்களின் அழகை எளிதில் உணரும்படியான சித்திர விளக்கங்கள், அவ்வப்போது வெளியிடப்படும் நூல்களைப் பற்றிய அப்பட்டமான விமரிசனங்கள், இலக்கிய நிதிகளை யாரும் அனுபவிக்கும்படி எடுத்துச் சொல்லும் கட்டுரைகள் எல்லாம் மக்களின் நாகரீக உணர்ச்சியையும் அறிவுத்திறனையும் மேம்படுத்தும். இவையும் தமிழ்ப் பத்திரிகைகளில் காணப்படுவது இன்பமாக இருக்கிறது.

தமிழில் பத்திரிகைத் துறை நிச்சயமாக நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இன்னும் வளரவேண்டும் என்பது என் ஆசை. அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளைப் போல தமிழ் நாட்டிலும் பத்திரிகைகள் உத்தமமான ஸ்தானத்தை, இன்றல்லவேனும், இன்னும் சில வருடங்களில் அடைந்துவிடும். இதை அடையச்செய்வது நம் கையில்தான் இருக்கிறது! ★

**கலையென்று ஆரம்பித்து, வெறும் வியாபாரத்தில் முடிந்து, அதில் மோகமும் துர்கடத்தையும் புகுந்து விடுவது இந்த யுகத்தின் நிகழ்ச்சி முறை. இதற்கு இடங் கொடுக்கக் கூடாது.**

**— ராஜாஜி.**

# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்,

## மாதுங்கா.

**தோற்றம் :** உத்யோக வாழ்க்கையை முன்னிட்டு பம்பாயில் குடியேறிப் பெருகிய தென்னிந்திய சமுதாயத்தின் ஆரம்ப காலக் கண்ணோட்டம் அத்யாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் ஊன்றியது. ஆன்மீகத்தைப் பரப்பும் பஜனை சமாஜங்களும், கல்வி போதிக்கும் பள்ளிக்கூடங்களும், இசையைப் போற்றும் சங்கீத சபைகளும், கலை வளர்க்கும் நாடக சபைகளும் முதலில் தோன்றின. ஆயினும் தமிழர்களின் இலக்கிய ஆர்வத்தை வளர்க்கும் தனிச் சபை ஒன்று வெகு நாளையத் தேவையாக இருந்து வந்தது. இவ்வாறு பம்பாய்த் தமிழர்களின் பாஷாபிமானத்தை அஸ்திவாரமாகக் கொண்டு 1940ம் ஆண்டு பம்பாய்த் தமிழ்ச் சங்கம் உதயமாயிற்று. முதல் நான்கு வருட போராட்ட காலத்திற்குப் பின்னர் 1945ல் ஸ்ரீ எஸ். வெங்குஸ்வாமி, ஸ்ரீ ரா. பத்மநாபன், ஸ்ரீ எஸ். கந்தஸ்வாமி போன்ற உற்சாகிகளின் முயற்சியால் குடத்திலிருந்த விளக்கு குன்றின்மேல் உயர்ந்தது.

மணிக்கொடி ஸ்ரீ கு. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ எஸ்.எ. ஐயர் இருவரும் தலைமைப் பதவியும், ஸ்ரீ சுபஸ்ரீ காரியதரிசிப் பதவியும் ஏற்றுப் பணிபுரிந்த வருடங்கள் சங்கம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிய பொற்காலம் என்று கூறவேண்டும். இவ்வருடம் பொறுப்பு ஏற்றுள்ள ஸ்ரீ ஏ. என். சட்டநாதன் தலைமையிலும் சங்கத்தின் சேவை பல துறைகளில் விரிந்து, அதன் பெயர் வியாபகமடையத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கூட்டங்கள் :** பன்னிரண்டு ஆண்டுகளாகச் சங்கம் இலக்கியத்திற்கும், கலைக்கும் பணி ஆற்றி வருகிறது. சங்கத்தினர்கள் பேச்சு அபிவிருத்திக்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஞாயிறு தோறும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இலக்கியம் என்ற மட்டில் தமிழ் மொழியுடன் மட்டுமின்றி பாரதத்தின் பிற பாஷை இலக்கியங்களுக்கும் சங்கத்தின் பிரசங்க மேடை இடந்தந்து வருகின்றது. திரை, புத்தக விமர்சனங்கள், பிரயாண அனுபவங்கள், எங்கள் தொழில் முதலிய தலைப்பில் நடைபெறும் தொடர் கூட்டங்கள் ரஸிகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. இன்று சங்கத்தில் சிறந்த பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் அங்கம் வகிப்பது பெருமைக்குரிய விஷயம்.

**விழாக்கள் :** வருடப்பிறப்பு, பொங்கல் முதலிய நன்னாட்களையும், சுதந்திரதினம், காந்தி ஜெயந்தி முதலிய தேசீய விழாக்களையும் அனுஷ்டிப்பதோடு, "என்றும் உள தென் தமிழ் இயம்பி இசைகொண்ட" இலக்கிய கர்த்தாக்களாகிய வள்ளுவர், கம்பர், பாரதி முதலியவர்களது விழாக்களையும், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலியவர்களது நினைவு நாட்களையும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. தங்களது சிறந்த இலக்கிய சிருஷ்டிகள் மூலம் தமிழ் மொழிக்கு, சிரஞ்சீவித்துவம் அளித்துள்ள எண்ணிறந்த புலவர்கள் எல்லோரையும் இணைத்துப் "புலவர் தினம்" கொண்டாடப்படுகிறது. இத்தகைய விழாக்களுக்குப் பெரும்பாலும் தமிழ் நாட்டினின்று சிறந்த அறிஞர்களை வரவழைத்து அவர்களது கருத்துச் செறிந்த பிரசங்கங்களைக் கேட்கும் வாய்ப்பைப் பம்பாய் வாசிகளுக்கு ஏற்படுத்தித் தந்து வருகிறது. தவிர, விழாக்களை ஒட்டி நிறுவப்படும், தமிழ்ப் பத்திரிகை, புஸ்தகக் கண்காட்சிகள் கண்களுக்கும், அறிவிற்கும் சிறந்த விருந்தளிப்பவை.

விழாவின் போது பாரதி, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பெயரால் நடைபெறும் வியாச, பிரசங்க, சங்கீதப் போட்டிகள் பம்பாய் மாணவ மாணவிகளிடையே தமிழார்வத்தைப் பரப்பி வருகின்றன.

**உதவி நிதிகள் :** தமிழ் நாட்டில் இலக்கிய சம்பந்தமாக திரட்டப்படும் உதவி நிதிகளுக்கும், பாரதி, வ. உ. சி. ஞாபகார்த்தப் பணிகளுக்கும் சங்கம் நிதி வசூலித்து அனுப்பியுள்ளது. சமீபத்தில் தமிழ் நாட்டுப் புயல் நிவாரண நிதிக்கு ரூ. 9000 வசூலித்து அனுப்பியது சங்கத்தின் இலக்கிய விழிப்பு சமூக நலனைப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ளதை உணர்த்தும்.

இலக்கியத்தை முறையாகப் பயில விரும்பிய அன்பர்களுக்காக திருக்குறள், பெரிய புராண வகுப்புகள் நிகழ்த்தப்பட்டன.

பம்பாய்க்கு விஜயம் செய்யும் தமிழறிஞர்களை வரவேற்று கௌரவிப்பதின் வாயிலாக சங்கம் தனது 'தமிழ்ப் பண்பைத்' தெளிவாக்குகிறது. ஏற்கனவே உள்ள இதர வடநாட்டுத் தென் னிந்திய ஸ்தாபனங்களுடன் உள்ள நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் புதிய முயற்சியாக சங்கம் இவ்வாண்டு 'தமிழ் மகாநாடு' கூட்டத் திட்ட மிட்டுள்ளது.

ரஸிகர்களது பல்வேறு சுவைக்கும் ஏற்ப ஏராளமான தமிழ் நூல்கள் அடங்கிய புத்தக சாலை சங்கத்தின் பிரதான அம்சம். புத்தக ஜாபிதா அடங்கிய 'நூல் நிலையப் பட்டியல்' ஒன்றும் சமீபத்தில் பிரசுரமாகியுள்ளது. தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் பல, சங்கத்திற்குப் பிரதிகள் அனுப்பி வருவது பாராட்டுதற்குரியது.

இலக்கிய கர்த்தாவும், கப்பலோட்டிய தீரரு மான வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களது நினைவின் நிரந்தரச் சின்னமாக பல அறிஞர்களது கட்டுரைத் தொகுப்புகள் கொண்ட நூல் ஒன்று சங்கத்தின் முதல் வெளியீடாக மலர்ந்தது. 1952ல் நாடக விழாவை ஒட்டி பிரசுரிக்கப்பட்ட நாடக விழா மலரும் இலக்கிய மதிப்பு மிகுந்த தாகப் பத்திரிகைகளில் பாராட்டப்பட்டது.

தமிழின் மூன்றும் கிளையான நாடகக் கலையை வளர்க்கும் ஆர்வத்துடன் சங்க அங்கத் தினர்களால் சமூக நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சிறந்த நடிகர் களைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட நாடகங்கள் சங்கக் கட்டிடத்திற்கு நிதி அளித்ததுமின்றி, தமிழ் நாடகக் கலை மாளிகையினையே பம்பாயில் நிர்மாணம் செய்திட்ட பெரு நிகழ்ச்சிகளுமாகும்.

இவ்வாறு கலை, இலக்கியம் இவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் ஒன்று இல்லாதிருப்பது பெருங் குறையே. பயனுள்ள திட்டங்களை உரு வாக்கி விரிவான அளவில் தொண்டாற்றுவதற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்று என்றுமே இன்றி யமையாததாகும். இப்புனித முயற்சியில் இறங்கி, கட்டிட நிதி திரட்ட முற்படும் சங்கத்தின் லக்ஷியத்தை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு பம்பாய்த் தமிழர்களது தலையாய பொறுப்பு. ★

## பம்பாய்த் தமிழ்ச் சங்கம்,

**மாதுங்கா.**

★

### 1953-ம் ஆண்டு நிர்வாகிகள்.

★

*தலைவர்:*

ஸ்ரீ ஏ. என். சட்டநாதன்

*உப தலைவர்கள்:*

ஸ்ரீ டி. வி. ராமானுஜம்

,, ஸி. எஸ். நாயர்

*செயலாளர்கள்:*

ஸ்ரீ எஸ். கந்தஸ்வாமி

,, ரெ. முருகையா

*பொக்கிஷதார்:*

ஸ்ரீ டி. எஸ். ஹரிஹரன்

*நூல் நிலைய நிர்வாகிகள்:*

குமாரி ஆர். கமலவிஜயம்

,, கே. வசந்தா

*நிர்வாக அங்கத்தினர்கள்:*

ஸ்ரீ எஸ். ஏ. ஐயர்

டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன்

ஸ்ரீ வி. ஆர். சுப்ரமண்யம்

,, கே. ஜி. பரமேஸ்வரன்

,, வி. சாமி

,, டி. டி. செல்லதுரை

ஸ்ரீமதி பத்மா கிருஷ்ணஸ்வாமி

*தணிக்கையாளர்:*

ஸ்ரீ எஸ். சுந்தரேசன்

**RELEASING SHORTLY ALL OVER INDIA**

NARGIS

VIJAYLAXMI

RAJKAPOOR

& PRAN

R.K FILMS

# "AAH"

**AVAN**
(Tamil)

**PREMALEKALU**
(Telugu)

*Directed by*
RAJA NAWATHE

*Music by*
SHANKER JAIKISHAN

*Produced by*
**RAJ KAPOOR**

*Our Next:* BOOT POLISH ★ GHAAT ★ PHAGUN ★ AJANTA

**THE ALL INDIA FILM CORPORATION LTD.**



VISIT OUR SHOP

for

**DELICIOUS SPECIALS:**

Best

- ★ Coimbatore Butter
- ★ "Saldanha" Coffee Powder
- ★ Sambar, Rasam Powders
- ★ Special Scented nuts
- ★ Fresh Pickles
- ★ Toilets & Perfumeries
- ★ Marikolundu Scents
- ★ Condiments of all Sorts
- ★ Appalams, Vathal, Vadams etc.

**KAMALA STORES,**

MARKET, MATUNGA G. I. P.

(Near Station)

BOMBAY 19.

# விளம்பரக் கலை

"நான் பேச ஆரம்பித்தால் அவ்வளவு தான், ஆயிரக்கணக்கான மக்கள் என்னையே உற்று நோக்குவர். எனது பொன் மொழிகளைப் பொட்டலம் கட்டிக் கொள்வர். எத்தனை பூமாலை. எத்தனை உபசாரம். இத்தனையும் என் அறிவால், ஆற்றலால்" — பேச்சாளர்.

"என் பேனா முனை ஈட்டியின் முனையை விட கூர்மையானது! சர்க்காரையும் சமூகத்தையும் கண்டு அஞ்சுவது கிடையாது. என்னுடைய எழுத்துக்கள் அத்தனையும் முத்துக்கள் என்று ஒரு பத்திரிகை எழுதியுள்ளது. என்னைப்போல் வசனகர்த்தா எவருமில்லை என்று எல்லோரும் கூறுகிறார்கள். நான் வளர்ந்து விட்டேன். எண்ணத்தால், எழுத்தால்." — எழுத்தாளன்.

"தமிழகத்தில் என்னைப் போல் அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்க யாரும் இல்லை. நான் தான் நடிக்கப் பிறந்தவன். கலைஞனாகி விட்டேன். திறமையினால், தீப்பொறிப் பேச்சினால்!" — நடிகன்.

## பாலு சகோதரர்கள்

சர்வமும் விளம்பர மயம் என்பார்கள். 'விளம்பரம் தான் வியாபாரத்திற்கு முதுகெலும்பு' என்று ஒரு மேனாட்டு மேதை சொல்லுகிறார். விளம்பரம் வியாபாரத்திற்கு மட்டுமல்லாமல் தனி மனிதர்களுக்கும் தேவைப்படுகிறது.

அரசியல் தெரிந்தவர்களுக்கே விளம்பரத்தால் தான் வாழ முடியும் என்ற நிலை வளர்ந்து விட்டது. இந்த சூட்சுமத்தை வியாபாரிகள் உணரவில்லை என்று கூறி விடவும் முடியாது. விளம்பரக் கலை 1622ம் ஆண்டு தான் உதயமாயிற்றென்றாலும் இந்த இருபதாம் நூற்றாண்டில் தான் அது பிரபல்யமடைந்து வருகிறது.

தமிழகம் என்றாலே ஓவியமும் சிற்பமும் நிறைந்த ஓர் கலைக்கூடம்; ஏன், தஞ்சையில் தலைவர் ராஜாஜி அவர்கள் கூறியது போல் 'கலைக் கோயில்' என்று கூடச் சொல்லலாம். ஓவியத்திற்கு உயிரையும் சிற்பக் கலைக்குச் சிறப்பையும் வழங்கிய மன்னர்கள் மறைந்து விட்டார்கள். என்றாலும் அந்தச் சோலையிலே அவர் வழி வந்தோர் உலாவிடத்தான் செய்கிறார்கள். காசைக் கொண்டு வந்து குவிக்கும் காந்தம்! சரக்கை உயர்த்தும் சங்கநாதம்—விளம்பரம். இக்காலத்தில் 'கலையை வளர்க்கிறோம், கலையை வளர்க்கிறோம்' என்று முழக்கமிட்டு மகாநாடு கூடிக் கலைகிறார்கள். கலையை வளர்க்க அல்ல, விளம்பரத்திற்காக. கலையைத் தன்னகத்தே உடையவர்கள் கூட முன்னுக்கு வரவேண்டுமானால், புகழடைய வேண்டுமானால், பொருள் சம்பாதிக்க வேண்டுமானால் விளம்பரத்தால் தான் முடியும். இல்லையேல் குப்பையில் கிடக்கும் மாணிக்கத்திற் கொப்பாகும். கலையே தலையைத் தூக்க வேண்டுமானாலும் விளம்பரம் தேவை. விளம்பரக் கலை ஓங்கி நிற்பதற்கும் ஓவியம் தேவை. ஆம், ஓவியத்திற்கு படித்தவர்களை மட்டுமல்லாமல் பாமரர்களையும் பரவசப்படுத்தும் சத்தி உண்டு. கண் இருப்பவன் ஓவியத்தை உற்று நோக்குவான். மனிதனாக இருப்பவன் அது பற்றிச் சிந்திப்பான்.

விளம்பரமென்பது ஓர் பொருளை உலகமெங்கும் பிரசித்தியடையச் செய்வது. வியாபாரத்தைப் பெருக்க, பிரபல விளம்பரக்காரர்களிடம் கொடுப்பார்கள். அவர்கள் நிபுணர்களைக் கொண்டு பல மாதங்கள் ஆராய்ச்சி செய்து எந்த ஊருக்கு எந்த விதமாய் விளம்பரம் செய்தால் அந்தப் பொருள் அங்கு நன்றாய் விற்பனையாகும் என்று முடிவு கட்டி அதற்கான ஓவியங்களைத் தீட்டிப்


Light on the Road
For the development of transport and communications in India the road is long and dark. But we will traverse it. All our energies and production facilities are directed to putting more and more cars and trucks on the highways and byways of India and thus help to bring light and prosperity even to the remotest villages.
THE PREMIER AUTOMOBILES LTD.
Factory: Agra Road, Kurla
H. O. Construction House, Ballard Estate, Bombay

பத்திரிகைகள் மூலமும், போர்டுகளில் வரைந்து ரயில், ட்ராம், பஸ் மற்றும் வீதிகளில் வைத்தும், சுவரொட்டிகள் ஒட்டியும், அறிக்கைகள் தயாரித்தும் விளம்பரம் செய்வர். விளம்பரத்தில் இரண்டு வகைகள் உண்டு. ஒரு பொருளை விளம்பரப் படுத்த அதைப் பற்றிய சிறந்த தன்மைகளையும், அதனாலுண்டாகும் நன்மைகளையும் தெளிவுபடத் தெரிவிப்பது. இரண்டாவது அப்பொருளின் பெயரைப் பெரிதாக வெளியிடாமல், சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளையோ அல்லது ஏதாவது சுவாரஸ்யமுள்ள, சம்பந்தமற்ற விஷயங்களையோ நிறையப் பிரசுரித்து அடியில் சிறியதாக அப்பொருளின் பெயரும், அக்கம்பெனியின் விலாசமும் குறிப்பிடுவது. அதாவது நம் கவனத்தை அந்தந்த இடத்தில் நிறுத்துவது. மேல்நாட்டில் ஒவ்வொரு பெரிய கம்பெனியிலும்விளம்பர இலாகா ஒன்றிருக்கும். அது அல்லாமல் ஆயிரக் கணக்கான விளம்பர ஸ்தாபனங்கள் இருக்கின்றன. நம் நாட்டில் ஒரு சிலவே உள்ளன.



ஓவியர் ஸ்ரீ அ. பானு



ஓவியர் ஸ்ரீ அ. சீனு

விளம்பரக் கலையில் தான், மேல் நாட்டு சிறந்த ஓவியர்களின் திறமையை நாம் கண்டு களிக்க முடிகிறது. நம் நாட்டிலோ வியாபாரம் பெரும்பாலும் மட்ட ரகமான ஓவிய விளம்பரங்களால் க்ஷீணதிசை அடைகின்றது. மேல் நாட்டில் விளம்பரத்திற்குத்தான் அதிகம் செலவு செய்கிறார்கள். அதாவது அப்பொருளின் பெயர் பிராபல்யம் அடையச் செய்து விடுவார்கள். பிறகு அப்பொருளின் பெயர்தான் எங்கும் பேசப்படுகிறது. ஆதலால் அப் பொருள்தான் சிறந்தது என்று நம்பிக்கை உண்டாகும்படி செய்கிறது. ஒரு சோப்புக்காக சினிமா நட்சத்திரங்களின் படத்தைப் போட்டுவிடுவார்கள். ஆனால் அந்த சோப்பை அவர்கள் என்றும் உபயோகித்திருக்க மாட்டார்கள். 20 வருடங்களாக விளம்பரத் துறையில் உழன்று வருகிற எங்களுக்கு இந்த "உண்மைகள்" தெரியவருவதில் ஆச்சரியமில்லை அல்லவா?

குழந்தை உணவைப்பற்றி பிரசுரித்து அருகில் ஒரு அழகான, பருத்த குழந்தையின் உருவத்தை போட்டிருப்பார்கள். விளம்பர சூட்சுமத்தை அறிந்த இக்காலத்திலும்கூட அந்த உணவை நம் குழந்தைகளுக்குக் கொடுத்தால் தங்கள் மெலிந்த குழந்தையும் அப்படி ஆகிவிடுமென்று நினைத்து அந்த உணவை வாங்கிக் கொடுத்து வருபவர்கள் உண்டு.

'இந்த சப்பாத்தியை சாப்பிட்டால் சிங்கத்துடன் சண்டையிடலாம்' என்று ஒரு ஓவியம் தீட்டிக் கடை வாயிலில் வைத்திருக்கிறார் ஓர் சேட்ஜி. சென்னை வீதியில். அந்த சப்பாத்தியை தின்பதே காகித அட்டையை மெல்லுவது போல் இருக்கும். மேலும் அதைத் தின்று விட்டு சிறிய பையனைக் கூட எதிர்த்து நிற்க முடியாது. இம்மாதிரி விளம்பரங்கள் உண்மைக்குப் புறம்பானவை, தேவையற்றவை. மற்றொன்று: "போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள், எங்கள்கடைக்கு விஜயம் செய்க" என்று பிரசுரிப்பார்கள். அதாவது "போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள். எங்களிடம்........." என்றுதான் அர்த்தம் புரிந்து கொள்ளுவார்கள்.

இன்று மேனாட்டிலும், ஏன் நம்நாட்டிலும் ஒரு யௌவனப் பெண்மணி தன்னுடைய ஒரு மார்பகத்தைத் திறந்துகொண்டு சிரிப்பதுபோல் படம் போட்டு விளம்பரம் செய்திருப்பார்கள். எதற்கு? கீழ்க்கண்ட பொருள்களை விளம்பரப் படுத்த: கார்களுக்கு, சைகிள்களுக்கு, தலைக்கு தடவும் தைலத்திற்கு, காதில் அணியும் ஆபரணத்திற்கு, கெடியாரங்களுக்கு, பேனாக்களுக்கு,




POPULAR

**'HIS MASTER'S VOICE' *radio***

**Model 5114 : A.C.**

Rs 425

A unique 5-valve 3-waveband Table Receiver for A. C. Mains. Fitted with all-glass valves, edgelit scale with twin pointers and H. M. V. 10½ elliptical loudspeaker. Handsome cabinet finished in figured walnut.

"HIS MASTER'S VOICE"

*The Hallmark of Quality*

**The Gramophone Co., Ltd.**

Calcutta Bombay Delhi Madras

HRX 38

*With the best compliments*

*from*

**VICTOR X-RAY CORPORATION (INDIA) LTD.,**

THACKERSEY HOUSE, GRAHAM ROAD,

BALLARD ESTATE,

**BOMBAY.**

பிளேடுகளுக்கு இன்னும் அநேக சம்பந்தமற்ற பொருளுக்கு. சிறிது சிந்தித்துப் பாருங்கள். அம் மங்கைக்கும் மேற்சொன்ன பொருளுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா? ஏன் சினிமாவிலும் முக்கியமாக வட நாட்டிலிருந்து வரும் விளம்பரங்களனைத்தும், ஆபாசமான அரை ஆடையுடன் உள்ள அழகிகளைத்தான் கொண்டுள்ளன. நம் கருணையுள்ள சர்க்கார் தற்போது ஆபாசமற்றதும் அவசியமற்றதுமான காட்சிகளை சினிமாப் படங்களிலிருந்தும் தணிக்கை செய்து வருகிறார்கள். இவர்கள் கருணைகூர்ந்து சினிமாப் படத்தைப் பார்க்காமலேயே கீழ்த்தர உணர்ச்சியைத் தூண்டும் விளம்பரங்களையும் தணிக்கை செய்வார்களானால் அவர்களின் கடமை பூர்த்தியானது மாதிரி. அப்போதுதான் நாம் நம் நாட்டின் பண்பைக் காத்துக்கொள்வதாகும்.

இன்றய தினத்திலே விளம்பரக் கலைக்கு உயிர் கொடுத்து வருகின்ற ஓர் தமிழரைப்பற்றி நாங்கள் எழுதாவிடில் விளம்பரக் கலையைப்பற்றி எழுதியது முடிவு பெறாததாகும்.

கோடீஸ்வரர்களாக விளங்கும் வடநாட்டு வியாபாரிகள், ஏன், மேனாட்டாரும் கண்டு வியப்படைய, போட்டியிட முடியாமல் திகைக்கச் செய்வது ஜெமினி அதிபர் ஸ்ரீ எஸ். எஸ். வாசன் அவர்கள் செய்யும் விளம்பர முறைதான், அவரின் அறிவும் ஆற்றலும் தாம் தமிழ் நாட்டில் விளம்பரக்கலை ஓங்கியிருப்பதற்கு ஒரே காரணம். எங்களுடைய விளம்பரக் கலையை இன்று, வடநாட்டாரும், தென்னாட்டாரும், சிலோன், மலேயா முதலிய இடங்களிலுள்ளவர்களும் விரும்புவதற்குக் காரணம் அன்னாரின் வழியைப் பின்பற்றிய முறையே. ★



உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

எழுத்தாணி: திருவள்ளுவர். தூலிகை: பாலு சகோதரர்கள்.

# புதிய கலைமகள் வெளியீடுகள்.

## நாவல்கள்

| நூல் | | ஆசிரியர் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| கிரௌஞ்ச வதம் | — | வி. ஸ. காண்டேகர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. | 5 | 0 | 0 |
| வெண் முகில் | — | ,, ,, | 3 | 8 | 0 |
| கன்னிகாதானம் | — | பி. எம். கண்ணன் | 3 | 8 | 0 |
| கருகிய மொட்டு | — | வி. ஸ. காண்டேகர் (மூன்றும் பதிப்பு) | 3 | 8 | 0 |
| மணல் வீடு | — | 'அநுத்தமா' (ஆயிரம் ரூபாய் பரிசு நாவல்) | 3 | 0 | 0 |
| மயூரன் | — | தி. நா. சுப்பிரமணியன் | 2 | 0 | 0 |
| நெஞ்சின் அலைகள் | — | 'அகிலன்' | (அச்சில்) | | |
| லட்சியப் பெண் | — | சௌரீந்த்ர மோகன்: த. நா. ஸேனுபதி | ( ,, ) | | |

## சிறுகதைகள்

| நூல் | | ஆசிரியர் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| நல்ல பிசாசு | — | ஆனே சு. குஞ்சிதபாதம் | 2 | 8 | 0 |
| குங்குமச் சிமிழ் | — | 'ஆர்வி' | 2 | 0 | 0 |
| மோகினி | — | ந. பிச்சமூர்த்தி | 2 | 0 | 0 |
| கன்னியின் கனவு | — | க. சந்தானம் | 2 | 4 | 0 |

## விஞ்ஞானம்

| நூல் | | ஆசிரியர் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| அணுவின் கதை | | பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம் | 5 | 0 | 0 |

## நாடகம்

| நூல் | | ஆசிரியர் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| ராஜ சுந்தரி | — | தி. நா. சுப்பிரமணியன் | 0 | 12 | 0 |

## கட்டுரைகள்

| நூல் | | ஆசிரியர் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| பொழுது போக்கு | — | தி. ஜ. ர. | 2 | 4 | 0 |
| கலைக் கோவில் | — | த. கிருஷ்ணமூர்த்தி (பொது) | 1 | 0 | 0 |

**கலைமகள் வெளியீடுகளின் இலக்கிய மதிப்பே தனி.**

**கலைமகள், மஞ்சரி, கண்ணன் மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ 12/-**

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை 4.**

பம்பாய் ஏஜண்டு :

**சார் மாயா ஸ்டோர்ஸ்,**

ரெயில்வே ஸ்டேஷன் சமீபம்,

**மாதுங்கா (ஸி. ஆர்.)**



உங்கள் வீடுகளுக்கு

# பிளையோபாக்



நீங்கள் எப்பொழுதும் விரும்பும் மெத்தை இங்கிருக்கிறது. இதை பல விதமாக உபயோகிக்கலாம். பகலில் இதை மடித்து பலவித உருவங்களில் அழகான சோபாக்களாகச் செய்யலாம்.

இரவில் இதில் வெகுசுகமாகப் படுத்துறங்கலாம். பிளையோபோம் மெத்தைகள் படுத்துறங்குபவர்களின் அசைவுக்கேற்ப தன் நிலையை மாற்றிக் கொள்கிறது. பிளையோபோமில் பல நுண்ணியகாற்றுப்புகும் துவாரங்கள் இருப்பதால் படுப்பதற்கு மிககுளிர்ச்சியாயிருக்கிறது. அதனால் தான் சிறிதுநேரம் உறங்கினால் கூட உடல்வலி எல்லாம் மறைந்து விடுகிறது.







## பிளையோபோம்-மெத்தைகள் தயாரிப்பவர்கள்

உங்கள் அருகில் உள்ள பிளையோபோம் வியாபாரியிடம் கேளுங்கள்.

**குட்-இயர்**

மற்றொரு நம்பகமான குட்-இயர் தயாரிப்பு. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

GY/G/3

# SOUTH INDIAN FLOWER MERCHANT

## தென் இந்திய பூக்கடை

**B. THANGA THEVAR.**  பி. தங்க தேவர்.

NEAR MADRAS BRAHMIN'S COFFEE HOTEL,

BHANDARKAR ROAD,

**MATUNGA, BOMBAY - 19.**

# THE LAXMI COLLEGE OF COMMERCE

DADAR - BOMBAY 28.

ESTD. 1932

A front rank institution in the suburb of Bombay training candidates for responsible positions in the field of Commerce and Industry.

COURSES OFFERED :

I. Industrial Administration A. M. I. I. A. (Lond.).
II. Cost and Works Accountants—A. C. W. A. (Lond.), A. I. C. W. A.
III. Chartered Accountants--A. C. A.
IV. Railway Accountants--App. II and III.
V. Incorporated Secretaries—A. C. C. S. (Lond.)
VI. Bank Officers—C. A. I. I. B.
VII. Co-operative Auditors—G. D. C. and A.
VIII. Life Assurance Executives—Dip. L. A.
IX. Diplomas in Commerce—D. Com. (I. M. C.), etc.
X. Shorthand & Typewriting Certificate & Higher Certificate.

BRILLIANT RECORD OF RESULTS YEAR AFTER YEAR. HIGHLY QUALIFIED AND EXPERIENCED STAFF.
OUR MOTTO : THOROUGHNESS, EFFICIENCY & SUCCESS.

*Board of Management:*

R. S. RAMASWAMY IYER, M.A.,L.T., G.D.A., A.I.C.W.A. - *Director.*
R. S. V. IYER, A.C.A., F.C.W.A. (Lond,), A.M.I.I.A., (Lond.) Chartered Accountant - *Principal.*
R. S. SADASIVAN, B.SC., A.C.W.A. (Lond.) - *Vice-Principal.*
L. K. S. IYER, B.A., B.L., *Education Advisor.*

WITH 20 OTHER HIGHLY QUALIFIED MEMBERS IN THE TEACHIHG STAFF.

# *for Long-Time Satisfaction get a* MYERS WATER SYSTEM





RUNNING WATER in your home is a lasting comfort, one that you and every member of your family will use constantly, every day . . . for years and years. So, when you get a water system, get a Myers that will give you long years of satisfaction and trouble-free service — one that is backed by 70 years of pump-building experience.

Choose from our full line of these famous pumps and water systems. They are made for deep or shallow wells, and for operation by electricity, gas engine, windmill or hand power. They're ruggedly built units that you can count on to outlast ordinary cheap systems.



## Get this FREE BOOK!




Here is a complete story of modern Running Water Service. It answers dozens of questions you want to know about. Come in and get your free copy of this book. Also ask us to demonstrate the different types of Myers water systems for you and estimate your requirements.



*SOLE AGENTS:*

WATER SUPPLY SPECIALISTS LTD.,

8, Hamam Street, Fort, BOMBAY.

1WS-D1

Take Off Your Hat To The MYERS — PUMPS — WATER SYSTEMS — SPRAYERS — HAY TOOLS — DOOR HANGERS

**COME IN AND SEE US**

CODES
BENTLEY'S AND PRIVATE
A. B. C. 5th & 6th EDITIONS
ACME COMMODITY & PHRASE

Phone: 73315-73390
Telegrams: "DHATUBANA"

# METAL DISTRIBUTORS LIMITED

IMPORT
EXPORT
& SALES

ANTIMONY — BRASS
COPPER — CUPRO-NICKEL
GERMAN SILVER — LEAD
NICKEL — PHOSPHOR COPPER
ZINC — TIN

**INGOTS • SCRAP**

*Mg. Agents:*
MATHURADAS GOVARDHANDAS
12/18, VITHALBHAI PATEL ROAD, BOMBAY 4.

*Head Office*
Phones: Bank 1347-9. Telegrams: JAGATVYAPI
38, Strand Road, CALCUTTA 1.

# When the Temperature goes up!




**WALL OR CABIN FAN**

**Rs.150**

**TABLE FAN**

**Rs.150**

**And you just can't stick the heat any longer switch on your HINDUSTAN fan, and get the maximum of soothing coolness. There are TABLE, WALL, CABIN and PEDESTAL Fans (in two sizes 16″ and 14″) to choose from. A.C. only.**

**ON GOVERNMENT LIST.**

*Ask for Literature*

**The Acme MANUFACTURING COMPANY LIMITED**

ANTOP HILL, WADALA, BOMBAY 19.

Phone: 45217 Grams: "ACMERAY"

புதிய மகத்தான சரித்திரத் தொடர் கதை.




**காதல்** மாதப் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவருகிறது.

"காதல்" ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியன்றும், ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா எட்டு.

காதல் காரியாலயம், தியாகராயநகர் சென்னை - 17.

*Sole Distributors for Bombay:*

CHAR MAYA STORES,

(NEAR) RAILWAY STATION, MATUNGA G. I. P. **BOMBAY - 19.**



Be lovely
to be
Loved




Remy

**SNOW**

*SOLE DISTRIBUTORS:*

**A. V. R. A. & Co.**

6, Lohar Chawl, Bombay 2. 232, Angappa Naick Street, Madras 1.

# ONLY *Standard*

## builds so many types ...for so many purposes!

Standard Batteries Ltd. have the widest range of any manufacturer in India, with complete production of practically all elements in the same factory. Insist on a "Standard" when you need a battery for any use.




**AUTOMOBILE BATTERIES**
**TRACTOR BATTERIES**
**MOTOR CYCLE BATTERIES**
**RADIO BATTERIES**
**TRAIN-LIGHTING BATTERIES**
**DIESEL ENGINE STARTING BATTERIES**
**AIRCRAFT BATTERIES**
**TELEPHONE & TELEGRAPH BATTERIES**
**MARINE BATTERIES**
**...AND SPECIAL PURPOSE BATTERIES**

**STANDARD BATTERIES LTD., BOMBAY.**

GTB 7496

**There's a 'Standard' Battery for almost every battery use!**

*Distributors:*

**CHANDULAL MEHTA & Co. Ltd., New Queen's Road, Bombay.**
**RANE LTD., New Queen's Road, Bombay.**
**VORA BROTHERS, New Queen's Road, Bombay.**

*With the Compliments*

*of*

# MAHINDRA AND MAHINDRA LTD.

GATEWAY BUILDING, APOLLO BUNDER, BOMBAY.

*With the Compliments*

*of*

# MILLARS' TIMBER & TRADING CO., LTD.,

(INCORPORATED IN ENGLAND)

VICTORIA HOUSE, VICTORIA ROAD, BYCULLA, BOMBAY, 27.

JEWELS ANTIQUES

# GAZDAR LTD.

TAJ MAHAL HOTEL,

BOMBAY.

Tele: 35111. Telegrams: "MANUSCRIPT"




*Servant problem Solved!*

These stainless steel articles are so easy to clean!

THE ORIENTAL METAL PRESSING WORKS

BEHIND POST-OFFICE, WORLI, BOMBAY 18

Tel. Nos. 73401 & 73402

'Grams : 'HOLLOWWARE'

திருவாரூர் - விஜயபுரம், கருணாநிதி (மின்னியக்க) அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.




THE KHATAU MAKANJI SPINNING AND WEAVING COMPANY LTD.

MILLS: Byculla, Bombay, OFFICE: Laxmi Building, Ballard Pier, Bombay 1, CLOTH SHOP: Mulji Jetha Market, Govind Chowk, Bombay 2

WRAPPER PRINTED AT EASTERN PRINTERS, MADRAS-1